# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை:20/= பக்கங்கள்: 28 | சுடர் 32 | கதிர் 324 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 29 சனிக்கிழமை 15.10.2016


## கிணற்றில் பெருமளவு வெடிகுண்டுகள்



வவுனியா, ஒக். 15
மூன்றுமுறிப்பு தச்சனங்குளத்தில் நேற்றுப் பிற்பகல் 1.20 மணியளவில் கிணற்றிலிருந்து பெருமளவு வெடிகுண்டுகள் பக். 23

## பொருளாதார வலயம் அமைக்கும் பணிகள் 23இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.15
வவுனியா - மதகுவைத்தகுளத்தில் அமைக்கப்படவுள்ள பொருளாதார வலயத்துக்கான அடிக்கல் நாட்டு விழா எதிர்வரும் 23ஆம் திகதி கிராமிய பொருளாதார அமைச்சர் பி.ஹரிசன் தலைமையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் பொருளாதார வலயம் அமைக்க இந்த பக். 23



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நேற்று முற்பகல் 10 மணியளவில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து இழுக்கப் பக்தி பூர்வமாக இடம் பெற்றது. அரோகரா கோசம் வானைப் பிளக்க பக்தர்கள் ஆழ்வாரின் அருள் மழையில் நனைந்தனர். (த-109)

## மைத்திரி – ரணில் அவசரச் சந்திப்பு

அரசியல் பதற்ற நிலையை அடுத்து

கொழும்பு, ஒக். 15
கொழும்பு அரசியலில் பதற்றம் ஏற்பட்டிருக்கும் நிலையில் ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இரகசியமாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். பக். 23

## 820 ரூபா சம்பளத்துக்கு இணக்கம்

மலையகத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 820 ரூபாவை வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் இணங்கியுள்ளது என இலங்கைத் தொழிலாளர் பக். 23

## 1,262 பேர் ஒரே இரவில் மேல் மாகாணத்தில் கைது

கொழும்பு, ஒக். 15
மேல் மாகாணத்தில் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய ஆயிரத்து 262 பேர் கைது செய்யப்பட்டனர். பக். 23



## கைதிகள் விடுதலைக்கு கையெழுத்து வேட்டை

வவுனியாவில் பெருமளவு மக்கள் பங்கேற்பு

வவுனியா, ஒக். 15
அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம் நேற்று நடைபெற்றது. பெருமளவான பொதுமக்கள் பங்கெடுத்து இதில் பக். 23

# இராணுவப் புலனாய்வு அதிகாரி தற்கொலை

## லசந்தவைக் கொன்றவரா?

கொழும்பு, ஒக்ரோபர் 15
இராணுவப் புலனாய்வு முன்னாள் அதிகாரி ஒருவர் கேகாலையில் உள்ள தனது வீட்டில் தற்கொலை செய்துள்ளார். 'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவைத் தானே கொலை செய்தார் என்று கடிதம் ஒன்றை பக். 21

## படகில் வந்த 130கி.கஞ்சா

மாதகல் கரையில் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 15
130 கிலோ கிராமுடைய 34 கேரளக் கஞ்சா போதைப் பொதிகளை மாதகல் கடற்கரையில் நேற்றுக் காலை தாம் மீட்ட பக். 23

## முகமாலையில் சில பகுதிகள் நவம்பரில் விடுவிப்பு

கிளிநொச்சி, ஒக். 15
பளைப் பிரதேச செயலர் பிரிவில் முகமாலைப் பகுதியில் ஒரு சில இடங்களை அடுத்த மாதம் முதல் வாரமளவில் மக்களிடம் பக். 21

## மைத்திரிக்கு எதிராகச் சதி

எஸ்.பியின் கருத்து இது



கொழும்பு, ஒக். 15
ஜனாதிபதிக்கு எதிராகச் சூழ்ச்சி முன்னெடுக்கப்படுகின்றது. இதன் ஓர் அங்கமாகவே, பாது காப்பு அமைச்சுக்குத் தெரியாமல் முன்னாள் படைத் தளபதிகள் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். பக். 23

## சுன்னாகம் இளைஞர் சாவு

## பொறுப்பதிகாரி உட்பட 3 பொலிஸார் கைது

யாழ்ப்பாணம், ஒக். 15
சுன்னாகம் பொலிஸாரின் தடுப்புக் காவலில் இருந்த இளைஞனின் சாவு தொடர் பான வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 3 பொலிஸார் கைதுசெய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். மற்றொரு சந்தேக நபரான தமிழ்ப் பொலிஸார் நீதிமன்றில் நேற்றுச் சரணடைந்தார். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது. 2011ஆம் பக். 21

## மைத்திரியின் கோபம் ஆச்சரியமானதல்ல

அவரை நியாயப்படுத்தும் ஹெல உறுமய

கொழும்பு, ஒக். 15
ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களைக் கண்டறிந்து தண்டனை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனம் தனது கடமைகளை நிறை பக். 23

## ஆச்சரியம்! சிறப்பு

மைத்திரியின் கருத்துக்கள் தொடர்பில் மகிந்த ராஜபக்சவின் வெளிப்பாடு இது

கொழும்பு, ஒக். 15
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் காலம் தாழ்த்தியாவது உண்மை விளங்கியமை சிறப்பு. ஜனாதிபதி தெரிவித்த கருத்துத் தொடர்பில் நான் ஆச்சரியப்படுகின்றேன் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டார். குற்றப் புலனாய்வுப் பிரிவு, நிதி மோசடிப் பிரிவு மற்றும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு என்பன அரசியல்வாதி பக். 23

## மைத்திரிக்கு தொடர்ந்தும் கண்டனம்

முன்னாள் பாதுகாப் புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மீதான விசாரணைக்கு ஜனாதிபதி பக். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையகத் தொழிலாளருக்கு ஆதரவாக

# யாழ். பல்கலை மாணவர் திரண்டு கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15
மலையகத் தோட்ட தொழிலாளர்கள் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி முன்னெடுத்துவரும் போராட்டத்துக்கு ஆதரவாகவும், சம்பளத்தை அதிகரிக்குமாறும் வலியுறுத்தியும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக் குரல் எனும் தொனிப் பொருளில் இந்தக் கவனவீர்ப்பு இடம்பெற்றது. அதில் பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் இணைந்து ஆதரவளித்தது.

'அதிகரி அதிகரி தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரி', 'சுரண்டாதே சுரண்டாதே தொழிலாளர்களை சுரண்டாதே', 'பெருந்தோட்ட தொழிலாளர் சம்பள விடயத்தினை அரசியல் ஆக்காதே', 'தொழிற் சங்கப் போராட்டங்களை அரசியல் ஆக்காதே', 'கம்பனிகளே தொழிலாளர்களுக்குரிய வேதனத்தை வழங்கு', 'உயர்த்து உயர்த்து தொழிலாளர்களின்' வாழ்க்கைத் தரத்தை உயர்த்து போன்ற கோசங்களுடன்பதாகைகளைத்தாங்கியவாறு அவர்கள் கவனவீர்ப்பில்ஈடுபட்டனர்.

ஏராளமானோர் கலந்து கொண்ட இந்தக் கவனவீர்ப்பு சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டம் பல்கலைக்கழக வளாகமையப் பகுதியில் ஆரம்பித்து பிரதான வாசல் வரை பேரணியாகச் சென்று அங்கு கவனவீர்ப்புப் போராட்டம் நடந்தது.




இது தொடர்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் மற்றும் நலச்சேவைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தச் செயன்முறை ஒன்றரை வருடங்களைக் கடந்த நிலையில் எந்த விதமான நியாயமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. அவர்களது வருமானம், நிதி நிலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அவர்களது வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக் கழகங்களில் கல்வியைத் தொடரும் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பொருளாதார ரீதியான சிக்கலுக்கு முகங்கொடுத்துள்ளனர். உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறித்த கூட்டு ஒப்பந்தம் மூலம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற் சங்கங்கள் நியாயமான சம்பள உயர்வை பெற்றுக் கொடுப்பதோடு தொழி லாளர்களின் நலச்சேவை குடியிருப்புசார் வசதிகள், சுகாதாரம், தேயிலை மீள்நடுகை, கல்விசார் உதவிகள் என அனைத்து மட்டங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தில் தவிர்க்க முடியாத இடத்தை வகிக்கும் உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்கு முன்வரவேண்டும். கூட்டு ஒப்பந்தச் செயன்முறையில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் தொழிலாளர் நலன் பேணும் வகையில் செயற்படுவதுடன், தொழிலாளர் சம்பள உயர்வில் அரசு நேர்மையாகச் செயற்பட வேண்டும். தொழிலாளர் நலன் பேணப்படும்போதே மலையக சமூகமும் எழுச்சியடையும். இந்த நிலையில் மலையகத் தொழிலாளர் போராட்டத்துக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முழுமையான ஆதரவை வழங்குவதோடு தொழிலாளர்கள் நியாயமான கோரிக் கைகளுக்கு இன மத பேதமின்றி அனைவரும் குரல்கொடுக்க வேண்டும் - என்றுள்ளது. (த-4-101)

---



## இரு விபத்துகளில் இருவர் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 15
யாழ்ப்பாணத்தில் நேற்று வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாயில் நேற்று முற்பகல் 9 மணியளவில் பேருந்து மோதியதில் உரும்பிராய் பகுதியை சேர்ந்த தம்பிராஜா பாலேந்திரன் (வயது - 55) உயிரிழந்தார்.

யாழ்.அரியாலை மாம்பழச் சந்திக்கு அருகில் நேற்று மாலை 4 மணியளவில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதுண்டு மற்றொருவர் உயிரிழந்தார். நெடுந்தீவு தெற்கு, 15 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் பகீதரன் (வயது - 24) என்பவரே இதில் உயிரிழந்தார் என்று பொலிஸார் கூறினர்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக உடல்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-4-ரி7)

---

## கிழக்கு பல்கலை மாணவர் கைகலப்பு

*ஐவர் வைத்தியசாலையில்*

திருகோணமலை, ஒக். 15
கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாகச் சித்த மருத்துவ பீடத்தில் மாணவர்களுக்கிடையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த மோதலில் தமிழ் - சிங்கள-முஸ்லிம் மாணவர்கள் ஐவர் காயமடைந்து திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தீப்தி நுவன் (வயது-21), எச்.எம். டி.சன்னகஹேமந்த (வயது-22), புருசோத்தமன் (வயது-21), கிரிசாந் (வயது-22) முகம்மட் ஹாரிஸ் கான் (வயது-21) ஆகியோரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நிலாவெளிப் பொலிஸார் விசாரணை முன்னெடுத்துள்ளனர்.

'திருகோணமலை வளாகச் சித்த மருத்துவ பீட முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கு இடையே இந்த மோதல் நடந்துள்ளது. பல்கலைக்கழக விடுதியை முதலாம் வருட மாணவர்கள் கழுவியுள்ளனர். இதன் போது கழிவு நீர் இரண்டாம் வகுப்பு மாணவர்களின் விடுதிக்குள் சென்றுள்ளது. வாய்த் தர்க்கம் இதனால் மூண்டுள்ளது.

சிறிது நேரத்தில் அது கைகலப்பாக மாறியுள்ளது' என்று தமது முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-5)

---

தண்ணீர் கேட்டு போராடிய மக்கள் மீதான

# வெலிவேரிய தாக்குதல் ஒரு குற்றம்

### நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஒக். 15
கம்பகா மாவட்டம் ரத்துபஸ்வல பகுதியில் 2013ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் குற்றச் செயல் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.



மாவட்ட நீதிமன்ற நீதிவான் கவின்யா நாணயக்கார நேற்று இதனைத் தெரிவித்துள்ளார்.

2013ஆம் ஆண்டு ரத்துபஸ்வல வெலிவேரிய சந்தியில் சுத்தமான குடிதண்ணீர் கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் மூவர் உயிரிழந்தனர். இருவர் துப்பாக்கிச் சூட்டிலும் ஒருவர் தட்டையான ஆயுதத்தால் தாக்கப்பட்டும் உயிரிழந்திருந்தனர்.

இந்தச் சம்பவத்தைக் குற்றச் செயல் என்று தெரிவித்துள்ள நீதிவான், வழக்கினை ஜனவரி மாதம் 20ஆம் திகதி விசாரணைக்கு ஒத்திவைத்தார். (உ-5)

---

# உங்கள் பிள்ளைகளுக்கும் பொலிஸ் சீருடைகளை அணிவிப்பதே என் விருப்பம்

### யாழ்ப்பாணத்தில் கூறினார் பூஜித



உங்கள் பிள்ளைகளும் பொலிஸ் சீருடை அணிந்து செயல்பட வேண்டும் என்பதே எனது விருப்பம். இவ்வாறு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித் தார்.

150 ஆவது பொலிஸ் தினத்தினை முன்னிட்டு மாகாண மட்ட நிகழ்வுகளின் முதல் நிகழ்வு நேற்றைய தினம் யாழில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:-

உங்கள் பிள்ளைகளும் பொலிஸ் சீருடை அணிந்து செயல்பட வேண்டும் என்பதே எனது விருப்பம். பொலிஸார், [illegible] வும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றுகின்றனர்.

நீங்கள் விரும்பிய தாய் மொழியில் பொலிஸ் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கில் சிறந்த பணியாற்றிய பொலிஸாருக்கும், பொலிஸ் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தினையும், யாழ். மாவட்டத்தில் முதலிடத்தையும் பெற்ற மாணவி ஜயணிக்கும் நினைவுப் பரிசில் வழங்கி கௌரவிக்கப் பட்டது. (த-5-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INTERNATIONAL COLLEGE OF BUSINESS & TECHNOLOGY

ICBT

# ICBT CAMPUS JAFFNA

யாழ்.மண்ணில் இருந்தவாறு சர்வதேச தரத்திலான
பட்டம் ஒன்றைப் பெறும் உங்கள் கனவை நனவாக்குங்கள்

## SOFTWARE ENGINEERING / IT
## CIVIL ENGINEERING
## QUANTITY SURVERING
## BUSINESS MANAGEMENT

சகல வசதிகளுடனும், முற்றுமுழுதான பல்கலைக்கழக சுற்றாடலில் பட்டப்படிப்பை கற்கக்கூடிய ஒரு கல்விக்கூடம் தற்போது யாழ்.மண்ணில்....

A/L, O/L பரீட்சை முடித்தவர்கள் தங்கள் பொன்னான காலத்தையும் வயதையும் வீணடிக்காமல், மூன்று வருடங்களில் ஒரு பிரித்தானிய பட்டதாரியாகக்கூடிய சந்தர்ப்பத்தை யாழ். மண்ணில் உங்களுக்கு வழங்குகின்றது ICBT.

# 077 074 6553

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவர் நிலத்தில் விளையும் நெல் பூநகரியில் 72 விவசாயிகளுக்கு

யாழ்ப்பாணம் ஒக்.15
கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினரால் ஆய்வு செய்யப்பட்ட உவர்நிலத்தில்பயிரிடக்கூடிய நெல்லினம் நேற்று முன்தினம் பிர தேசத்தைச் சேர்ந்த 72 பயனாளிகளுக்கு முழங்காவில் கமநல சேவைகள் நிலை யத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் அனு சரணையுடன் கிளிநொச்சிப் பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலை யத்தினால் பூநகரிப் பிரதேசத்துக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட கிராமங் களில் மேற்கொள்ளப்பட்ட 150 மண் மற் றும் நீர் மாதிரிகளின் தரவுகளின் அடிப்படையில் உவரின் தாக்கம் இந்தப் பிரதேசங்களில் இருப்பது விஞ்ஞான ரீதி யில் கண்டறியப்பட்டுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தில் கரியாலை நாகபடுவான் பிரதேசத்தில் 2016 சிறு போகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 பயனா ளிகளுக்கு பிஜி 369 என்னும் புதிய நெல் லினம் வழங்கிப் பரீட்சிக்கப்பட்டது. அவர் களில் இருவரின் உற்பத்திகள் அழிந்து போக மூவரினால் உற்பத்தியாக்கப்பட்ட 22 புசல் நெல் விவசாயத் திணைக்களத்தி னால் கொள்வனவு செய்யப்பட்டது. மேல திகமாக 52 புசல் பிஜி 369 விதைநெல் விதை நடுகைப்பொருள் பிரிவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு 72 பய னாளிகளுக்கு நேற்று முன்தினம் வழங் கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்லாறு, ஆனையிறவு, தட்டுவன்கொட்டி போன்ற கிராமங்கள் உவர்த்தன்மை கொண்ட வையாக அடையாளம் காணப்பட்டுள் ளன.

தற்போது விதைநெல் வழங்கப்பட்டுள்ள 72 பயனாளிகளிடம் இருந்து உற்பத்தி கள் பெறப்பட்டு அடுத்த கட்டமாக அதி களவான பயனாளிகளுக்கு வழங்கி இந்தத் திட்டத்தை மேலும் வலுப்படுத்த வுள்ளதாகக் கமநல சேவைத் திணைக் களத்தினர் தெரிவித்தனர். (த-ரி3)




## மாயவா!

கார் இருட்டினுள்ளும் கடும் மழையினிலும்
நடுக் கடலினிலே கரைக்கொரு தெப்பமாகி
திக்கறியாக் காட்டினுள்ளும் திகைக்க வைக்கும்
விலங்குமுன்னும் கையில் ஒரு
- வில்லோடு ஊர் ஏகும் தெருவாகி

கொடி அறுந்த கறம்பதற்கு நெடியதொரு கொடியாகி
கொடி படர மாமரமாகும் மாயவா!
ஈரேழு பிறப்பெதனில் உன் கடன் தீரும், தீரா
நிலைவரின் எனை உன் மீளா திருவடி
- சிறையில் வைப்பாயே!

உளதென்றும் இலதென்றும் உளதொன்று உளது
இலதென்றும் உளதென்றும் வாதங்கள் சமவலிது
இலது இலது உளதென்பார்க்கு இடுக்கண்
இலது இலது அஃதிலார்க்கு அஃது

- சடாதரன்

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

01. பாலசிங்கம் முருகரவி
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி தற்போது
UNTER WORBEN, ST5 3252,
WORBEN, SWITZERLAND.
தனது தத்துவக்காரன் முருகேசு
பாலசிங்கம் மூலம் தோற்றம்.
முருகேசு பாலசிங்கம்.
மட்டுவில் வடக்கு, சந்திரபுரம்,
சாவகச்சேரி.
02. முருகேசு பாலசிங்கமும்.
03. பெண் சந்திரபாக்கியமும்.
இருவரும் மட்டுவில் வடக்கு, சந்திரபுரம்,
சாவகச்சேரி.
- வழக்காளிகள்

வழக்கு இல:
நம்பிக்கைச் சொத்து/11/2014

எதிராக

01. இராசதுரை வசந்தன்,
02. வசந்தன் சுமதி.
இருவரும் மட்டுவில் வடக்கு, சந்திரபுரம்,
சாவகச்சேரி.
- எதிராளிகள்

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளிகள் மட்டுவில் வடக்கில் எழுந்தருளியிருக்கும் நரசிங்க வைரவர் கோயிலின் பரிபாலனம் தொடர் பாக பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறுவதற்கு மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிகளுக்கெதிராக இந் நீதிமன்றில் வழக்கு தொடர்ந் துள்ளனராகையால் **குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை பிரிவு 16 இன் கீழ்** இந்த விடயத்தில் அக்கறையுள்ள சகலரையும் இந்த விடயத்தில் பங்குகொண்டு இப் பிணக்கை இம் மன்று தீர்த்து வைக்கக் கோரி மறுமொழி ஏதேனும் இருப்பின் **2016 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 21 ஆம் நாளன்று** அல்லது அதற்கு முன்னர் இந் நீதிமன்றத்தில் கோப்பிடும் படி இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி
2016 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13 ஆம் திகதி
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
சாவகச்சேரி.

வரைவு:
வழக்காளிகளின் சட்டத்தரணி.

## சிறுவர்தின நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.15
நாரந்தனை கல்வி நிலையத்தில் சிறுவர்தின நிகழ்வும் ஆசிரியர்தின நிகழ்வும் இன்று காலை 9 மணிக்கு நடைபெற வுள்ளது.

கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மு.சத்தியசீலனும், சிறப்புவிருந்தினராக ஊர்காவற்றுறை பிர தேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத் தர் திருமதி பிருந்தா இந்திரகுமாரும் கலந்துகொள்ளவுள் ளனர். (த)

## உத்தரவை மதிக்காத மாணவன் சீர்திருத்தத்துக்காக ஹோமகமவுக்கு

தென்மராட்சி, ஒக்.15
நீதிமன்ற உத்தரவை மதிக் காத மாணவனை ஹோம கம இளங்குற்றவாளிகள் சீர் திருத்தப் பாடசாலையில் 3 வரு டங்கள் தங்க வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

பாடசாலையிலிருந்து இடை விலகிய மாணவன் கடந்த மே மாதம் மிருசுவிலில் உள்ள அலைபேசி விற்பனை நிலை யத்தில் அலைபேசி திருடி யமைக்காகக் கைது செய்யப் பட்டு நீதிமன்றில் முற்படுத்தப் பட்டபோது அச்சுவேலியில் உள்ள சான்று பெற்ற பாட சாலையில் ஒப்படைக்குமாறு நீதிமன்றால் உத்தரவிடப் பட்டது.

இந்தமாணவனின்நடவடிக்கை கள் குறித்து அதிருப்தி தெரி வித்த சான்று பெற்ற பாட சாலை அதிபர் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்த தையடுத்து பெற்றோர் தமது பாதுகாப்பில் அழைத்துச் சென்றனர். மீண்டும் மாண வன் ஆடுகள் திருட்டு மற்றும் மோதல் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்ததால் இவ ருக்கு எதிரான வழக்கு நேற்றுச் சாவகச்சேரி நீதிமன்றில் விசா ரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்து மாண வனைக் கடுமையாக எச் சரிக்கை செய்த நீதிவான் ஹோமகம இளங்குற்ற வாளிகள் சீர்திருத்தப் பயிற்சிப் பாடசாலையில் 3 வருடங்கள் தங்கியிருப்பதற்குசிறைச்சாலை கள் ஆணையாளர் ஊடாக அனுப்பி வைக்குமாறு உத்தர விட்டார். (த- 9)

## அட்டோர்னி தத்துவ அதிகாரத்தை இரத்துச் செய்தல்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் தற்போது சர்ரே, ஐக்கிய இராச்சியத்தில் வசிப்பவருமான புஷ்பமணி தம்பித்துரை ஆகிய நான் 16.04.2012 திகதியிடப்பட்ட ஹோன்ஸ்லோ, லண்டன், ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த சொலிசிற்றர் வை.விஜயபாலன் முன்னிலையில் என்னால் நிறைவேற்றப் பட்டு எனது அட்டோர்னி தத்துவக்காரராக 104/5 அத்தியடி குறுக்கு வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த திரு.சுப்பிரமணியம் ஞானசேகரம் என்பவருக்கு வழங்கப்பட்ட அட்டோர்னி தத்துவத்தை மீளப்பெற்று இரத் துச் செய்கிறேன் என்பதையும் இதன்பின்னர் என் சார்பில் இவரால் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளி அல்ல என்பதையும் இத்தால் பொதுமக்க ளுக்கு அறியத் தருகின்றேன்.

- புஷ்பமணி தம்பித்துரை-

**வேலைக்கு ஆள்தேவை**
யாழ்.நகரில் இயங்கும் கடை ஒன்றுக்கு வேலைக்கு ஆள் தேவை. இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
021 222 8345

**வாடகைக்குண்டு**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் 3 மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு.
அரச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது.
076 575 5267

**கடைகள் விற்பனைக்கு**
அச்சுவேலி பஸ் நிலைய வல்லை வீதியில் தொடர் நான்கு கடைகள் (பழைய அஞ்சல் அலுவலகம் இருந்த கட்டடம்) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 2228959

**தேவை**
முள்ளியவளை தண்ணீரூற்றில் அமைந்துள்ள காரியாலயம் ஒன்றிற்கு தகைமையுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.
தொடர்பு - 077 025 6640

**விதைநெல் விற்பனைக்கு**
விவசாயத் திணைக்களத்தினால் சுத்திகரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட 95 வீத முளைத் திறனுடைய B.G 406 ரக விதை நெல் அத்தாட்சிப் பத்திரத்துடன் விற்பனைக்கு உண்டு.
077 659 2044

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தியில் $19\frac{1}{4}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வியாபார நிலையம் அமைப்பதற்கு, தொழிற்சாலை அமைப் பதற்கு அல்லது விவசாயம் செய்வதற்குப் பொருத்தமான காணி ஆகும்.
071 410 2174

**மணமக்கள் தேவை**
*1992இல் பிறந்த 12இல் சூரியனும், செவ்வா யும் $22\frac{3}{4}$, பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமை பெற்றுள்ள மணமகளுக்கு உள்நாட்டில் பட்ட தாரி மணமகன் தேவை. ஆங்கில அறிவு முக்கியம்.
*1985இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் $13\frac{1}{4}$ பாவமுடைய BSc Bio முடித்து லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு லண்ட னில் BSc இற்கு மேல் படித்த மணமகன் தேவை.
*1986இல் பிறந்த 4இல் செவ்வாய் 32 பாவ முடைய ஜேர்மனி சிற்றிசன் கிடைத்த மணமக ளுக்கு ஜேர்மனியில் படித்த மணமகன் தேவை.
*1985இல் பிறந்த 8இல் சூரியனும் செவ்வா யும் 40 பாவமுடைய MSc இஞ்சினியர் மண மகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1981 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் $15\frac{1}{2}$ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்றுவந்துள்ள மணமகனுக்குப் படித்த மண மகள் தேவை.
*1986இல் பிறந்த 8இல் செவ்வாய் $92\frac{3}{4}$ பாவ முடைய BSc, MSc QS கட்டாரில் பணிபுரியும் மணமகனுக்கு IT CIMA மணமகள் தேவை.
கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி,
முடமாவடி- 077 607 0862

**பணியாள்கள் தேவை**
புதூர்ச்சந்தி/ புளியங்குளம் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும்
மாட்டுப் பண்ணையில் பின்வரும் வேலைவாய்ப்புக்கள் உள்ளன
- ★ மாடுகள் பராமரிப்பாளர்கள்
- ★ தோட்டவேலைகள் செய்யக் கூடியவர்கள்

குறிப்பு: முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
உணவு / தங்குமிட வசதிகளும் உள்ளன
தொடர்புக்கு அழையுங்கள்
(சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்)
075 837 7583

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. வைத்தியசாலையில் இளம் பெண் மர்மச் சாவு

## கூட்டி வந்தவர் தலைமறைவு

மட்டக்களப்பு, ஒக் 15

மயக்கமுற்ற நிலையில் நேற்றுமுன் தினம் இரவு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட இளம் பெண்ணொருவர் உயிரிழந்தார், அந்தப் பெண்ணைக் கூட்டி வந்த நபர் தலைமறைவாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.நேற்றுமுன்தினம் இரவு களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையிலிருந்து மட்டக் களப்புப் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட பானு (வயது-27) எனும் இரண்டு பிள்ளைகளின் தாயான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்தப் பெண்ணை மருந்து, மாத்திரைகள் விற்பனை செய்யும் முகவரான மலையகத் தைச் சேர்ந்த ஒருவரே தனது காரில் கொண்டு வந்து களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண் உடல் நிலை மோசமானதை அடுத்து மேலதிக சிகிச்சைகளுக்காக அம்புலன்ஸ் மூலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சற்று நேரத்தில் அவர் உயிரிழந்துவிட்டார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பெண் உயிரிழந்த நிலையில் அவரைக் கூட்டிவந்த குறித்த நபர் தலைமறைவானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவரது கார் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் கைவிடப்பட்டிருந்த நிலையில் நேற்று அங்கு சென்ற மட்டக்களப்பு பொலிஸார் தடயங்களைச் சேகரித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், தலைமறைவான நபரைத் தேடி வருகின்றனர். (த)

# கடற்படை வசமுள்ள வீடுகள் விடுவிக்கப்படவேண்டும்

## நெடுந்தீவுப் பிரதேச மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 15

கடற்படையினரின் ஆக்கிரமிப்பிலுள்ள சனசமூக நிலையத்தையும், வீடுகளையும் விடுவித்துத் தருமாறு நெடுந்தீவுப் பிரதேச மக்கள், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தனர்.

நெடுந்தீவுப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த புதன் கிழமை நடைபெற்றது. இதன்போதே மேற்படி கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

சன சமூக நிலையமானது கடந்த 15 ஆண்டுகளாக கடற்படையினரின் பிடியில் உள்ளது. தீவில் உள்ள ஒரேயொரு சன சமூக நிலையம் இதுவாகும். நெடுந்தீவு இறங்குதுறைக்கு அண்மையில் உள்ள 25இற்கும் மேற்பட்ட வீடுகளையும் பயன்மிகு காணிகளையும் கடற்படையினர் அபகரித்து வைத்துள்ளனர். இதன் உரிமையாளர்கள் இன்றும் நெடுந்தீவிலும், யாழ். நகரிலும் உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலுமே வாழ்கின்றனர். இவற்றைக் கடற்படையினர் விடுவிக்கவேண்டும். சனசமூக நிலையத்தின் புத்தகங்கள் ஓர் அறையில் 9 அலுமாரிகளில் வைத்து பூட்டிய நிலையில் பாவனை இன்றிக் கிடக்கின்றன. மாகாண சபை உறுப்பினர் ஒருவர் அண்மையில் தனது ஒதுக்கீட்டில் 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கியிருந்தார். சன சமூக நிலையத்தினை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வட மாகாண முதலமைச்சர் மற்றும் ஆளுநருக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன. இருப்பினும் பயன் கிடைக்கவில்லை. இதேபோல் காங்கேசன்துறை கடற்படை அதிகாரியின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டும் பயன் இல்லை. இதற்கு உரிய தீர்வு காணப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

பிரதேச செயலர், ஜனாதிபதியின் கவனத்துக்கு கடிதம் மூலம் மேற்படி விடயத்தைத் தெரியப்படுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. (த-5-10)

# ஆங்கில தின விழா

சாவகச்சேரி ஒக் 15

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆங்கில தின விழா நிகழ்வுகள் நாளைமறுதினம் 17 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

கல்லூரியின் அதிபர் ந. ஜெயகுமாரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், சிறப்பு விருந்தினராக ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி திருக்குமரன், கௌரவ விருந்தினராக ஆங்கிலப் பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ்.சிறிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி2 -108)

## அபிஷேக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.15

இந்துசமய பேரவையின் கந்தர்மடம் ஸ்ரீசிவகாம சுந்தரி சமேத நடராஜர் கோயிலில் புரட்டாதி மாத நடேசர் அபிஷேக நிகழ்வு இன்றுபிப 2. மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வைத் தொடர்ந்து பண்ணிசைக் கச்சேரி, நடராஜப் பெருமான் தரிசனம் என்பன இடம் பெறும் என நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (த)

# அதிக விளைச்சலுக்கு விதை அத்தாட்சிப்படுத்தல்

*மாவட்ட விதை அத்தாட்சிப்படுத்தல் நிலையப் பொறுப்பதிகாரி தகவல்*

அச்சுவேலி, ஒக். 15

விவசாயிகள் விதை நெல் மற்றும் நடுகை செய்யும் விதைகளை, விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய நிலையத்தில் அத்தாட்சிப்படுத்தியும் அதனைத் துப்புரவு செய்தும் நடுகை செய்வது உற்பத்தி செலவினங்களைக் குறைக்கும்.அத்துடன் ஆகக்கூடிய விளைச்சலையும் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு யாழ். மாவட்ட விதை அத்தாட்சிப்படுத்தல் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ரமணிதரன் தெரிவித்தார். யாழ். மாவட்ட விதை அத்தாட்சிப்படுத்தல் நிலையம் யாழ்ப்பாணம் -பருத்தித்துறை முதன்மை வீதியில் (கோப்பாய் பூதர் மடம் சந்தியில் கோப்பாய்ப் பிரதேச செயலகத்துக்கு அண்மையில்) அமைந்துள்ளது. விதை அத் தாட்சிப்படுத்தல் மற்றும் சுத்திகரிப்பின் அவசியம் தொடர்பாக அத்தாட்சிப்படுத்தல் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தகவல் தெரிவிக்கையில்:

எமது பிரதேச விவசாயிகள் மரபு வழியாக விதை நெல்லை தமது வீடுகளில் களஞ்சியப்படுத்திவைத்தே பயன்படுத்துகின்றனர். நீண்ட காலத்துக்கு விதை நெல்லை வீடுகளில் வைத்திருக்கும் போது விதை நெல் பூச்சித் தாக்கங்களுக்கு உள்ளாகிச் சேதமாகின்றது.

விதை நெல்லைச் சுத்திகரிக்கும்போது சேதமடைந்து பூச்சிகளின் தாக்கங்களுக்கு உள்ளாகிய நெல்லும் புல் விதைகளும் முற்றாக அகற்றப்படுகின்றன. திருநெல்வேலியில் உள்ள விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்துடன் (சீக்கோ) தொடர்பு கொண்டு விதை நெல்லை சுத்திகரித்துக் கொள்ளலாம். விதைகளின் முளைதிறன் தொடர்பான அத்தாட்சிப் படுத்தலைக் கோப்பாயில் அமைந்துள்ள பிராந்திய விதை அத்தாட்சிப் படுத்தல் நிலையத்துடன் தொடர்பு கொண்டு அத்தாட்சிப் படுத்திக் கொள்ளலாம்.

விதை அத்தாட்சிப் படுத்தலுக்கு வரும்போது பயன்படுத் தப்படவிருக்கும் விதைகள் முழுவதையும் எடுத்துவர வேண்டும்.

முளை திறன் தொடர்பான அத்தாட்சிப்படுத்தலுக்கு 172 ரூபா கட்டணமாகச் செலுத்தியும் முளை திறன் மற்றும் தரநிலை தொடர்பான முழுமையான அத்தாட்சிப்படுத்தலுக்கு 345 ரூபா கட்டணமாகச் செலுத்தி அத்தாட்சிப்படுத்திக் கொள்ளலாம். அத்தாட்சிப்படுத்தல் தொடர்பான பத்திரம் வழங்கப்படும்- என்றார். (த-5-11)

# உலக அஞ்சல் தின நிகழ்வுகள் முல்லைத்தீவில்

வடக்கு மாகாணத்துக்கான 142 ஆவது உலக அஞ்சல் தின நிகழ்வுகள் முல்லைத் தீவில் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

பிரதி அஞ்சல் மா அதிபர் என்.இரத்தின சிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த அஞ்சல் தின நிகழ்வில் தபால்மா அதிபர் டி.எல்.பி.ஆர். அபயரெட்ண முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறந்த அஞ்சல் பணியாளர்கள், அஞ்சல் அலுவலகங்கள், உப அஞ்சல் அலு வலகங்கள் என்பனவற்றுக்குச் சிறப்புப் பரிசுகள் இந்த நிகழ்வில் வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் வடக்கில் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த தபாலகப் பணியாளர்கள், அதிகாரிகள் கலந்து கொள்வர். கடந்த ஆண்டு உலக அஞ்சல் தின நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்டன.

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு வடக்கில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் அஞ்சல் தின நிகழ்வு[illegible]றன. சிரமதானம், [illegible] கண்காட்சி மற்றும் குருதித்தானம் வழங்கல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன. (த-17)

LOLC MICRO CREDIT LIMITED

மாபெரும் வாகன விற்பனை

2016 ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை
புகையிரத நிலைய வீதி, வைரவப்புளியங்குளம் - வவுனியா
மு.ப. 10.00 மணியிலிருந்து....

| | | | |
|---|---|---|---|
| **நாற்சில்லு டெக்டர்** | | | |
| John deere 5047D | 2900CC | 2012 | NP RD XXXX |
| Mahindra 575DI | 2523CC | 2011 | NP RC XXXX |
| Tafe 45DI | 2500CC | 2012 | NP RD XXXX |
| Tafe 45DI | 2500CC | 2011 | UP RC XXXX |
| Tafe 45DI | 2500CC | 2013 | EP RD XXXX |
| Tafe 45DI | 2500CC | 2013 | NC RD XXXX |
| Tafe 45DI | 2500CC | 2015 | NP RE XXXX |
| **ஹாவெஸ்ரர்** | | | |
| Agrotech COMBINE | 6540CC | 2012 | XXXXXXXX |
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| Bajaj Discover | 145CC | 2015 | NP BCM XXXX |
| Bajaj Pulsar | 149CC | 2015 | NP BBY XXXX |
| Bajaj Pulsar | 149CC | 2015 | NP BCD XXXX |
| Bajaj Pulsar | 150CC | 2013 | NP BAN XXXX |
| Bajaj Pulsar | 150CC | 2014 | NP BBP XXXX |
| Hero DAWN | 100CC | 2015 | NP BCU XXXX |
| Hero DELUXE | 98CC | 2014 | NP BBQ XXXX |
| Hero DELUXE | 97CC | 2015 | NP BDE XXXX |
| Hero GLAMOUR | 125CC | 2014 | NP BBJ XXXX |
| Hero GLAMOUR | 125CC | 2014 | NP BAU XXXX |
| Hero GLAMOUR | 125CC | 2015 | NP BCZ XXXX |
| Hero HF DELUXE | 100CC | 2014 | NP BBX XXXX |
| Hero HF DELUXE | 100CC | 2013 | NP BCH XXXX |
| Hero HF DELUXE | 100CC | 2014 | NP BBX XXXX |
| Hero HF DELUXE | 97CC | 2015 | NP BCK XXXX |
| Hero Fashion Pro | 100CC | 2012 | NP BBP XXXX |
| Hero Fashion Pro | 100CC | 2015 | NP BCV XXXX |
| Hero Pulsar | 100CC | 2013 | NC BAP XXXX |
| Hero Pulsar | 100CC | 2014 | NP BBM XXXX |
| Hero SPLENDOR | 100CC | 2014 | NP BDD XXXX |
| Hero SPLENDOR | 98CC | 2014 | CP BCF XXXX |
| Hero SPLENDOR | 98CC | 2014 | NP BCE XXXX |
| Hero ACTIVA | 109CC | 2013 | NP BCI XXXX |
| Honda Dio | 109CC | 2014 | NC BCA XXXX |
| Honda Dio | 110CC | 2015 | NP BCJ XXXX |
| Honda Dio | 110CC | 2015 | NC BCJ XXXX |
| Honda STUNNER | 125CC | 2014 | NP BCA XXXX |
| Honda TRIGGER | 149CC | 2014 | NP BBW XXXX |
| Honda TRIGGER | 150CC | 2015 | NP BCO XXXX |

| | | | |
|---|---|---|---|
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| Honda UNICORN | 150CC | 2013 | NP BBN XXXX |
| Mahindra CENTHRO | 110CC | 2013 | NC BAY XXXX |
| TVS Metro PLUS | 110CC | 2014 | NP BBV XXXX |
| TVS Scooty PEP | 90CC | 2012 | NP XS XXXX |
| TVS XL HD 70CC | 70CC | 2015 | NP BCV XXXX |
| Wego TVS | 110CC | 2014 | NP BBL XXXX |
| Yamaha ALPHA | 113CC | 2014 | NP BBT XXXX |
| Yamaha ALPHA | 113CC | 2015 | NC BDD XXXX |
| Yamaha FZS | 153CC | 2014 | NP BCC XXXX |
| Yamaha RAY-Z | 114CC | 2015 | NC BDC XXXX |
| **முச்சக்கர வண்டி** | | | |
| Bajaj | 173CC | 2007 | NC QM XXXX |
| Bajaj | 173CC | 2008 | NP QP XXXX |
| Bajaj | 174CC | 2010 | NP YA XXXX |
| Bajaj | 199CC | 2011 | NP YM XXXX |
| Bajaj | 199CC | 2012 | NP YZ XXXX |
| Piaggio | 395CC | 2014 | NC AAR XXXX |
| TVS King | 200CC | 2015 | NP ABH XXXX |
| TVS King | 200CC | 2014 | NC AAU XXXX |
| **ட்ரக்** | | | |
| Mahindra Bolero Maxi | 2523CC | 2011 | NP PQ XXXX |
| Mahindra Bolero Maxi | 2523CC | 2014 | NP PX XXXX |
| Mahindra Maximo | 909CC | 2012 | NC PU XXXX |
| Mahindra Maximo | 909CC | 2012 | NP PU XXXX |
| Mahindra Maximo | 909CC | 2012 | NP PS XXXX |
| Maximo PLUS VX 2WD | 909CC | 2015 | NP DAA XXXX |
| Tata Ace | 702CC | 2010 | NP PP XXXX |
| Tata Ace | 702CC | 2010 | NP PP XXXX |
| Tata Ace | 702CC | 2010 | NP PP XXXX |
| Tata Ace | 702CC | 2013 | WP PW XXXX |
| Tata Ace | 702CC | 2013 | NP PW XXXX |
| Tata Ace | 702CC | 2014 | NP PX XXXX |
| Tata Super Ace | 1405CC | 2012 | NP PS XXXX |
| Tata Super Ace | 1405CC | 2014 | NP PX XXXX |
| Tata Super Ace | 1405CC | 2015 | NP DAB XXXX |
| **இரு சில்லு டெக்டர்** | | | |
| Sifang GN 12 | 815CC | 2011 | NC SK XXXX |
| Sifang GN 12 | 815CC | 2013 | NC SM XXXX |
| Vikyno RV 125 | 624CC | 2014 | NC SN XXXX |
| **வான்** | | | |
| Mazda | 2950CC | 1995 | NC GV XXXX |

**விற்பனை நிபந்தனைகள்:**

பரிசோதித்தல் 2016 ஒக்டோபர் 16ஆம் திகதி ஞாயிறு. 17- திங்கள் மற்றும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாள்களில் மு.ப. 9.00 மணிதொடக்கம் பி.ப 5.00 மணிவரை

★ விற்பனை தினத்தில் நுழைவுக்கட்டணமாக 500/= மற்றும் மீளப்பெற முடியாத டிக்கட் மூலமான முற்பதிவு கட்டணமாக 5000/= அறவிடப்படும்.

★ செலுத்த வேண்டிய தொகையில் மீளப்பெறமுடியாத 25% காசு மூலம் செலுத்துவதுடன் மிகுதி 75% வவுனியா 2 ஆம் குறுக்குத்தெரு இலக்கம் 45/A. எனும் இடத்தில் அமைந்திருக்கும் LOLC Micro Credit Limited நிறுவனத்தில் செலுத்துவதுடன் வாகனத்தை விலக்கிக் கொள்வதற்கு 2016 ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு முதல் செய்துகொள்ளல் வேண்டும்.

★ முன்னறிவித்தல் இன்றி விற்பனையில் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக்கொள்ளும் உரிமை முகாமையாளருக்கு மட்டுமே உண்டு.

விற்பனையாளரின் முடிவே இறுதி முடிவு ஆகும்.

**சொக்மன் மற்றும் சமரவிக்ரம**

ஒரே நாடு ஒரே விற்பனையாளர் 124 வருடங்களையும் கடந்து வெற்றிநடைபோடுகிறது.

பிரதான அலுவலகம்
இல.24, டொரிங்டன் வீதி,
கண்டி.
தொ.பே: 081 2227593,
பெக்ஸ்: 081 2224371
ஈமெயில்: schokmankandy@sltnet.lk

நகர கிளையும் காட்சியறையும்:
இல.290, ஹெவ்லொக் வீதி,
கொழும்பு-05.
தொ.பே: 2502680, 2585408
பெக்ஸ்: 011-2588176
ஈமெயில்: schokman@samera1892.com

இணையதளம்: www.sandslanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோழிக்குஞ்சு விநியோகம்**

No-1 நெல்பாம் (Nel Farm)
முட்டைக்கோழிக்குஞ்சு (வெள்ளை)
18.10.2016 விநியோகிக்கப்படும்.
சங்கரத்தை, வட்டுக்கோட்டை. தொடர்பு: ACCA Farm
077 3086721

**Personal Class**

உயிரியல், இரசாயனவியல் } A/L
கணிதம், விஞ்ஞானம் } O/L
37 வருட Past papers & theory கற்பிக்கப்படும்.
TP. No : 075 6295662

**வேலையாள்கள் தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் கடை ஒன்றிற்கு பொதி கட்டுநரும், சிட்டை எழுதுநரும் தேவை.
தொடர்பு: 077 623 1295

**முகாமையாளர் தேவை**

யாழ் நகரில் இயங்கி வருகின்ற பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு முகாமையாளர் உடன் தேவை.
தொடர்புகளுக்கு: பிள்ளையார் இன்
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2829/ 077 722 2715

**புறொயிலர் கோழிக்குஞ்சு விற்பனைக்கு**

40 நாள்களில் 2 1/2 கிலோவிற்கு மேல் நிறைதரும் நல்ல புறொயிலர் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.
076 3488645



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

சுன்னாகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லமாகிய வாழ்வக நிறுவனத்தின் தலைவர்
உயர் திரு. **ஆறுமுகம் ரவீந்திரன் J.P**
**B.A., PGDE, M.Ed.**
(விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)
14.10.2016 அன்று யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ ம.இளஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதானநீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையிட்டு மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.
Best Wishes
வாழ்வகசமூகம்

# அதிபராக நியமித்த பாடசாலையிலேயே தற்காலிக இணைப்பை வழங்கவேண்டும்

*நியமனம் நிறுத்தி வைக்கப்பட்ட அதிபர்கள் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், ஒக். 15
அதிபர் சேவை பரீட்சையில் சித்தி அடைந்த அனைவருக்கும் நியமனம் வழங்கும் வரை, தற்போது நியமனம் பெற்ற 84 அதிபர்களுக்கும் நியமிக்கப்பட்ட பாடசாலைகளிலேயே தற்காலிக இணைப்பை வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சிடம் வலியுறுத்தப்பட்டது.

இலங்கை அதிபர் சேவை தரம்–3 பரீட்சையில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த 392 பேர் சித்தியடைந்தனர். இவர்களில் 84 பேருக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் அதிபர் நியமனம் வழங்கப்பட்டது. கொழும்பு கல்வி அமைச்சின் சுற்றறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னதாக இந்த நியமனங்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டது. பரீட்சையில் சித்தியடைந்து அதிபர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். சித்தியடைந்த அனைவருக்கும் ஒரே தடவையில் நியமனம் வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் புதிதாக வழங்கப்பட்ட 84 அதிபர்களின் நியமனங்களை நிறுத்துமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், கல்வி அமைச்சின் செயலாளருக்குப் பணித்தார். கல்வி அமைச்சின் செயலாளர் அந்த நியமனம் கொழும்பு கல்வி அமைச்சின் சுற்றறிக்கை வரும் வரை நிறுத்தம் செய்வதாகத் தெரிவித்து நியமனம் பெற்றவர்களை மீண்டும் ஆசிரியராகக் கடமையாற்றிய பாடசாலைகளுக்கு செல்லுமாறு புதிதாக நியமனம் பெற்ற 84 அதிபர்களுக்கும் கடிதம்மூலம் அறிவித்தார்.

இதனை அடுத்தே நியமனம் பெற்ற அதிபர்கள் சுற்றறிக்கை வரும்வரை தம்மை தற்காலிக் இணைப்பாக அதிபர் நியமனம் பெற்ற பாடசாலையில் வைத்திருக்குமாறு கேட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

'இலங்கை அதிபர் சேவை தரம் –3 போட்டிப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் சித்தி பெற்ற அதிபர்களில் முறைப்படி கோரப்பட்ட விண்ணப்பம் மற்றும் நேர்முகத் தேர்வின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்டு பாடசாலைகளில் நியமிக்கப்பட்ட 84 அதிபர்களின் நியமனம் நிறுத்தப்படுவதாக விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய, எமது பதவி நீக்கப்பட்டு முன்னை பாடசாலைகளுக்கு செல்ல வேண்டும் என செயலாளரினால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இதனால் நாம் மிகுந்த வேதனை, மன விரக்தி என்பவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளோம். சமூகத்தில் நாம் மிகவும் பெரிய அவமானத்தை எதிர் கொண்டு வருகின்றோம். அமைச்சும் அதன் கீழான அதிகாரிகளும் திட்டமிடாது முன்னெடுத்து வரும் செயற்பாடுகளினால், நாம் அவர்களுக்கு இடையில் பகடைக்காய்களாக அகப்பட்டு அவமானப்படுகின்றோம். நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் தகுந்த நடவடிக்கைகள் எடுக்காது, நியமனம் வழங்கிய பின்னர் அதை நீக்குவது எந்த வகையில் நியாயமாகும்.

அதிபர் நியமனம் வழங்கப்பட்ட பாடசாலைகளிலேயே தற்காலிக இணைப்பை வழங்கி, எல்லோருக்கும் ஒரே தினத்தில் நியமனம் வழங்க வேண்டும். அந்தத்தினத்தில் எமக்கும் நியமனத்தை வழங்கலாம். மேலும் எதிர்கால நியமனங்களின் போது எமக்கு அதே பாடசாலையில் நியமனம் வழங்க வேண்டும் –என்றனர்.

இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் இடம்பெறம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (வ–21)

## இன்று மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. மருதங்கேணி, முள்ளியான்,செம்பியன்பற்று, மாமுனை வடக்கு, தெற்கு, நாகர் கோவில், குடாரப்பு, நாகர் கோவில் வடக்கு, வத்திராயன், கொடுக்குளாய், வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், தெல்லிப்பழை, மாதனை ஆகிய இடங்களிலும் மன்னாரில் வங்காலை, வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும். (து–ரி)

## கேள்வி கோருதல்

### மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

1. தலைவர், மாவட்ட செயலக பெறுகைக் குழு சார்பில் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளிற்கான, தற்போது தகுதி உடையவர்களிடம் இருந்தும் தகைமை பெற்றவர்களிடமிருந்தும் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளை கோருகின்றனர்.

2. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

3. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), வீதி நிர்மாணிப்பதற்கு C-7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தினை கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை, இல. 04/2016 இற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களை மாவட்ட திட்மிடல் செயலகத்தில் (தொலைபேசி இல. 021 222 2427) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மு.ப 8.30 முதல் பி.ப 3.00 மணிவரை அலுவலக நாள்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதிக்கலாம்.

5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரண தொகுதி ஒன்றினை மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பித்து 15.10.2016 முதல் 28.10.2016 வரை 09.00 மணியில் இருந்து 15.00 மணியிலான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா ஆயிரம் (ரூபா 1000.00) பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

6. கேள்விகள் 31.10.2016 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு அல்லது முன்னர் தலைவர், மாவட்ட பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் வருகை தந்த கேள்விதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்படி முகவரியில் கேள்விகோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்.

7. கேள்வி தொடர்பான முற்கேள்விச் சபைக் கூட்டம் மாவட்ட செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 25.10.2016 அன்று 15.00 மணிக்கு நடைபெறும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | தேவையான தரம் (CIDA) | கேள்விப் பிணை விவரம் | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் | |
| 01 | JF/DPS/Pro./Tourism/VI/15 /2016-I | மண்டைதீவு ரேடியோ சிலோன் வீதி-கட்டம்- I | 6.52 | C7 | 65,200.00 | 25.02.2017 | 120 Days |
| 02 | JF/DPS/Pro./Tourism/VI/15 /2016-II | மண்டைதீவு ரேடியோ சிலோன் வீதி-கட்டம்- II | 6.50 | C7 | 65,000.00 | 25.02.2017 | 120 Days |

நா.வேதநாயகன்,
அரச அதிபர் / மாவட்டச் செயலாளர்,
யாழ் மாவட்டம்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 505
சீட்டிழுப்பு திகதி 2016.10.14
வெற்றி இலக்கங்கள்
08 30 41 58 P
அடுத்த செவ்வாய்கிழமைக்கான ஜக்போட்
ரூ. 15,424,140/=

சீட்டிழுப்பு வாரம்: 54
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 14.10.2016
அடுத்த செவ்வாய்கிழமைக்கான ஜக்போட்
ரூ. 97,792,820/=
P 33 39 46 56

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 14.10.2016
வெற்றி வாரம் 2043
சிவப்பு
மகரம்
வெற்றி இலக்கங்கள்
10 30 39 59
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,371,760/-
011 4824824
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒட்டுசுட்டான் தொழிற்சாலை தொடர்பில் ஆராய்வு

முல்லைத்தீவு,ஒக்.15

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையின் செயற்பாடுகளை மீள ஆரம்பித்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா,

யுத்தம் முடிவடைந்து ஏழு வருடங்கள் கடந்துள்ள நிலையிலே இந்த ஓட்டுத் தொழிற்சாலையானது மீள ஆரம் பிக்கப்படாமையானது மிக வேதனைக்குரிய விடயமாகும். இந்தப் பிரதேசத்திலே தற்போது மீள் குடியேற்றம் இடம் பெற்றுள்ள சந்தர்ப்பத்திலே இந்தத் தொழிற்சாலை இயங்கு நிலையிலே இருந்திருந்தால் வீடுகளுக்குத் தேவையான ஓடுகளை வழங்கியிருக்க முடியும். பலருக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கி யிருக்க முடியும். அவர்களின் வாழ்வாதாரத்தை அதிகரித்திருக்க முடியும். ஆனால் அரசு எந்தவொரு ஆக்கபூர்வ மான நடவடிக்கைகளையும் எடுத்ததாகத் தெரியவில்லை - என்றார். (ரி2)

## 245 பேருக்கு மேசன் பயிற்சி

### ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்க துரித நடவடிக்கை

அச்சுவேலி,ஒக்.15

கட்டடக் கட்டுமானப் பணியில் மேசன் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையும் பற்றாக்குறையையும் நீக்கும் வகையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 245 இளைஞர்களுக்கு மேசன் தொழிற்பயிற்சி வழங்கப்படுகின்றது. இவர்களுக்கான மூன்று மாத பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவும் பயிற்சி நிறைவடைந்த பின்னர் 08 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணத் தொகுதியும் சீருடையும் வழங்கப்படும்.

பயிற்சியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் பிரதேச செயலகப் பிரிவுகளில் கடமையில் உள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அலுவலர்களிடம் பதிவு செய்து கொள்ளலாம் என யாழ்.மாவட்ட தேசிய வீடமைபபு அபிவிருத்தி அதிகார சபை முகாமையாளர் எம்.ரவீந்திரன் அறிவித்துள் ளார்.

மேசன் பயிற்சி தொடர்பாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் கட்டட நிர்மாணப் பணிக்கான மேசன் தொழிலாளர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனைப் போக்குவதற்கு மேசன் தொழில் பயிற்சி பெற்றவர்களை உருவாக்கி சிறப்பான முறையில் கட்டுமானப்பணியை மேற்கொள்ளுவதற்கு வசதியாகவும் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர்களுக்கு மேசன் தொழிற்பயிற்சியை வழங்குகின்றோம்.

மேசன் தொழிற்பயிற்சியை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் நைற்றா மற்றும் இன்ரரட் நிறுவனங்களும் இணைந்து வழங்குகின்றன. இந்தப் பயிற்சிநெறியில் தற்பொழுது 245 இளைஞர்கள் இணைந்து பயிற்சி பெறுகின்றனர். இந்தப் பயிற்சி நெறியில் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்டவர்கள் இணைந்து கொள்ளலாம்.

இவர்களுக்குத் தற்போது வேலைசெய்யும்வேலைத்தலங்களில் வைத்தே எமது போதனாசிரியர்கள் பயிற்சி வழங்குவர். மூன்று மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் ரூபா 10 ஆயிரம் மாதம் ஒன்றுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாகவும் பயிற்சி நிறைவில் எண்ணாயிரம் ரூபா பெறுமதியான மேசன் வேலைக்கான உபகரணங்களும் சீருடையும் வழங்கப்படும். அத்துடன் பயிற்சிபெற்றமை தொடர்பான சான்றிதழும் வழங்கப்படும்.

மேசன் பயிற்சியில் இணைந்து பயிற்சி பெறவிரும்புபவர்கள் பிரதேச செயலகங்களில் கடமையில் உள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அலுவலர்களிடம் பதிவுகளை மேற்கொள்ளலாம்-என்றார். (த-11)

## மாணவர்களுக்கான போட்டி திங்களன்று

தென்மராட்சி ஒக் 15

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளையொட்டிய மாணவர்களுக்கான நிகழ்வுகளும் போட்டிகளும் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

திங்கட்கிழமை முன்பள்ளிச் சிறார்களுக்கான அபிநய நடனம், கதை கூறல், பேச்சுப் போட்டி ஆகியவையும், 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் பிரிவு 1,2,3,4,5 ஆகியவற்றுக்கான கட்டுரை, கவிதை, பொது அறிவு போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

பிரிவு 1 இல் தரம் 4, 5 வகுப்பு மாணவர்களும், பிரிவு 2 இல் தரம் 6, 7 வகுப்பு மாணவர்களும், பிரிவு 3 இல் தரம் 8, 9 வகுப்பு மாணவர்களும் பிரிவு 4 இல் தரம் 10, 11 வகுப்பு மாணவர்களும், தரம் 5 இல் தரம் 12, 13 வகுப்பு மாணவர்களும் பங்குபற்றலாம்.

போட்டிகளில் பங்குபற்றவுள்ள மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் விதப்புரையுடன் பதிவை மேற்கொள்ளுமாறு வரணிப் பொது நூலகர் பொ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (த-90)

## மகாஜனக் கல்லூரி பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம், ஒக் 15

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஜெயரட்ணம் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 8.30மணிக்கு கல்லூரியின் பாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் முதல்வர் மணிசேகரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாகத் தெல்லிப்பழை கோட்டக் கல்வி அதிகாரி மா.ஆனந்தகுமார், வலிகாமம் கல்வி வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் பா.மகாலிங்கசிவம் , கௌரவ விருந்தினராகத் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் தலைவர் ஆறு. திருமுருகன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (த-422)



உலக கைகழுவுதல் தினத்தை முன்னிட்டு குருநகர் திருச்சிலுவை முன்பள்ளியில் நேற்று வெள்ளிக்கிழமை கைகழுவுதல் நிகழ்வு இடம் பெற்றது.பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜே.ராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களுக்கான கை கழுவுதல், சுகாதார விழிப்புணர்வு என்பன இடம்பெற்றன. (த-17)

## தொண்டமானாறு-மூதூர் பஸ் சேவை திங்கள் முதல்

யாழ்ப்பாணம், ஒக். 15

இலங்கைப் போக்குவரத்துச் சபை யினால் தொண்டமானாற்றில் இருந்து மூதூர் வரை புதிய பேருந்துச் சேவை நாளை மறுதினம் 17ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பருத்தித்துறை சாலை முகா மையாளர் க.கந்தசாமி தெரிவித்தார்.

காலை 9.30 மணிக்குத் தொண்டமானாற்றிலிருந்து புறப்பட்டு பருத்தித்துறை வந்து மு.ப. 10.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டு வவுனியா ஊடாகத் திருகோணமலை சென்று மூதூர் வரை இந்தச் சேவை இடம் பெறவுள்ளது. இதே போல் மூதூரி லிருந்து காலை 7 மணிக்கு புறப்பட்டுத் திருகோணமலை வந்து அங்கிருந்து மு.ப. 10.30 மணிக்குப் புறப் பட்டு பருத்தித்துறை வந்த டையவுள்ளது.

இதுவரை 11 மணிக்குப் பருத்தித் துறையில் இருந்து வவுனியா சென்ற பேருந்து



நாளை மறுதினம் 17 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 11.30 மணிக்கு புறப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (த-ரி)

## மாதிரிப் பனந் தோட்டங்களில் பரீட்சார்த்தமாக விதை நடுகை

### 3 மாவட்டங்களில் மேற்கொள்ள முடிவு

யாழ்ப்பாணம்,ஒக்.15

பனை அபிவிருத்திச் சபை இந்தப் போகத்தின்போது தெரிவு செய்யப்பட்ட மூன்று மாவட்டங்களில் பனம் விதைகளை பரீட்சார்த்தமாக நடுகை செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட மாதிரிப் பனம் தோட்டங்களில் இந்தப் பனம் விதைகள் பரீட்சார்த்தமாக நடுகை செய்யப்படவுள்ளன.

பனம் விதைகளின் முளைதிறன் மற்றும் அதன் மண்வளம் போன்றவற்றை ஆய்வுக்கு உட்படுத்தவும் பனை அபிவிருத்திச் சபை தீர்மானித்துள்ளது.

குறிப்பிட்டளவு பனம் விதைகளைப் பயன்படுத்தி இந்த முறை அவற்றின் முளைதிறன் முக்கியமான ஆய்வுக்கு உட்படுத்தப்படும். இதற்கான பணிகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறிப்பாக கடந்த போகத்தின் போது நடுகை செய்யப்பட்ட பனம் விதைகளின் முளைதிறன் வீதம் மிக மிகக் குறைந்தே காணப்பட்டது.

கடந்த ஆண்டில் கிட்டத்தட்ட ஆறு லட்சம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. இதில் ஒன்றரை லட்சம் வரையிலான பனம் விதைகள் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் உதவியுடன் நடுகை செய்யப்பட்டன. கடற்கரையை அண்டிய பகுதிகளில் நடுகை செய்யப்பட்ட பனம் விதைகளின் முளைதிறன் அதிகரித்துக் காணப்பட்டது. அதைவிட மணல் தரைகளிலும் முளைதிறன் அதிகரித்துக் காணப்பட்டது. களிமண் தரை மற்றும் சதுப்பு நிலங்களில் முளைதிறன் வீதம் குறைந்து காணப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 89 வீதமும், யாழ்ப்பாணத்தில் 18 வீதமும், மன்னாரில் 17 வீதமும், கிளிநொச்சியில் 25 வீதமும், வவுனியாவில் 23 வீதமும், முல்லைத்தீவில் 45 வீதமும், திருகோணமலையில் 33வீதமும், அம்பாறையில் 27வீதமும், புத்தளத்தில் 35 வீதமும் பனம் விதைகளின் முளைதிறன் கடந்த போகத்தில் காணப்பட்டதாகச் சபையின் ஆய்வுப் புள்ளி விவரங்கள் தெரிவித்தன. (த-17)



வல்லிபுர ஆழ்வார்
இன்று (15.10.2016)
சனிக்கிழமை
தீர்த்தத் திருவிழா

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

கீதன் பந்தல்
&
கீதன் டெக்கரேஷன்

பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு.
காளிகோயிலடி, கோண்டாவில் மேற்கு.
T.P.077 527 3660/ 021 492 7771

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கட்சிக்குப் போனால் சு.க உறுப்புரிமை பறிமுதல்

## கூட்டு எதிரணியில் அங்கம் வகிப்பவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 15

பொது எதிரணியினர் புதிய கட்சியை உருவாக்கினால் அதில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அனைவரினதும் கட்சி உறுப்புரிமை உடனடியாக நீக்கப்படும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்று முன் தினம் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தது.

பொது எதிரணியில் உள்ள சுதந்திரக் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டால் அவர்கள் தமது நாடாளுமன்ற ஆசனத்தையும் இழக்க நேரிடும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழு உறுப்பினரும், பலாங்கொடை அமைப்பாளரும், சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சருமான பானு முனிப்பு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சித் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு தொடர்பில் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் எமக்கு எவ்வித கருத்தும் தெரிவிக்க முடியாது.

> “சுதந்திரக் கட்சித் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு தொடர்பில் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் எமக்கு எவ்வித கருத்தும் தெரிவிக்க முடியாது. ஜனாதிபதி அடுத்த வாரம் ஊடக வியலாளர்களுடன் இது தொடர்பில் கலந் துரையாட லொன்றை நடத்தவுள் ளதுடன் இதன் போது மேற்படி அறிவிப் புக்கான விளக்கத் தையும் வழங்க வுள்ளார்.”

ஜனாதிபதி அடுத்த வாரம் ஊடக வியலாளர்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளதுடன் இதன்போது மேற்படி அறிவிப்புக்கான விளக்கத்தையும் வழங்கவுள்ளார்.

இரத்தினபுரிக் கூட்டத்தில் கலந்து கொண்ட சுதந்திரக் கட்சியின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கட்சியின்மையக் குழு எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை. அவர்கள் கூறுவது போன்று புதிய கட்சியொன்று ஆரம்பிக்கப்படுமாயின் அதில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக நிச்சயம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கப்படுவர்.

அவ்வாறான கடும் தீர்மானங்கள் எடுக்கப்படுமாயின் அது பொது எதிரணியுடன் கைகோர்த்துள்ள சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதிப்பாக அமையும். அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவார்களாயின் நாடாளுமன்ற ஆசனத்தையும் இழந்திடுவார்கள் - என்றார். (த-5)

---

மானிப்பாய் வாள்வெட்டு;

## மூன்று குற்றவாளிகளின் மேன்முறையீடு தள்ளுபடி

யாழ்ப்பாணம், ஒக். 15

மானிப்பாய் வாள்வெட்டு வழக்கில் மல்லாகம் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு, சரியானது எனத் தீர்ப்பளித்துள்ள யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், அந்தத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

வீட்டுக்குள் அத்துமீறிச் சென்றமை, சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி, சிறிய காயம் மற்றும் கடும் காயம் விளைவித்தமை, 6 லட்சத்து 61 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைச் சேதப்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் 6 எதிரிகளுக்கு எதிராக சுன்னாகம் பொலிசாரினால் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதன் விசாரணையின் பின்னர் எதிரிகளுக்கு ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கிய மல்லாகம் நீதிமன்றம், 6 லட்சத்து 61 ஆயிரம் ரூபா நட்டஈடு செலுத்தவேண்டும் என்றும் எதிரிகளுக்குக் கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி வழங்கிய தீர்ப்பில் உத்தரவிட்டிருந்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக 3 எதிரிகள் யாழ்.மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தனர். இந்த மேன்முறையீட்டு மனு மீதான வழக்கு விசாரணை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நடைபெற்றது.

விசாரணைக் காலத்தில் மனுதாரர்களுக்குப் பிணை வழங்க மேல் நீதிமன்றம் மறுத்துவிட்டது. இதனால், எதிரிகள் சிறையில் இருக்க மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை நடைபெற்றது.

இதனையடுத்து மல்லாகம் நீதிமன்ற நீதிபதியினால் வழங்கப்பட்ட ஓராண்டு காலக் கடூழியச் சிறைத் தண்டனைத் தீர்ப்பு, சரியானது என உறுதிப்படுத்திய நீதிபதி இளஞ்செழியன், மல்லாகம் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட 6 லட்சத்து 61 ஆயிரம் ரூபா நட்டஈடு செலுத்த வேண்டும் என்ற உத்தரவும் சரியான தீர்ப்பு என அவர் தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

மனுதாரர் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி, மல்லாகம் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்ட தினமாகிய கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருப்பதால். அந்தத் தினத்தில் இருந்து தண்டனை அனுபவிப்பதற்கு மேல் நீதிமன்றம் உத்தரவிடவேண்டும் எனக் கோரி, மேன் முறையீட்டு மனுவைக் கைவாங்குவதாக நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தார். இந்த விண்ணப்பத்துக்கு அரச சட்டவாதி ஆட்சேபனை இல்லை எனத் தெரிவித்தார்.

இந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துமாறும், மல்லாகம் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்ட திகதியில் இருந்து எதிரிகளின் சிறைத்தண்டனைக் காலம் கணிப்பிடப்படவேண்டும் எனச் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு அறிவிக்குமாறும் மல்லாகம் நீதிபதிக்கு யாழ்.மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி, மல்லாகம் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு முழுமையாக நடைமுறைப்படுத் தப்படும். மேல் நீதிமன்றம் உங்களுக்குக் கருணை காட்டியுள்ளது. சிறைத் தண்டனை அனுபவித்த பின்னர், வரும் காலங்களில் எதுவிதமான வாள்வெட்டுச் சம்பவங்களிலும் ஈடுபடக் கூடாது. சமூகம் திரும்பிப்பார்க்கத்தக்க வகையில் நற்பிரசைகளாக வாழவேண்டும் என்று நீதிபதி இளஞ்செழியன் குற்றவாளிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த வழக்கில் அரச தரப்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந்தனும், எதிரி தரப்பில் சட்டத்தரணி வி.திருக்குமரனும் முன்னிலையாகியிருந்தனர். (த-4)

---

## இரும்புக் கடையில் தீ

கொழும்பு, ஒக்.15

ஹற்றன் - டன்பார் வீதியில் அமைந்துள்ள இரும்புக் கடை ஒன்று நேற்று முன்தினம் இரவு தீயில் எரிந்து நாசமானதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இரவு 10.30 மணியளவில் கடை தீப்பற்றியதாகவும், தீயணைப்புப் படையினருடன் பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து 2 மணித்தியால முயற்சியின் பின் தீயைக் கட்டுப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. தீ விபத்துக்கான காரணம் மற்றும் சேதவிவரம் உறுதி செய்யப்படவில்லை.(கு)

---

## சுற்றுலாப் பயணிகளால் மாசுறும் மத்திய மாகாணம்



கொழும்பு, ஒக்.15

மத்திய மாகாணத்துக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. அவர்கள் உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களை சூழலில் வீசிவிட்டுச் செல்வதால் சூழல் மாசடைவதோடு நுளம்புகள் பரவும் அபாயமும் ஏற்பட் டுள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவிக் கின்றனர்.

குறிப்பாக ஹற்றன் - நுவரெலியா பிரதானவீதியில் டெவோன் மற்றும் சென்கிளயார் பகுதியிலுள்ள நீர்வீழ்ச்சிகளைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் அங்கு குப்பைத்தொட்டி வைக்கப்பட்டிருந்தாலும் அதனுள் குப்பைகளைப் போடாமல் வெளியிடங்களில் வீசியெறிந்துவிட்டுச் செல்வதாக விசனிக்கப்படுகிறது. எனவே, இதுதொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்தனர். (கு)

---

## ஆசிரியர் வெற்றிடங்கள் கிழக்கில் நிரப்பப்படும்

### கல்வி இராஜாங்க அமைச்சர் உறுதி

கொழும்பு, ஒக்.15

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி இராஜாங்க அமைச்சர் உறுதியளித்திருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

கல்குடா, மட்டக்களப்பு மேற்கு மற்றும் மூதூர் கல்வி வலயங்களில் பல ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ள நிலையில், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் வேறு மாகாணங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், இவ்வாறானவர்களின் பெயர்ப் பட்டியல் கல்வி இராஜாங்க அமைச்சரிடமும், செயலாளரிடமும் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இந்த மேன்முறையீட்டை விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் உறுதியளித்ததாகவும் கூறினார்.(கு)

---

## பதின்ம வயதுச் சிறுமியுடன் குடும்பம் நடத்தியவர் கைது

பதுளை, ஒக்.15

திருமணம் முடிப்பதாகக் கூறி 15 வயதுச் சிறுமியொருவருடன் குடும்பம் நடத்தினார் எனக் கூறப்படும் இளைஞரைப் பிபிலைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

இதில் சம்பந்தப்பட்ட சிறுமி கர்ப்பம் தரித்துள்ளதாவும் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட இளைஞர் பிபிலை நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் 19 ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக் கும்படி நீதிபதி உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட சிறுமி கர்ப்பவதியென நீதிபதியிடம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால் அவரை சிறுவர் நன்னடத்தை முகாமில் தடுத்து வைத்து அறிக்கை சமர்ப்பிக்கும் படியும் நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலாயுதத்தின் நினைவு நிகழ்வு

பதுளை, ஒக் 15
முன்னாள் இராஜாங்க அமைச்சரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளருமான அமரர் க.வேலாயுதத்தின் ஒரு வருட நினைவு தினம் நேற்றுமுன்தினம் பதுளை சைமன் பீரிஸ் மண்டபத்தில் நடை பெற்றது. இந்த அஞ்சலி நிகழ்வில் ஊவாமாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநயக்க, இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா, ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார், பதுளை மாவட்ட அரச அதிபர் நிமல் அபேசிறி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
(து)

# உயிரிழந்த தொழிலாளிக்கு இரண்டு இலட்சம் இழப்பீடு

யாழ்ப்பாணம்,ஒக்.15
வட மாகாணப் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் சகாய நல திட்டத்தின் கீழ் தொழிலின்போது உயிரிழந்த தொழிலாளி ஒருவருக்கு இழப்பீட்டு நிதியாக இரண்டு லட்சம் ரூபா அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.
புலோலி வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை சிவசங்கரன் (வயது-44) என்ற தொழிலாளி பனை மரத்தில் ஏறித் தொழில் செய்துகொண்டிருந்த சமயம் தவறிவீழ்ந்து உயிரிழந்தார்.
இந்த தொழிலாளிக்குச் சகாய நல திட்டத்தின் கிழ் இந்த உதவு தொகை வழங்கப்பட்டுள்ளது. வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் என்.கணேசன் இந்த இழப்பீட்டுநிதியை இறந்த தொழிலாளியின் குடும்பத்தினரிடம் கையளித்தார்.
இந்த நிதி கையளிப்பு நிகழ்வில் சகாய நிதிக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.
(து-17)

# சாதியப் பிரச்சினைகள் மீண்டும் எம் மத்தியில்

## அவற்றை உதறிவிடவேண்டும் என்கிறார் கமநலத் திணைக்கள உதவி ஆணையாளர்

முல்லைத்தீவு, ஒக். 15
போர் முடிந்த பின்னர் மீண் டும் சாதியப் பிரச்சினைகள், பெண் அடிமைத் தனங்கள் எமது சமூகத்தில் மெல்லத் தலைதூக்குகின்றன. கிராமப் பகுதியில் உள்ள பெண்கள் அமைப்புக்கள் சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை உதறித் தள்ளிவிட்டு முன்னேற்றகரமான அமைப்புகளாக தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
இவ்வாறு முல்லைத் தீவு மாவட்ட கமநலத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வே.ஆஜகுலன் தெரிவித்தார்.
ஒலுமடு கமநல அபிவிருத்தி நிலையத்தில் மகளிர் கமக்கார அமைப்பினருக்கான பதிவுச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
2009 ஆம் ஆண்டுக்கு முன் னர் எமது பிரதேசங்களில் பெண்கள் பல சாதனைகள் படைத்தவர்களாக விளங்கினார்கள். சாதாரண வாகனங்கள் இயக்குவது முதல் கனரக வாகனங்கள் இயக்குவது வரை மட்டுமன்றி எண்ணிலடங்காச் சாதனைகள் பலவற்றை எமது பெண்கள் புரிந்துள்ளார்கள். இன்று உலகில் விண்வெளிப் பயணம் வரை சகல விடயங்களிலும் பெண்கள் சாதித்து வருகின்றனர். எமது சமூகத்தில் மட்டும் ஆரம்பத்தில் பெண்கள் வலிமையற்றவர்கள் என்னும் கருத்து வேரோடிப் போயிருந்தது. இதனால் பெண்கள் அடக்கி ஆளப்பட்டு வந்தனர். போரால் விளைந்த சாதகமான விளைவுகளில் ஒன்று இந்த பெண் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டமை மற்றும் சாதியம் ஒழிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.
தற்போது போர் முடிவடைந்தவுடன் சாதியம் மீண்டும் மெது மெது வாகத் தலை தூக்குகின் றது.

> “தற்போது போர் முடிவடைந்தவுடன் சாதியம் மீண்டும் மெது மெது வாகத் தலை தூக்குகின்றது. அதேபோன்று பெண் அடிமைத் தனமும் மீண்டும் தலை தூக்கி வருவதனைக் காணக் கூடியதாக இருக்கின்றது.”

அதேபோன்று பெண் அடி மைத் தனமும் மீண்டும் தலை தூக்கி வருவதனைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அதை நீங்கள் எல்லாம் உதறித் தள்ளி விட்டு ஒரு முன்னேற்றகரமான அமைப்பு என்ற வகையில் உங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
இன்று எமது நாட்டிலுள்ள நிர்வாகங்களில் சராசரியாக 75 வீதமானோர் பெண்களாகவே காணப்படுகின்றனர். அதேபோல பரீட்சைகளிலும் சித்தியடைபவர்களின் எண்ணிக்கையில் ஆண்களை விட பெண்களே முன்னிலை வகிப்பதனையும் அவதானிக்கின்றோம் - என்றார்.
(து-5-ரி-102)



# வெள்ளைப் பிரம்பு தினம் நாளை சுன்னாகத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 15
சுன்னாகம் லயன்ஸ் கழகமும் வாழ்வக சமூகமும் இணைந்து நடத்தும் வெள்ளைப் பிரம்பு தினம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் நா.தயாரூபன், வாழ்வகத் தலைவர் லயன் ஆ.இரவீந்திரன் ஆகியோரின் இணைத் தலைமையில் மேற்படி நிகழ்வு நடைபெறவுள்ளது. காலை 8 மணிக்குச் சுன்னாகம் பலநோக்குச் சங்க முன்றிலில் இருந்து வெள்ளைப் பிரம்பு ஊர்வலம் ஆரம்பமாகி, சுன்னாகம் பஸ் தரிப்பு நிலையத்தை வந்தடைந்து வாழ்வகம் கேட்போர் கூடத்தில் விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெறும்.
இந்த நிகழ்வுக்குத் தலைமை விருந்தினர்களாக கொட்டாஞ்சேனை கிழக்கு லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் பி.மகேந்திரன், லயன் சீமாட்டி சங்கீதா மகேந்திரன் ஆகியோரும், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.செல்வக்குமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.
இந்த நிகழ்வின் இறுதியில் தலைமை விருந்தினரால் வாழ்வகச் சிறுவர்களுக்கு அன்பளிப்புப் பொருள்களும் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற வாழ்வகத்தின் உயர்தர மாணவனை அன்பளிப்பு வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறும்.
(து-5)

# பொறுப்பில் இருப்பவர்களுக்கு மட்டுமே இலாபம் கிடைக்கிறது

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் கூறுகிறார்

முல்லைத்தீவு, ஒக். 15
கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நிறைவேற்றப் பொறுப்பில் இருப்பவர்கள் மாத்திரமே இயங்கு நிலையில் இருக்கின்றனர். அவற்றின் ஊடாக முன்னெடுக் கப்படும் ஒப்பந்த வேலைகளின் இலாபங்களையும் அவர்கள் மாத்திரமே பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை காணப்படுகின்றது.
இவ்வாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ய.அனிருத்தன் தெரிவித்தார்.
ஒலுமடு கமநல அபிவிருத்தி நிலையத்தில் மகளிர் கமக்கார அமைப்பினருக்கான பதிவுச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், ஆலடிக்குளம் புனரமைக்கப்பட்டதன் பின்னர் கையளிக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:-
கிராம மட்ட அமைப்புக்களான கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சீராக் இயங்குவதில்லை. பெரும்பாலான சங்கங்களில் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் மட்டுமே செயற்படுகின்றனர். சங்கங்களின் செயற்பாடுகளில் மற்றைய எவரும் இணைத்து செயற்படுவதில்லை. இவ்வாறான சங்கங்களினூடாகச் செய்யப்படும் ஒப்பந்த வேலைகள் மூலம் வரும் இலாபங்களையும் அவர்கள் எடுத்துச் சென்று விடுகின்றனர்.

> “பெருமளவிலான சங்கங்கள் உரிய பதிவுகளை மேற்கொள்ளாமையினால் ஒப்பந்தங்களை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.”

இவ்வாறான சங்கங்களைக் கட்டுப்படுத்துவதிலும் தொடர்ந்து நடத்துவதிலும் பெரும் கஷ்ட நிலையை எதிர் நோக்க வேண்டியுள்ளது. சங்கங்களுக்கு இடையில் தொடர்பாடல் ஒன்றும் கிடையாது. அவர்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு என்பது மிகக் குறைவாக இருக் கின்றது.
பிரதேச செயலகத்தினூடாகப் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடை முறைப்படுத்துவதற்குக் கிடைக்கின்றபோதிலும் பெருமளவிலான சங்கங்கள் உரிய பதிவுகளை மேற்கொள்ளாமையினால் ஒப் பந்தங்களை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது. பல வேலைகள் நிறைவேற்ற முடியாது காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே உருவாகியுள்ள மாதர் கமக்கார அமைப்புக்கள் சீராக இயங்கி ஏனைய அமைப்புக் களுக்கு முன்னோடியாக விளங்க வேண்டும் - என்றார்.
(து-5-ரி7,102)

# அதிக கட்டணம் அறவிட்ட பஸ் சாரதி, நடத்துநர் கைது

## பயணி வழங்கிய தகவலையடுத்து விரைந்து செயற்பட்டது பொலிஸ்

கிளிநொச்சி, ஒக். 15
அதிகரித்த பயணக் கட்டணத்தை அறவிட்ட தனியார் பேருந்து தொடர்பில் பயணி துரிதமாகச் செயற்பட்டமையினால், கிளிநொச்சிப் பொலிஸார் பேருந்தை மடக்கிப் பிடித்தனர். பேருந்தின் சாரதியும், நடத்துநரும் கைது செய்யப்பட்டனர்.



கடந்த 11 ஆம் திகதி பயணி ஒருவர், கைதடியிலிருந்து மாங்குளம் செல்வதற் காகத் தனியார் பேருந்தில் ஏறியுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற அந்தப் பேருந்தில் ரிக்கெட் எடுத்துள்ளார். கைதடியிலிருந்து மாங்குளம் செல்வதற்கு 120 ரூபாவே கட்டணமாக அறவிடப்படுவது வழமை. இருப்பினும் மேற்படி பேருந்து நடத்துநர் 200 ரூபா பணம் பெற்றுள்ளார்.
பயணி உடனடியாகவே வடக்கு மாகாணத் தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத் தலைவருக்கு விடயத்தை தெரியப்படுத்தியுள்ளார். பின்னர் கிளிநொச்சிப் பொலிஸாருக்கு விடயம் தெரியப்படுத்தப்பட்டது. பேருந்து கிளிநொச்சி நகரைக் கடப்பதற்கு முன்னர் பொலிஸார் அதனை மடக்கிப் பிடித்தனர். பேருந்தின் சாரதி, நடத்துநர் ஆகியோர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். (து-5-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைகளின் பின்னணி அரசியல் எது?

## மைத்திரியிடம் கேட்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக். 15
குற்றப் புலனாய்வுப் பிரிவு, பெரிய நிதி மோசடிப் பிரிவு, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணைப் பிரிவு ஆகியன யாருடைய அரசியல் பின்னணியில் செயற்படுகின்றன என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தவேண்டும்.
இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.
குற்றப் புலனாய்வுப் பிரிவு, பெரிய நிதி மோசடி விசாரணைப் பிரிவு, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் செயற்படுமாயின், அது பற்றி எனக்கும் மிகத் தெளிவான தீர்மானங்களை எடுக்க வேண்டி ஏற்படும். இந்த நிறுவனங்கள் அரசியல் ஒழுங்குப் பத்திரங்களுக்கு அமைய வேலை செய்ய முடியாது. சட்டம் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும்என்று ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.
இது குறித்து தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி நேற்று விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.
அது தெரிவித்துள்ளதாவது:-
அரச நிறுவனங்கள் அரசியல் ஒழுங்குப் பத்திரங்களுக்கு அமைய செயற்படுவதாகச் சந்தேகம் வெளியிடும் வகையில் (ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால்) வெளியிடப்பட்டுள்ள கருத்தை முக்கியமானதாக நாம் பார்க்கின்றோம். ராஜபக்ச ஆட்சியில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் மற்றும் குற்றங்களுக்கு எதிராக நல்லாட்சி மற்றும் ஜனநாயகம் என்பவற்றுக்காக, ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்த 62 இலட்சம்மக்களின்அபிலாசைமற்றும்ஆணைக்கு ஜனாதிபதி தனது உரையில் சவால் விடுத்துள்ளார் என்பது தெரிகின்றது.
கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல், மோசடி மற்றும் குற்றங்கள் தொடர்பான விசாரணை நடத்தும் நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து தவறான வியாக்கியானங்களைக் கொடுத்து அரசுக்கு எதிராக ஒரு கருத்தை உருவாக்கத் தோல்வியடைந்த ராஜபக்ச குழுவினர் முயற்சிப்பார்களாயின், அந்த முயற்சியைத் தோற்கடிக்கவேண்டும். அதைவிடுத்து, நிறுவனங்களைப் பலவீனப்படுத்தும் வேலையைச் செய்யக் கூடாது.
தற்போதைய அரசில் இருக்கும், குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கும் சில அமைச்சர்களுக்கு எதிராகப் பல்வேறு மோசடிக் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றபோதும், அவை குறித்து விசாரணைகள் நடத்தப்படவில்லை என்பது நாட்டுக்கே தெரியும். அரசியல் ஒழுங்குப் பத்திரங்களுக்கு அமையவா அவை நடைபெறுகின்றன எனத் தெளிவுபடுத்தப்படவேண்டும். சுயாதீன ஆணைக் குழுக்கள் பற்றி ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டுள்ளார். அரசின் தலையீட்டுடன் 19 ஆவது திருத்தச் சட்டத்தின்ஊடாகச்சுயாதீனஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டன.
அது மக்களின் சிவில் அமைப்புக்களின் கோரிக்கையாக அமைந்தது மட்டுமல்லாமல், அரசு மக்களுக்கு வழங்கிய முக்கிய வாக்குறுதியாகவும் இருந் தது. தனிநபரால் மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் நிருவகிக்கப்படுவதை விடச் சில குறைபாடுகள் இருந்தாலும் ஆணைக் குழுக்களினால் முன்கொண்டு செல்லப்படுவது ஜனநாயகத்தின் பக்கம் சிறந்ததாகும்.
சுயாதீன ஆணைக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் அரச நிர்வாகம் தொடர்பில் அறியாதவர்கள் எனக் கூறி அந்த நிறுவனங்களைப் பலவீனப்படுத்துவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.
கடந்த காலங்களில் மக்கள் பணத்தை மோசடி செய்த, நிதி மோசடி மற்றும் வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் குறித்து மேற்கொள்ளப்படும் விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைககளை பலவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டாம்.
இன்னும் விசாரணை ஆரம்பிக்கப்படாத அவ்வாறான நிதி மோசடிகள் மற்றும் குற்றச்சாட்டுகள் குறித்து அனைவர் தொடர்பிலும் உடனடி விசாரணை நடத்தப்பட வேண்டும். மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்கவேண்டும் என்று நாம் அரசை வலியுறுத்துகின்றோம் என்றுள்ளது.
(த-5)

## அனலைதீவில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 15
அனலைதீவு பொது நூலகத்தின் நடப்பாண்டுக்கான தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன என நூலக சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.
வாசிப்போம்! வளமான தலைமுறையை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளின் கீழ் நடக்கும் இந்த நிகழ்வில் வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள், கொடிகள் என்பவற்றை விநியோகித்தல்- காட்சிப்படுத்தல் மற்றும் சலுகைக் கட்டணத்தில் அங்கத்தவர்களை இணைத்தல், நூல்சேகரிப்பு என்பன நடைபெற்று வருகின்றன.
நூல்கள் ஒரு பார்வை எனும் எண்ணக்கருவின் கீழ் நூலகத்துக்கு புதிதாகக் கிடைக்கப் பெற்ற நூல்களைப் பொதுமக்களுக்கு எடுத்துரைத்தல், பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி மாணவர்கள், வாசகர்களுக்கான போட்டிகளை நடத்துதல், நூல்களின் தோழன் எனும் எண்ணக்கருவின் கீழ் சிறந்த வாசகரைத் தெரிவு செய்தல், பயன்தரு வீடியோ படக்காட்சி, முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கான கதை சொல்லும் நேரம், அனலை சஞ்சிகை வெளியீடு, சிரமதானம் போன்ற நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன.
போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கான பரிசில்கள் இறுதிநாள் நிகழ்வில் வழங்கப்படும். (த-ரி)

# நன்கு ஆராய்ந்த பின்பே முஸ்லிம்களுக்குக் காணி

## யாழ். பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15
முஸ்லிம் மக்கள் மீள்குடியமர்வுக்காகக் காணிகள் தேவை என்று பதிவுகள் மேற்கொள்கின்றனர். காணிகள் வழங்கப்படுவதாயின், முன்னர் அவர்கள் இங்கே இருந்தார்களா என்பது தொடர்பிலும், வேறு இடங்களில் காணிகள் இல்லையா என்பது தொடர்பாகவும் ஆராய்ந்தே காணி வழங்கப்படும்.
இவ்வாறு யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பி.தயானந்தா தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:-
இந்த மாதம் 3 ஆம் திகதி வரை 2 ஆயிரத்து 415 முஸ்லிம் குடும்பங்கள் பதிவுசெய்துள்ளன. இதில் 630 குடும்பங்கள் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வருகின்றன. 630 குடும்பங்களிலும் சொந்தக் காணியில் குடியிருப்பவர்கள் 261 பேரும், கோயில் காணிகளில் குடியிருப்பவர்கள் 21 பேரும், காணியற்றவர்களாக 348 பேரும் உள்ளார்கள்.
இதுவரை மீள்குடியமர்வதற்கு ஆயிரத்து 785 குடும்பங்களைச் சேர்ந்த, 7 ஆயிரத்து 458 பேர் பதிவுகளை மேற்கொண்டுள்ளார்கள்.
இவர்களில் ஆயிரத்து 614 குடும்பங்கள் காணி இல்லாதவர்களாகப் பதிவு செய்துள்ளனர். 148 குடும்பங்கள் காணி இருப்பதாகவும், புதிய வீடு தேவை என்றும், 23 குடும்பங்கள் வீடு திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்றும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
'காணி அல்லது வீடு தேவை என்போரின் பதிவுகள் தற்போது யாழ். பிரதேச செயலகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பதிவுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. கொடுக்கப்படு கின்ற ஆவணங்களின் அடிப்படையில் ஏற்கனவே இந்த இடத்தில் வசித்தார்களா என்ற தரவு ஆராயப்படும். இவர்கள் இரட்டைப் பதிவுகளை உடையவர்களா என்றும் ஆராயப்படும். அதன் பின்னரே இவர்களுக்குக் காணிகள் மற்றும் வீடுகள் வழங்கப்படும்-என்றார். (த-5-ரி)



## கிழக்கில் பரவலாக மழை

மட்டக்களப்பு, ஒக் 15
நீண்ட வறட்சிக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடிமின்னலுடன் கூடிய மழை பெய்துள்ளது.
மட்டக்களப்பு நகரில் ஆகக்கூடிய மழை வீழ்ச்சியாக நேற்று அதிகாலை 5.30 மணிவரை 4.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி கே. சூரியகுமாரன் தெரிவித்தார். (த)

# 311 மில்லியன் ரூபா செலவில் இரணைமடு ஏற்று நீர்ப்பாசனம்

## நேற்று நடந்தது ஆரம்ப நிகழ்வு

கிளிநொச்சி, ஒக். 15
311 மில்லியன் ரூபா செலவில், இரணைமடு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் நிர்மாணிக்கப்படவுள்ளது. ஆரம்ப நிகழ்வு, இரணைமடுவில் நேற்றுக் காலை நடைபெற்றது.
இரணைமடுக் குளப் புனரமைப்பு மற்றும் அதனோடு இணைந்ததாக இரணைமடு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் நிறுவப்படவுள்ளது. ஆசிய அபி விருத்திவங்கிமற்றும்இலங்கைஅரசின் நிதி உதவி யுடன் இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
இரணைமடுக் குளத்தில் ஏற்கனவே 4 கட்டங் களாக அபிவிருத்திப் பணிகள் முன் னெடுக்கப்பட்டுவருகின்றன.
இந்த நிலையில் நேற்று 5 ஆவது கட் டப் பணியாக ஏற்று நீர்ப்பாசன நிர்மாணப் பணி தொடக்கி வைக்கப் பட்டது. ஒரு வருட காலத்துக்குள் திட்டம் முழுமை செய்யப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் ஊடாக 600 ஏக்கர் காணியில் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகளால் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (த-5-ரி3-34)



## கஞ்சா வைத்திருந்த 8 மாணவர்கள் கைது

கொழும்பு, ஒக் 15
கண்டி – தெல்தெனிய, ஒருதொட பகுதியில் கஞ்சா வைத்திருந்த பாடசாலை மாணவர்கள் எட்டுப் பேர் கைது செய்யப்பட் டுள்ளனர்.
கண்டி நகரிலுள்ள 3 பாடசாலைகளைச் சேர்ந்த 10 மற்றும் 11 வயதுக்குட்பட்ட மாணவர்களிடமிருந்தே கஞ்சா கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பாடசாலை முடிந்ததும் சீருடையுடன் நடமாடுவதாக வழங்கப்பட்ட தகவலுக்கமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்ட மாண வர்கள் தெல்தெனிய நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு தலா 25,000 ரூபா சரீரப் பிணை யில் விடுவிக்கப்பட்டனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத நல்லிணக்கத்தை குழப்பும் முயற்சியே அநுராதபுரம் தாக்குதல்

## யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 15

அநுராதபுரம் சிறி முத்துமாரி அம்மன் ஆலயம் தாக்கப்பட்டமை தொடர்பாக யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையினர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர். மத நல்லிணக்கத்தைக் குழப்பச் சில தீய சக்திகள் செயற்படுவதாக அவர்கள் சுட்டிக் காட்டினர்.

சர்வமதப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் மேற் கண்டவாறு குறிப்பிட்டனர்.

பத்திரிகையாளர் சந்திப்பில், யாழ். சின்மயா மிசன் தலைமைக் குருயாக்ரதையத்சைத்தனிய சுவாமிகள், விமல தேரர், அருட்தந்தை ஜெயக்குமார் மற்றும் அருட்தந்தை பற்றிக், மௌலவி சுபியான், மௌலவி றொசான் மற்றும் சர்வமதப் பேரவையின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சின்மயா மிசன் தலைமைக் குருயாக்ரதையசைத்தனிய சுவாமிகள் தெரிவித்தாவது:

மத நல்லிணக்கத்தைக் குழப்புகின்ற சில தீய சக்திகள் அநுராதபுர தாக்குதல் போன்ற செயல்களைச் செய்து வருகின்றன. இந்துக் கோவில் உடைக்கப்பட்டமை மன வருத்தத்தைத் தருகின்றன. மதத் தலங்கள் பண்பாட்டைப் பேணக்கூடிய இடமாகத் திகழ்கின்றன. அப்படியான சூழலில் இவ்வாறான சம்பவம் நடைபெற்றது கண்டித்தக்கது. அரசும், அதற்குப் பொறுப்பானவர்களும் இதற்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். இனிமேலும் இவ்வாறான ஒரு சம்பவம் நடை பெறக் கூடாது – என்றார்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த, சர்வமதப் பேரவையின் உறுப்பினர் மருத்துவர் பராசக்தி தெரிவசித்ததாவது:

மாணவர்கள் மத்தியில் பல்வேறுபட்ட தீய பழக்கங்கள் தற்போது ஏற்பட்டுள்ளன. அதற்குரிய சூழ்நிலை அண்மைக் காலமாக மிகவும் வேகமாக வளர்ந்து வருகின்றது. பாடசாலைக்கு மாணவர்கள் வருகை தருவது வீழ்ச்சி அடைந்துள்ளது. இடைநடுவில் விலகிச் செல்கின்றார்கள். பாடசாலைக்கு வருகை தந்தாலும் அவர்களின் கவனம் முழுவதும் கல்வியில் காணப்படவில்லை. கல்வியுடன் ஒழுக்கமும் மிக முக்கியமாக உள்ளது.

பாடசாலையில் இருந்து ஒரு மாணவன் விலகுகிறான் என்றால் படிக்காத தன்மை மட்டும் காரணம் இல்லை. அதனைவிட அவனது வறுமை, குடும்ப சூழல், தேவையற்ற நட்பு வட்டாரங்கள் என்பன காணப்படுகின்றன. அவற்றைக் கண்டு பிடித்து அவர்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து ஊடகங்களும் மற்றவர்களும் செயற்படவேண்டும்.

சிறுவர் உரிமை சம்பந்தமாகச் சிறுவர் தினத்தில் மட்டும் கதைத்து விட்டுச் செல்லக்கூடாது. அதனை முழுநாளும் பின்பற்றவேண்டும். ஒவ் வொரு குழந்தையையும் பெற்றோர் எப்படிப் பாதுகாக்கின்றனரோ அதேபோல ஒவ்வொருவரும் பெற்றோர்களாக மாறி அனைத்துச் சிறார்களையும் பாதுகாக்க வேண்டும்.

பெரியவர்களைவிட இளவயதினர் தான் போதைப் பாவனையில் அதிக நாட்டம் கொண்டுள்ளார்கள். பிரபல பாடசாலைகளில்கூட மாணவர் கள் மத்தியில் இந்தப் போதைப் பழக்கம் தலைதூக்கியுள்ளது. இந்த நிலை மாறவேண்டும். கதைகள், சிறுகதைகள், சித்திரங்கள், துணுக்குகள் என்பவற்றின் மூலம் போதை வஸ்தின் தீமை, அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து விழிப்புணர்வுச் செயற்பாட்டை ஏற்படுத்த வேண்டும். வருங்காலத் தூண்களாக விளங்கும் இளம் சமுதாயம் இதற்கு அடிமையாகி ஒன்றுக்கும் உதவாதவர்களாக போகப்போகின்றார்கள்.

தற்போது உற்சாகத்தைத் தூண்டும் இந்த போதைவஸ்தானது பின்பு அவர்களின் சகல உற்சாகங்களையும் இழக்கச் செய்கின்றது. அதனோடு மருத்துவ ரீதியாகப் பார்க்கையில் மகப்பேற்றுத் தன்மை இழந்து மலட்டுத்தன்மை ஏற்பட்டுச் சமுதாயத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்குப் போதைவஸ்து பெரும் பங்கு வகிக்கின்றது. இதனால் இதனை முற்றாக நீக்க வேண்டும். அதற்கு நாம் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும் – என்றார்.

(த-5-ரி)

## பொது நோக்கு மண்டப கட்டுமானத்தால் சர்ச்சை

யாழ்ப்பாணம், ஒக். 15

கண்டாவளை, தட்டுவன் கொட்டி கிராமத்தில் நிர்மாணிக்கப்படும் பொது நோக்கு மண்டபத்துக்கான கூரைக்குத் தரமில்லாத மரங்கள் போடப்பட்டதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

தரமான மரங்கள் என்று கூறித் தரமில்லாத மரங்களும் கொள்வனவு செய்யப்பட்டதாகவும், எனினும் பின்னர் தரமில்லாத மரங்கள் நீக்கப்பட்டதாகவும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

குறித்த மண்டபத்தை 10 மில்லியன் ரூபா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புனரமைக்க நிதி கிடைத்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி, முன்னைய கட்டடத்தின் ஓடுகள் இறக்கப்பட்டுக் கட்டடம் சீரமைக்கப்பட்டது. அதற்கான கூரைக்காக மரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. கொள்வனவு செய்யப்பட்ட மரங்களில் தரமற்ற மரங்களும் காணப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

குறித்த பிரதேச செயலக தொழில்நுட்ப உதவியாளர் கடைக்குச் சென்று மரங்களைப் பார்வையிட்டிருந்தார் என்றும், ஆனால் கொள்வனவு செய்யப்பட்ட மரங்களில் தரமான அதிக விலையுடைய மரங்களுடன் தரமற்ற மரங்களும் அதிக விலைக்குக் கொள் வனவு செய்யப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

குறித்த கட்டடத்துக்கு முதலில் ஒரு ஒப்பந் தகாரர் மூலமாகக் கூரை வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே கொள்வனவு செய்யப்பட்ட மரங்கள் தரமற்றவை என்பது தெரிய வந்ததாகவும் கூறப்பட்டது.

இது தொடர்பில் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு முறையிடப்பட்டது. விடயம் கிராம அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்று பார்த்த கிராம அலுவலர் கட்டடப் பணியைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டு, தரமற்ற மரங்கள் தொடர்பில் பிரதேச செயலருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்று பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயத்தில் கிராம அலுவலரோ கிராம அபிவிருத்திச் சங்கத்தினரோ தலையிடக்கூடாது என்று பிரதேச செயலர் கூறியதாகவும் தெரிவிக்கப் பட்டது.

''கிராம அலுவலரின் அறிக்கை தொடர்பில் ஆராயப்பட்டது. கூரைக்குப் போடப்படவிருந்த மரங்களில் தரமற்ற மரங்களை நீக்குமாறு அறிவுரை கூறிச் சீரமைப்பு வேலைகள் மீளத் தொடங்க அனுமதிக்கப்பட்டது. சில மரங்களே பழையமரங்களாகக்காணப்பட்டன'' என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

''தரமற்ற மரங்களைப் போடுவற்கு நாம் முயற்சிக்கவில்லை. நாம் தான் கட்டடச் சீரமைப் புக்கான ஒப்பந்தத்தைப் பெற்றிருந்தோம். முதலில் கூரை வேலைக்கு ஒப்பந்தம் செய்தவர் பழைய மரங்கள் கொள்வனவு செய்தார் என்று கூறப்பட்டிருந்த நிலையில், பின்னர் வேறு ஒருவருக்கு கூரை வேலைக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அதனை வழங்குவது பொது நோக்கு மண் டபத்தைப் பொறுப் பெடுத்த எமது பணி" என்று கட்டடச் சீரமைப்புக்கான ஒப்பந்தத்தைப் பெற்றிருந்த ஒப்பந்தகாரர் தெரிவித்தார்.

எனினும் குறித்த விட யங்கள் தொடர்பில் அதனுடன் தொடர்புடைய மேலதிகாரிகளுக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. (த-4)

## டெங்கு பரவும் சூழல்; ரூ. 3000 அபராதம்

தென்மராட்சி, ஒக் 15

நீர் நிறைந்த தொட்டிக்குள் நாற்றுப் போடுவதற்காக 80 தேங்காய்களை ஊற வைத்திருந்த குடியிருப்பாளருக்கு டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய ஏதுநிலையில் வைத்திருந்த குற்றத்துக்காக சாவகச்சேரி நீதிமன்றில் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த வாரம் மீசாலை கிழக்குப் பகுதியில் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை யொட்டி டெங்குப் பரி சோதனைகள் மேற்கொண்டபோது கிணற்றுக்கு அருகில் உள்ள தொட்டிக்குள் 80 தேங்காய்களைப் போட்டு நீர் நிறைத்து வைத்திருந்தார் குடியிருப்பாளர்.

பத்து நாள்களாக நீர்தொடர்ந்து தொட்டிக்குள் காணப்பட்டதால் டெங்கு நுளம்பு உருவாகும் ஏது நிலை காணப்பட்டதை பரிசோதனையில் ஈடுபட்டிருந்தோர் கண்டு பிடித்தனர். இந்த நபருக்கு எதிராகச் சாவகச்சேரிப் பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப் பட்டபோது 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது

(த-9)

## வடமத்திய மாகாணம் நோக்கி நேற்று நடைபயணம் ஆரம்பம்



வவுனியா, ஒக். 15

காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் புற்று நோய் சிகிச்சைப் பிரிவை நிர்மாணிப்பதற்காக ஆரம்பமான நடைபயணம், வடக்கிலிருந்து வடமத்திய மாகாணத்தை நோக்கி நேற்றுக் காலை ஆரம்பமானது.

நடை பயணத்தின் எட்டாம் நாள் நிறைவில் – நேற்றுமுன்தினம் அதுவவுனியாவைச் சென்றடைந்திருந்தது. வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து நேற்றுக் காலை 5.30 மணிக்கு மதவாச்சியை நோக்கிய நடை பயணம் ஆரம்பமானது.

இந்த நடைபயணத்தில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் மகேலஜெயவர்த்தன பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## விமர்சனக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஒக்.15

“ழகரம்” சிற்றிதழின் விமர்சனக்கூட்டம் இன்று சனிக்கிழமை பி.பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் இடம்பெற உள்ள இந்த நிகழ்வில் விமர்சன உரைகளை த.அஜந்தகுமார் ந.சத்தியபாலன், சு.குணேஸ்வரன் ஆகியோரும் ஏற்புரையை அ.யேசுராசாவும் நிகழ்த்துவார்கள் .(து)

## வெள்ளி, ஞாயிறு தினங்களில் அறநெறிக் கல்வி கட்டாயம்

### வலியுறுத்துகிறார் சின்மயாமிசன் சுவாமிகள்

யாழ்ப்பாணம் ஒக் 11

வெள்ளிக்கிழமை மாலை நேரங்களிலும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி வரையும் தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதை நிறுத்தி மாணவர்களை அறநெறிக் கல்விகளில் ஈடுபடக்கூடிய சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.

இவ்வாறு சின்மயாமிசன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தின் அறநெறிப் பாடசாலையைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

மாணவர்கள் அனைவரும் அறநெறிப் பாடசாலைகளில் இணைந்து அறநெறி சார்ந்த விடயங்களைப் படிக்கும்போது அவர்களுக்கு மன அமைதி கிடைக்கிறது. எமது மதத்தின் கலாசாரமும் பாதுகாக்கப்படுகின்றது.

எனவே பெற்றோர்கள் இதில் அதிக கவனம் எடுத்து அறநெறிக் கல்வி பற்றி தமது பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறவேண்டும். பிள்ளைகளை ஈடுபடவைக்கவேண்டும். மாணவர்கள் இந்தக் கற்கைநெறியில் பங்குபற்றுவதற்காக வெள்ளிக்கிழமைகளில் மாலை வேலைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் மதிய நேரம் வரையும் தனியார் கல்வி நிலையங்களை நடத்தாது மாணவர்களின் அறநெறிக் கல்விக்கு கல்வி நிறுவனங்களும் உதவவேண்டும்– என்றார்.

இந்த நிகழ்வில் பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(த-4-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உங்களிடமிருந்து எதிர்பார்த்தது இதனையல்ல அதிபர் மைத்திரி!

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் இராணுவப் புலனாய்வாளர்கள் தொடர்பில் இலங்கை அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கும் கருத்து கடும் அதிர்ச்சி ஏற்படுத்தியிருக்கிறது. அவரைப் பற்றி இதுவரையில் உருவாக்கப்பட்ட பிம்பம் இந்தக் கருத்தின் மூலமாக உடைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு மோசமான நிலைமை.

அதிகாரத்தின் மீது ஆசையற்ற ஒரு தலைவராகவே மைத்திரிபால சிறிசேன 2015 அதிபர் தேர்தலில் முன்னிறுத்தப்பட்டார். அவருக்கு முன்னர் அந்தப் பதவியில் இருந்த மகிந்த ராஜபக்ச, அதிகாரங்கள் அனைத்தையும் தன்னிடமே குவிந்திருக்கச் செய்து கொண்டிருந்த நிலையில், அதனை மாற்றி அதிகாரங்களை நாடாளுமன்றத்திற்குப் பகிர்ந்தளிப்பதுடன் இன்னொரு தடவை அதிபராவதற்கு ஆசைப்படாத ஒரு நபரே மைத்திரி என்கிற விம்பம் தேர்தலின்போது ஏற்படுத்தப்பட்டது.

அதற்கூடாகவே "நல்லவர்" என்கிற பெயரைச் சிறுபான்மை இனங்கள் மத்தியிலும் மைத்திரி சம்பாதித்துக்கொண்டார். மீண்டும் பதவிக்கு வரும் ஆசை அற்றவர் என்பதாலும், நிறைவேற்று அதிபர் பதவியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு இணங்கியவர் என்ற வகையிலும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டு அரசு ஒன்றை உருவாக்க இணங்கியவர் என்ற வகையிலும், மைத்திரி நடுநிலையானவராக, பக்கச்சார் பற்றவராக, நீதியோடு செயற்படுபவராக இருப்பார் என்று மக்கள் நம்பினர். அதனாலேயே அவர் நாட்டின் அதிபராவதற்கு ஆதரவையும் வழங்கினர்.

இலங்கையின் அரசியல் களத்தில் இனப்பிரச்சினை உள்ளிட்ட முக்கிய சிக்கல்களில் நேர்மையுடன் செயற்படக்கூடிய ஒருவர் மீண்டும் அரசியல் அதிகாரத்தைப் பிடிப்பது முயற்கொம்பு. இதன் மறுதலை என்னவென்றால், மீண்டும் அதிகாரத்திற்கு வரும் ஆசையைக் கொண்டிருக்கக்கூடிய எவரும் இந்த விடயங்களில் நேர்மையுடன் நடந்துகொள்ளத் தயங்குவர் என்பதே. எனவேதான் மீண்டும் அதிகாரத்திதுக்கு ஆசைப்படாத மைத்திரி, இனப் பிரச்சினை உள்ளிட்ட விடயங்களை நேர்மையுடன் கையாளுவார் என்கிற நம்பிக்கை ஏற்பட்டது.

இவையெல்லாவற்றையும் சிதறடித்து, மக்களின் நம்பிக்கைகள் சிதையும் வகையிலான கருத்தையே இப்போது மைத்திரி தெரிவித்திருக்கிறார். கோத்தபாய ராஜபக்சவையும் இராணுவ அதிகாரிகளையும் நீதிமன்றத்தில் காவலில் வைத்திருந்தமை குறித்தும் இராணுவப் புலனாய்வாளர்கள் 6 மாதங்களாக காவலில் இருப்பது குறித்தும் அதிருப்தி அடைந்தன் மூலம், சட்டத்துக்கு முன்னால் அனைவரும் சமன் என்ற கொள்கையைத் தான் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை என்று மைத்திரி வெளிக்காட்டியிருக்கிறார். இது ஒரு அரச தலைவர் கொண்டிருக்கக்கூடிய நேர்மையான கொள்கையல்ல.

அத்தோடு நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் பக்கச்சார்பாக, அரசியல் ரீதியில் செயற்படுகிறார்கள் என்ற ரீதியில் அவர் தெரிவித்திருக்கும் கருத்தையும், இது போன்ற விடயங்களில் அவர் மேற்கொள்ளும் அரசியல் தலையீடாகவே பார்க்கவேண்டும். சிவில் சமூக அமைப்புக்களும், அரசியல் கட்சிகளும் மைத்திரியின் இந்தக் கருத்துக்களுக்கு எதிராகப் பலத்த கண்டனத்தைத் தெரிவித்திருப்பதும் இதனையே காட்டுகிறது.

சிவில் சமூக அமைப்புகளின் கருத்துக்கள் அனைத்துமே, மைத்திரியிடமிருந்து இதுபோன்ற கருத்து வெளிப்பாட்டை எதிர்பார்க்கவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. அதுவேதான், உண்மையும்கூட. அனைத்து மக்களும் சேர்ந்து மகிந்தவை வீழ்த்தி அவரைப் பதவிக்குக் கொண்டு வந்ததன் நோக்கம் இதுவல்ல, என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும். அவரிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டதும் இதுவல்ல.

தன் மீதான நம்பிக்கையை அவர் சிதறடித்து விடக்கூடாது.

# ஈழத் தமிழர்களின் அழிவில் இந்தியாவுக்குப் பெரும் பங்கு

மு.ஈழத்தமிழ்மணி

**1987ஆம்ஆண்டு ஒக்ரோபர் முதலாம் நாளிலிருந்து 1989ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்வரை ஈழத்தமிழர்கள் இந்தியப்படைகளின் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்டு தமிழர்கள் உயிரிழந்தும், சித்திரவதைகளுக்குள்ளாகியும், பெண்கள் பலர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான சம்பவங்களும் அரங்கேறிய காலகட்டமாகும்.**

இலங்கையைப் பொறுத்தவரையில் ஈழத்தமிழ் மக்களுக்கு ஒக்ரோபர் மாதம் பத்தாம் திகதி முக்கியமானதாகும். இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்த நாளாகவும் இதனைக் குறிப்பிடலாம். விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப் படைகளுக்கும் இடையே போர் மூண்ட நாளாகவும் இது கொள்ளப்படுகிறது.

இலங்கை இராணுவத்தினரும், சிங்கள இனவாதிகளும் ஈழத் தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்தி அவர்களின் உரிமைகளைப் பறித்து, உயிர்களைத் துவம்சம் செய்து வடக்கு, கிழக்கில், தமது சொந்த நிலத்தில் வாழமுடியாதவாறு அடக்குமுறைகளை அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு மேற்கொண்டிருந்த அந்த வேளையில், தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக அமைதிப்படை என்ற பெயருடன் இலங்கைக்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான இந்தியப் படையினர், தமிழர் தாயகமான வடக்கு, கிழக்குப் பிரதேச நிலை கொண்டு, தமிழர்களுக்கு எதிராகப் புரிந்த கொடூரமான செயற்பாடுகள், அநியாயங்கள் ஏராளமானவையாகும்.

இலங்கை, இந்திய ஒப்பந்தம் இரண்டு நாட்டுத் தலைவர்களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட பின்னர், இந்திய அமைதிப் படையினரை இந்தியா இலங்கைக்கு அனுப்பிவைத்திருந்தது.

இந்தியப் படையினர் இலங்கை வருவதற்கும் , இந்தியப் படையினர் நடத்திய போருக்கும் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசே பொறுப்பாகும். தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பத்திலேயே அழிப்பதற்காக இலங்கை அரசு முதலாவது போரை 1987ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றுகின்ற திட்டத்துடன் ஆரம்பித்தது. அரசுப் படைகள் அந்தப் பிரதேசத்தில் கடுமையான போரை நடத்தியதுடன், தமது கட்டுப்பாட்டில் வடமராட்சியைக் கொண்டு வந்த பின்னர், திடீரென விடுதலைப் புலிகள் நெல்லியடியில் படையினர் நிலை கொண்டிருந்த முகாம் மீது கரும் புலித் தாக்குதலை நடத்தியதுடன், வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கையானது முற்றுப் பெற்றிருந்தது.

[illegible] தியா, தமிழ் மக்களைக் காப்பாற்றுகின்றோம், பாதுகாப்பளிக்கின்றோம் என்று கூறிக் கொண்டு, இந்தியப் படைகளை தமிழர் பிரதேசங்களுக்கு அனுப்பிவைத்தது. இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் இனப் பிரச்சினைக்குரிய தீர்வு சம்பந்தமாகக் கவனமெடுக்கப்பட்டது.


இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கம், இலங்கை அரசின் நலன்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து வகுக்கப்பட்டிருந்தது. இந்தியாவும் தனது நலன்களில் இலங்கை அரசால் பாதிப்புக்கள் ஏற்பட்டுவிட ஏதேனும் விடக்கூடாது என்பதிலும் கவனமாக இருந்தது.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தை இலங்கைத் தமிழர்கள் இன்றும் எவ்வாறு நினைவில் இரை மீட்கின்றனர் என்பது இந்தியா தமிழ் மக்களுக்குச் செய்த பெரிய துரோகங்களை மூன்று விதமாகப் பிரித்தாராயக் கூடியதாக உள்ளது.

1987ஆம்ஆண்டு ஒக்ரோபர் முதலாம் நாளிலிருந்து 1989ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்வரை, ஈழத்தமிழர்கள் இந்தியப்படைகளின் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்டு, தமிழர்கள் சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டும், கொலை செய்யப்பட்டும் பெண்கள் பலர் பாலியல் வன்புணர்வுகளுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்களும் அரங்கேறிய காலகட்டமாகும்.

1987ஆம் ஆண்டு காலப்பகுதியான நடு ஆண்டில் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்பும் இந்தியப்படைகள் இலங்கைக்கு வந்திறங்கிய பின்னர், எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன என்பதை நன்கு சிந்தித்தால், இந்தியாவா? இப்படி ஈழத்தமிழருக்கு கொடுமைகளை இழைத்தது என்பது நன்கு புரியும். இன்று இந்தியப் படைகள் செய்த கொடுமைகள் இன்றைய தமிழ் மக்களுக்கு வியப்பையும், அச்சத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தலாம். இலங்கை இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர், சுதுமலையில் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை தமிழ் மக்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொரு கூட்டம் நடைபெற்றது. புலிகளின் தலைவரான வே.பிரபாகரன் தமிழீழ மக்களின் ஒரே பாதுகாப்புச் சாதனமாக இருந்து வந்த ஆயுதங்களை இந்திய அரசு. எம்மிடத்திலிருந்து பெற்றுக்கொள்வதிலிருந்து தமிழீழ மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது இந்த பொறுப்பு மாற்றத்தைத் தான் குறிக்கின்றது. நாம் ஆயுதங்களைக் கையளிக்காது போனால் இந்திய இராணுவத்துடன் மோதும் துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை. தமிழீழ இலட்சியத்துக்காகவே நான் தொடர்ந்து

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடுவேன். தேர்தலில் பங்கு பற்றப்போவதில்லை என்றார். என்ன நடந்தது? விடுதலைப் புலிகளின் தலைவரின் உத்தரவுக்கமைய ஆயுதங்கள் பலாலி இராணுவ முகாமில் வைத்து இந்திய இராணுவத்திடம் கையளிக்கப்பட்டன. இந்தியப் பிரதமரான ராஜீவ்காந்தி பிரபாகரனுக்கு கொடுத்த எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேறப்படவில்லை. மாறாக இந்திய அரசு தமிழ் பிரதேசங்களில் தமிழ் ஆயுதக் குழுக்களை ஏற்படுத்தி துரோகக் குழுக்களாக மாறி, தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பது, அவ்வமைப்புக்கு ஆதரவானவர்களைக் கொன்றொழிப்பது போன்ற படுதுரோகத்தனமான செயல்களை செய்வதற்கு துணை போனது.




இந்தியப்படைகளின் ஆதரவோடு 'மண்டையன் குழு' என்ற துணை இராணுவ இயங்கிய போது அது, தமிழ் மக்கள் மத்தியில்மரணஅச்சுறுத்தல்களையும், கடும் பயத்தையும் ஏற்படுத்தியிருந்தது. விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் இந்திய அரசின் நோக்கத்தை விளங்கிக் கொள்ள ஆரம்பித்தார்கள். விடுதலைக்கான போரை அடுத்த கட்டத் துக்கு நகர்த்தவேண்டிய நிலைக்கு புலிகள் அமைப்பும் தள்ளப்பட்டது. இந்தியாவின் போலியான வேசத்தை மக்களுக்கு தோலுரித்துக் காட்டுவதற்கு இலங்கை–இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்த ஐந்து விடயங்களை நிறைவேற்றவேண்டும், அப்பொறுப்பிலிருந்து இந்திய அரசு விலகி நடக்கமுடியாது என்று கூறி போராளியான இராசையா பார்த்தீபன் என்ற திலீபன் உணவு ஒறுப்புப் போராட்டத்தை கையில் எடுத்தான்.

ராஜீவ் காந்தியால் தமிழர் தரப்புக்கு வழங்கப்பட்டிருந்த எந்த விதமான உறுதிமொழிகளும் நிறைவேற்றப்படவில்லை. கால அவகாசமும் இந்தியாவுக்கு வழங்கப்பட்டது. அதனையும் உதாசீனம் செய்திருந்தது இந்தியா. தமிழ் மக்களுடைய வேண்டு கோள்களுக்கு இந்திய அரசிடமிருந்து எந்தவித பதில்களும் கிடைக்காததனால் விடுதலைப் புலிகளது யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, 15.9.1987ஆம் ஆண்டு சாகும் வரையிலான உணவு ஒறுப்பை ஆரம்பித்தார். திலீபனுடைய ஐந்து அம்சக் கோரிக்கைகள் இந்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்படவுமில்லை, கவனத்தில் கொள்ளப்படவுமில்லை. காந்தீய தேசமென புகழப்பட்ட இந்தியா ஜனநாயக நாடானது. இறுதியில் தியாகி திலீபனை சாகடித்து, தமிழ் மக்களை நோகடித்து வேதனைக்குள்ளாக்கியது. மேலும், பல சம்பவங்களை தமிழருக்கெதிராக கட்டவிழ்த்துக் கொண்டே போனது. 2.10.1987ஆம் ஆண்டு பருத்தித்துறைக் கடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 போராளிகள் இலங்கையில் பயணித்துக் கொண்டிருந்த வேளை இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. புலிகளின் கடந்த கால நடவடிக்கைகள் எதற்காகவும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படமாட்டீர்கள் என அப்போதைய அரசினால் எழுத்துமூலமான உத்தரவாதக்கடிதம் விடுதலைப்புலிகளுக்குவழங்கப்பட்டிருந்தது. ஜனாதிபதியினால் புலிகள் அமைப்பின் போராளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்ட பின்னரும், அதனையும் மீறி 12 போராளிகளையும் கைது செய்யப்பட்டு, கொழும்புக்கு மேலதிக விசாரணைகளுக்காக கொண்டு செல்வதற்கு தயார்ப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு போராளிகள் சயனைற் என்ற நஞ்சு வில்லையை உட்கொண்டு உயிர் துறந்திருந்தனர். இந்திய அரசினது துரோகத்தால் 12 போராளிகள் வீரச்சாவைத் தழுவினர்.

**பன்னிரு புலிகளின் வீரச்சாவுக்குப் பின்னர் கொழும்பில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் பந்த், இந்தியத்தூதுவர் டிக்சிற், இந்திய இராணுவத்தின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சுந்தர் ஆகியோர் கொண்ட குழுவும், அப்போதைய ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும்,தேசிய பந்தோபஸ்து அமைச்சரான லலித் அத்துலத்முதலி ஆகியோரும் தமிழினத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது, விடுதலைப் புலிகளை அழிப்பது போன்ற திட்டங்களை வகுத்தக் கொண் டிருந்தனர்.**

பன்னிரு புலிகளின் வீரச்சாவுக்குப் பின்னர் கொழும்பில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் பந்த், இந்தியத்தூதுவர் டிக்சிற், இந்திய இராணுவத்தின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல்சுந்தர் ஆகியோர்கொண்ட குழுவும், அப்போதைய ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும்,தேசிய பந்தோபஸ்து அமைச்சரான லலித் அத்துலத்முதலிஆகியோரும்ஒன்றுகூடி தமிழினத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது, விடுதலைப் புலிகளை அழிப்பது என்பவற்றுக்கான திட்டங்களை வகுத்தக் கொண்டிருந்தனர். இந்தியா புரிந்த படுகொலைகள் யாவும் தமிழர் தரப்பால் இன்று வரை முழுமையாக வெளிக் கொண்டு வரப்படவில்லை. ஈழத்தமிழர் வரலாற்றில் இந்தியா, தமிழினத்திற்கான உரிமைகளுக்கு ஆதரவாக என்றுமே செயற்படமாட்டாது தமிழினத்தவர்களைப் பெருமளவில் கொன்றொழித்த வரலாறே இந்தியா சுமந்து கொண்ட பாவச் செயலாகும்.

# இனிய கீர்த்தனைகள் இதயத்துக்கு இதமானவை

இசை கேட்டால் புவி அசைந்தாடும். இசையின் இனிமை இதயத்தை இதமாக்கி இன்ப உணர்வைத் தருவது. அபூர்வராகமாய் தாயின் தாலாட்டில் ஆரம்பமாவது அது. இறுதிப் பயணத்தின்போது பறையும் ஒப்பாரியும்கூட இசையின் வடிவமே. சீறிவரும் பாம்பையும் ஆடவைப்பது மகுடியின் ராகமே. இறைவடிவங்களின் திருக்கரங்களில் உடுக்கு, புல்லாங்குழல், வீணை போன்ற வாத்தியங்கள் அமையப்பெற்றிருப்பது இறைவன் இசை பிரியம் கொண்டவன் என்பதற்கு எடுத்துக்காட்டாகும். இனிய கீர்த்தனைகள் இறைவன் சந்நிதியில் ஓதுவதன் மூலம் அவனது கமலப் பாதங்களை உணரும் பாக்கியம் கிடைக்கும். ஆலயங்களில் நாதஸ்வர, தவில் மேதைகளின் இசையால் கிட்டும் இனிமை தனித்துவமானது. மறைந்து போன மேதைகளின் இசை ஞானமும் இறைபக்தியும், தொழிலின் நேர்த்தியும் இன்றும் புகழோடு மக்கள் மத்தியில் பேசப்படுபவை. இவர்களின் நாயனங்களின் நளினமும் தாளத்துக்கு ஏற்ற முகபாவங்களும் ரசிகர்களுக்கு இனிய விருந்தாகும். இன்றைய சூழ்நிலையில் ஆலயங்களில் நாதஸ்வரக் கச்சேரிகள் பல செய்து தங்கள்திறமையை வெளிக்கொணரும் இளம் கலைஞர்கள் பாராட்டுக்குரியவர்கள். என்றாலும், ஆலயங்களில் சினிமாப் பாடல்களும் தத்துவப் பாடல்களும் ஒலிப்பது ஏற்புடையதல்ல. உதாரணம்: சமரசம் உலாவும் இடமே, பரமசிவன் கழுத்தில் இருந்த பாம்பு சொன்னது போன்ற பாடல்களின் கருத்துக்களைப் புரிந்தோ புரியாமலோ நாயனங்களில் இசைப்பதால் புனிதம் இல்லாத நிலை தோற்றுவிக்கப்படுவதோடு, இன்றைய கலியுகத்தில் கண்டதே காட்சி கொண்டதே கோலமாய் நாஸ்திகம் பேசியும், இறையருளின் அர்த்தம் புரியாது வீணே பொழுதை போக்கும் இன்றைய சில இளைஞர்களுக்கு தீனி போடுவதாயும் அமைகிறது. விநோதமாய் வாழும் எமது சமுதாயம் பற்றி சிறிது சிந்தித்து ஆலய நிர்வாகமும் இது பற்றி கருத்தில் கொள்வதோடு, பக்திப் பாடல்கள் இனிய கீர்த்தனைகள் ஒலிப்பதற்கு வழி செய்வது சமய ஒழுக்க நெறி முறைகளுக்கு விழிப்புணர்வையும், இசைக்கும் கலைஞர்கள் மேலும் இசைஞானமும் கௌரவமும் அமோக வரவேற்புடன் பாராட்டைப் பெறுவதோடு, தொழில் நேர்த்தியுடன் நடைபெற இறையருளும் ஆசியும் கிடைக்கப்பெறும்.

செல்வா சுப்பிரமணியம் கல்வயல். சாவகச்சேரி.

# மனம்போன போக்கில் தமிழ்ப்பெண்கள் நடந்து கொள்வது ஏற்புடையதல்ல

புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தை அமைப்பதற்கான நிதியைச் சேகரிக்கும் பொருட்டு இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரர் மகேல ஜெயவர்த்தனா தலைமையில் நடைபவனியொன்று இடம்பெற்று வருகின்றது. இந்த நடைபவனி பருத்தித்துறையில் இடம்பெற்றபோது இளம் பெண்ணொருவர் மகேலாவைக்கட்டி அணைத்துத் தனது அன்பை வெளிப்படுத்தியதாகச் செய்திகள் வெளிவந்தன. இது தொடர்பான படங்களைக் காண நேர்ந்த போது முகத்தைச் சுளிக்க வைத்தது. அந்தப் பெண் எந்த நோக்கத்துக்காக அவ்வாறு செய்தார் என்பது தெரியவில்லை. சிலவேளை சகோதர பாசத்துடனும் அவர் மகேலவைக்கட்டி அணைத்திருக்கலாம். ஆனால் பொதுவாகப் பார்க்கும்போது தமிழ்ப்பெண் ஒருவர் பொது இடமொன்றில் இவ்வாறு நடந்து கொண்டதை மனம் ஏற்க மறுக்கின்றது.

தமிழர்களுக்கென்று சில பண்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. அதில் பெண்களின் ஒழுக்கம் மிக முக்கியமானது. இதைக் கடைப்பிடிக்காத பெண்கள் தவறாகவே பார்க்கப்படுவார்கள். ஆகவே பெண்கள் எந்த விடயத்தில் ஈடுபடும்போதும் கவனமாகச் செயற்பட வேண்டும். எமது பண்பாட்டைத் தொலைத்து விட்டு நாம் தமிழர்களென வாழ்வதில் பயனொன்றுமில்லை. இளம் சந்ததியினர், குறிப்பாகப் பெண்கள் மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும். அவர்களை மையமாகக் கொண்டே எமது பண்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே தமிழ்ப்பெண்களே! மனம் போன போக்கில் செயற்படுவதை முற்றாகவே நிறுத்திக் கொள்ளுங்கள்.

க.ரதிமலர். நெல்லியடி.

[illegible] தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். [illegible] விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் சுரிக்க இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப் போருக்கு அடித்தளம் இடுகிறது ரஷ்யா

## புலம்பெயர் ரஷ்யர்களை தாயகம் திரும்பவும் அழைப்பு



மொஸ்கோ, ஒக். 15
ரஷ்யாவில் இருந்து புலம் பெயர்ந்து வாழும் ரஷ்யர்களை தாயகம் திரும்புமாறு ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடின் அழைப்பு விடுத்தார். அவரின் இந்த முடிவு ரஷ்யா மூன்றாவது உலக யுத்தத்துக்குத் தயாராவதைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது.

சிரிய விவகாரத்தில் உலக நாடுகள் பலவும் தற்போது ரஷ்யாவுக்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டுள்ளன. அலெப்போ நகரில் ரஷ்ய அரசு முன்னெடுத்து வரும் கொடூரமான தாக்குதல்களை நிறுத்துமாறு உலக வல்லரசான அமெரிக்காவும், ஐக்கிய நாடுகள் சபையும் பகிரங்கமாகக் கேட்ட போதிலும் ரஷ்யா அவற்றுக்குக் கட்டுப்படவில்லை. அலெப்போவில் கொண்டு சென்று அணுவாயுத ஏவுகணைகளை நிறுத்தி பதற்றத்தை அதிகரித்துள்ளதே தவிர குறைக்கவில்லை. ஜேர்மன் உள்ளிட்ட நாடுகள் பலவும் ரஷ்யாவின் போக்கை வன்மையாகக் கண்டித்தன. ரஷ்யா தனது நிலைப்பாட்டைக் கைவிட வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் பிரான்ஸ் கொண்டுவந்த திட்டத்துக்குப் பேராதரவு கிடைத்தது. ஆனால் தனது வீற்றோ அதிகாரத்தால் பிரான்ஸை மண் கௌவச் செய்தது ரஷ்யா. இதனையடுத்து பிரான்ஸும் ரஷ்யாவுடன் முரண்படுகிறது. பாப்பரசரும் ரஷ்யாவுக்குத் தனது கண்டனத்தைத் தெரிவித்து மக்கள் வெளியேறும் வரையிலாவது போரை நிறுத்த வேண்டும் என்று கேட்டிருந்தார். பிரிட்டன் அயலுறவுத்துறை அமைச்சர் போறிஸ், அலெப்போவில் ரஷ்யாவின் தாக்குதலுக்கு எதிராக, பிரிட்டனில் உள்ள ரஷ்ய தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார். மொத்தத்தில் ரஷ்யாவுக்கு எதிராக ஒட்டுமொத்தத் தலைமைகளும் பகைமை பாராட்ட ஆரம்பித்துள்ள நிலையில், தனக்கு எதிரான பதற்ற நிலையைக் கருத்தில் கொண்டு மூன்றாம் உலகப் போருக்கு அந்த நாடு தயாராகி வருகிறது.

முன்னதாக, மொஸ்கோவில் வசிக்கும் 40 மில்லியன் மக்களின் ஆதரவுடன் நான்கு நாள்களாக 2 லட்சத்துக்கும் அதிகமான இராணுவ சிப்பாய்கள் அங்கு அணுவாயுதப் பயிற்சியில் ஈடுபட்டனர். கிட்டத்தட்ட 15 மில்லியன் மக்கள் பதுங்கக்கூடிய சுரங்கங்களையும், பதுங்கு குழிகளையும் மொஸ்கோவில் கட்டுமாறு புடின் பணித்திருந்தார். தற்போது ரஷ்யர்களை நாடு திரும்புமாறு அவர் அறிவித்துள்ளார். இவை எல்லாவற்றையும் ஒருசேரப் பார்த்தால் ரஷ்யா மூன்றாம் உலகப் போருக்குத் தயாராகி விட்டதாக பன்னாட்டு ஊடகங்களும், ரஷ்ய ஊடகங்களும் செய்தி வெளியிட்டன. வெற்றிகரமான அணுவாயுதங்களைக் கைவசம் வைத்துள்ள நாடுகளின் பட்டியலில் ரஷ்யாவுக்கு பிரதான இடமுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)

# மாலைதீவு விலகியது

பொதுநலவாய அமைப்பிலிருந்து விலகுவதாக நேற்றுமுன்தினம் அறிவித்தது மாலைதீவு.

மாலைதீவின் ஜனாதிபதியாக இருந்த மொகமட் நஷீத் கடந்த 2012ஆம் ஆண்டு பதவி விலகினார். அவரது ஆட்சிக் காலத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அவர்மீது வழக்குத் தொடரப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையில் நஷீத் ஊழல் மோசடியில் ஈடுபட்டமை உறுதியானதால் அவருக்கு 17 ஆண்டுகாலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் உடல்நலக் குறைவுக்காக சிகிச்சை பெற லண்டன் சென்று அங்கேயே தங்கிவிட்டார். மாலைதீவில் அவரது ஆதரவாளர்கள் மீது அரச தரப்பால் பல்வேறு வழக்குகள் தொடரப்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன. எனவே, இதை நிறுத்தும்படி பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கேட்டுக்கொண்டார். இந்த நிலை தொடர்ந்தால் மாலைதீவு பொதுநலவாய அமைப்பிலிருந்து நீக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில் பொதுநலவாய அமைப்பில் இருந்து விலகுவதாக மாலைதீவு நேற்றுமுன்தினம் அறிவித்தது. (ம-ரி4)





# 21 மாணவிகளை விடுவித்தது போகோ ஹரம் ஆயுதக் குழு

அபுஜா, ஒக்.15
போகோ ஹரம் அமைப்பால் கடத்தப்பட்ட 200 பாடசாலை மாணவிகளில் 21 மாணவிகள் நேற்றுமுன்தினம் விடுவிக்கப் பட்டனர்.

நைஜீரியாவின் சிக்பொக் பகுதியில் கடந்த 2014 ஆம் ஆண்டு பரீட்சை எழுதிக்கொண்டிருந்த 200 பாடசாலை மாணவிகளை அந்த அமைப்பு கடத்திச் சென்றது. அவர்களை மீட்க வேண்டும் என்று பலரும் குரல் கொடுத்தனர். அமெரிக்கா உதவிக்குக் களத்தில் இறங்கிய போதிலும் மாணவிகளை அந்த அமைப்பு எங்கு மறைத்து வைத்திருக்கிறது என்பது புரியாத புதிராகவே இருந்தது. ஆனால் அவர்கள் உயிருடனேயே இருப்பதாக போகோ ஹராம் ஆயுதக் குழு தெரிவித்தது.

மாணவிகளை விடுவிப்பது தொடர்பாக நைஜீரிய அரசு, ஆயுதக் குழு இரு தரப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. சுவிற்சர்லாந்தும், செஞ்சிலுவைச் சங்கமும் நடு நிலைமை வகித்தது. ஆயுதக் குழுவின் பேரத்துக்கு நைஜீரிய அரசு ஏற்றுக்கொண்டதையடுத்து முதற்கட்டமாக 21 மாணவிகள் விடுவிக்கப்பட்டனர். ஏனைய மாணவிகளை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நைஜீரியப் பிரதமர் ஜெமி ஒசின்பையோ தெரிவித்தார். (ம-ரி4)

# பெர்முடாவை சுழற்றியடிக்க வருகிறது புயல்

பெர்முடாவை நோக்கி அதிபயங்கரமான புயலொன்று நகர்ந்து வருவதாக அந்த நாட்டின் தேசிய சூறாவளி மையம் எச்சரித்தது.

பெர்முடாவின் தென்மேற்குப் பகுதியில் இருந்து கிட்டத்தட்ட 290 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொண்டுள்ள குறித்த புயலுக்கு 'நிகோல்' எனப் பெயரிடப்பட்டது. இந்தப் புயலானது



பெர்முடாவின் கரையைக் கடக்கும்போது மணிக்கு 215 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என்று தேசிய சூறாவளி மையம் கணித்துள்ளது. அவ்வாறு திட்மிட்ட வேகத்தில் 'நிகோல்' கடந்தால், அது அண்மையில் ஹைட்டியை புரட்டிப் போட்ட 'மத்தியூ' புயலை விட வேகமானதாக இருக்கும். மத்தியூ புயல் மணிக்கு 205 கிலோ மீற்றர் வேகத்திலேயே ஹைட்டியைக் கடந்தது. (ம-ரி4)

# சீனாவில் அதி... முதியவர்கள் ...

பீஜிங், ஒக். 15
சீனாவில் தினமும் ஆயிரத்து 300 முதி...
சீன உள்ளக அமைச்சின் ஆய்வில் வெ...
சீனாவில் முதியவர்கள் எதிர்கொள்ளு...
நாட்டின் உள்ளக அமைச்சால் ஆய்வொ...
65 வயதுக்கு மேற்பட்டவர்களாக 114 மி...
தம் 5 லட்சம் முதியவர்கள் காணாமற்போ...
தொடர்பாக வரும் முறைப்பாடுகளில் 8...
விட ஏராளமான பிரச்சினைகளை முதி...
கின்றனர். பெற்றோர்கள் ஒரு பிள்ளையே...
முதியவர்களை அதிகம் கொண்ட நாடாக...
சிக்கல்கள் நிறைந்த நாடாகவும் சீனா உ...
மில்லியன் மக்கள் 65 வயதைக் கடந்...
ஆய்வு மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியா – ரஷ்யா இடையே காமோவ் ஹெலி ஒப்பந்தம்

தியா, ரஷ்யா நாடுகளிடையே காமோவ் 26ரி வகைக் ஹெலிகளை உற்பத்தி யும் ஒப்பந்தம் கைச்சாத்தாகவுள்

ஸ் உச்சி மாநாடு கோவாவில் நேற்று தினம் ஆரம்பித்தது. எதிர்வரும் யிற்றுக்கிழமை வரை நடைபெற ள இந்த மாநாட்டில் இந்திய-ரஷ்ய களுக்கிடையே காமோவ் 226 டி வகைக் ஹெலிகளைத் தயாரிக்கும் கூட்டு ஒப்பந்தத்தில் இணக்கம் ஏற்பட லாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மொஸ்கோ சென்றிருந்த போது காமோவ் வகையி லான ஹெலிகளை இணைந்து உற்பத்தி செய்வது குறித்துக் கலந்துரையாடப் பட்டது. (ம-ரி4)

# தமிழ்நாட்டு முதலமைச்சரின் துறைகள் கைமாற்றப்பட்டன பன்னீர்செல்வத்திடம்



தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெய லலிதா நீண்ட நாள்களாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவரது துறைகள் அனைத் தும் தற்காலிகமாக தமிழ் நாட்டு நிதித் துறை அமைச்சரான ஓ.பன்னீர்செல் வத்திடம் கைமாற்றப்பட்டன.

தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெய லலிதா உடல்நலக் குறைவால் கடந்த மாதம் 23 ஆம் திகதி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இதனால் அவரின் நேரடிக் கட்டப்பாட்டிலுள்ள துறை களில் தொய்வு நிலை ஏற்பட்டது. ஏனைய அமைச்சர்களும், மூத்த அதி காரிகளும் முதலமைச்சரின் விடயம் தொடர்பாக கவனம் செலுத்தியதால் வேறுபல நிர்வாகச் சிக்கல்களும் ஏற்பட்டன. அவர் இயல்பு நிலைக்குத் திரும்ப இன்னும் பல வாரங்கள் ஆகும் எனத் தெரி விக்கப்பட்டதால் நிர்வாகச் சிக்கல்களைக் கருத் திற் கொண்டு முதலமைச்சரின் நேரடிக் கண் காணிப்பின் கீழ் இருந்த துறைகள் தமிழ்நாட்டு நிதித்துறை அமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வத்திடம் ஒப்படைக்கப்பட்டன. முதலமைச்சர் அலுவலகக் கோப்புக்களில் கையொப்பமிடவும் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. (ம-ரி4)

# வரலாறு படைத்தது தென்னாபிரிக்கா

ர்ஜ், ஒக்.15

வதுமாக சூரிய ஒளியில் இயங்கும் ான நிலையத்தை அமைத்தது தென்னா க்கா. இதன்மூலம் குறித்த வகை விமான லயத்தை உருவாக்கிய முதல் ஆபிரிக்க அல்லது ஆசிய கண்டத்தைத் தவிர்த்து னய கண்டத்தில் அமையப்பெற்ற முதல் ான நிலையம் என்ற வரலாற்றுச் சாத ாயை தென்னாபிரிக்கா படைத்தது.

தியாவின் கேரளாவில் உள்ள கொச்சின் ான நிலையம் சூரிய சக்தியில் இயங்கும் ல் விமான நிலையமாகவும் ஒரே விமான லயமாகவும் இதுவரை இருந்தது. போது இத்தகைய ஏக சாதனை இந்தி விடமிருந்து பறிக்ககப்பட்டுள்ளது. தென் பிரிக்கா, ஜோர்ஜ் நகரில் சூரிய சக்தியில் ங்கக்கூடிய விமான நிலையத்தை உரு க்கியுள்ளது. பி.டபிள்யு.போதா என்பதே குறித்த ான நிலையத்தில் பெயர்.



ானநிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள சூரியக் கலன்கள் 750 கிலோ வாற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன.

விமான நிலையத்தில் செயற்பாட்டுக்கு 400 கிலோ வாற்ஸ் மின்சாரமே போதுமாக உள்ள நிலையில் மீதமுள்ள மின்சாரம் வீடுகளின் தேவைக்காக வழங்கப்படுகின்றன. (ம-ரி4)

# தாய்லாந்து மன்னர் நேற்றுமுன்தினம் இறப்பு

பாங்கொக், ஒக். 15

உலகில் அதிக காலம் ஆட்சி செய்த மன்னர் என்ற பெருமை பெற்ற தாய்லாந்து மன்னர் பூமிபால் தனது 88 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் சாவடைந்தார்.

தாய்லாந்து நாட்டின் மன்னர் பூமிபால், அதுல்யதேஜ் தனது 18 ஆவது வயதில், 1946 ஆம் ஆண்டு மன்னராக முடி சூடி னார். சாக்ரி வம்சத்தைச் சேர்ந்த அவர் ஒன்பதாம் ராமர் எனவும் அறியப்பட்டிருந்தார். 70 ஆண்டு காலம் மன்னராக இருந்து, மக் களின் ஏகோபித்த அபிமானத் தையும், அன்பையும் ஒரு சேரப் பெற்றவர். கடவுளின் அவதார மாக அவரைப் பார்த்த மக்கள், நாட்டை ஒற்றுமைப்படுத்தும் சக்தியாக அவரை நம்பினர்.

கடந்த சில ஆண்டுகளாக பூமி பால் உடல்நலம் பாதிக்கப்பட் டிருந்தார். பொது நிகழ்ச்சி களில் தோன்றாமல் இருந்து வந்தார். உடல் நலக்குறை வால் 3 ஆண்டுகளுக்கு முன் னதாக 2014 ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி, பாங்கொக்கில் உள்ள சிறிராஜ் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டு சிகிச்சை பெற்று வந் தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை யன்று உடல்நிலை மோசமா னது. அவரது உடல்நிலை ஸ்திர மற்று இருப்பதாக அரண்மனை தெரிவித்தது. மக்கள் அவர் சேர்க் கப்பட்டிருந்த மருத்து வமனை முன்பாகக் கூடி கண்ணீரோடு பிரார்த்தனை செய்து வந்தனர். சிகிச்சை பயனின்றி நேற்று முன் தினம் மதியம் (இலங்கை நேரப் படி) சாவடைந்தார். மன்னரின் மறைவையடுத்து அடுத்த ஒரு வருடத்துக்கு தாய்லாந்தில் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. (ம-ரி4)

# திகரித்துவரும் பிரச்சினை

தியவர்கள் காணாமற் போகின்றனர் என வெளிப்பட்டது.

ளும் பிரச்சினைகள் தொடர்பாக, அந்த வான்று நடத்தப்பட்டது. இதன்படி நாட்டில் மில்லியன் பேர் வாழ்கின்றனர். வருடாந் போகின்றனர். காணாமற் போகிறவர்கள் 80 சதவீதம் முதியவர்கள் ஆவர். இதை தியவர்கள் தினம்தினம் எதிர் கொள்ளு யே பெறவேண்டும் என்ற கொள்கையால், ாகவும், முதியவர்கள் தனித்து விடப்படும் ா உள்ளது. 2030 ஆம் ஆண்டில் 400 டந்தவர்களாக இருப்பர் என்றும் அந்த . (ம-ரி4)



# அரசுக்கு ஆதரவாகவும் கொலம்பியாவில் பேரணி

பொகோட்டா, ஒக். 15

கொலம்பியாவில் அரசுக்கும் ஆயுதக் குழுவுக்கும் இடையில் இடம்பெற்ற சமாதான உடன்படிக்கையை ஆதரிக்கும் வகையில் ஆயிரக்கணக்கான மக்கள் பேரணியை நடத்தினர்.

கொலம்பியாவில் கடந்த 52 வருடகாலமாக அரசுக்கும், ஆயுதக்குழுவுக்கும் இடையில் உளடநாட்டுப் போர்கள் நடைபெற்று வந்தன.

கொலம்பிய அரசின் முயற்சியாக இரு தரப் பினருக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டு அங்கு சாமாதானம் நிலவி வரு கிறது. 50 வருடங்களுக் கும் அதிகமான காலங் களாக நீடித்த போரை முடிவுக்குக் கொண்டு வந்தமைக்காக நடப்பு வருட அமைதிக்கான நோபல் பரிசை கொலம்பிய ஜனாதி பதி நுவான் மனுவல் வென்றார்.

50 வருடங்களாக ஆயு தத்தை ஏந்தி பல லட்சம் உயிர்களைக் காவு கொண்ட போராளிக் குழுவுடன் அரசு சமாதான ஒப்பந்தத்தை மேற்கொண்டது தவறு எனத் தெரிவித்து மக்கள் பலர் பேரணிகளை நடத்தினர். தற்போது அரசின் முடிவுக்கு ஆதர வாகவும் பேரணி நடத்தப்பட்டது. பேரணியில் கலந்துகொண்ட மக்கள் வெள்ளைப் பூக்களை ஏந்திச் சென்று ஒருவர் மற்றவருக்குக் கொடுத்துத் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்தனர். (ம-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தனுசு

நீதிக்காக வளைந்து கொடுக்கும் தனுசு ராசிக்காரர்களே, உங்களின் பிரபல யோகாதிபதியான சூரியன் இந்த மாதம் முழுக்க வலுவாக அமர்ந்திருப்பதால் மேல்மட்ட அரசி யல்வாதிகள் உதவுவார்கள். புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! நல்ல பதில் வரும். புதுப் பதவிக்கு உங்களது பெயர் பரிந்துரை செய் யப்படும். தந்தையார் உதவுவார். பாகப்பிரி வினை சுமூகமாக முடிவடையும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. தந்தைவழி உறவினர் களுடன் இருந்த மோதல்கள் விலகும். எதிர் பார்த்து ஏமாந்த தொகையும் கைக்கு வரும். சுக்ரன் சாதகமான வீடுகளில் செல்வதால் பழைய கடனில் ஒருபகுதியைப் பைசல் செய்ய வழி கிடைக்கும். எதிர்பார்த்த பட்ஜெட்டில் வீடு, மனை அமையும். விலை உயர்ந்த மின்னணு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள்.
சிலர் நகரத்தை நோக்கி இடம் பெயர்வீர்கள். புதன் சாதகமான நட்சத்திரங்களில் செல்வ தால் மனைவிக்கு வேலைக் கிடைக்கும். மனைவி வழி உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர் கள். நட்பால் ஆதாயமடைவீர்கள். கேது 3 ஆம் வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால் தைரியமாகச் சவால்களை ஏற்றுக் கொள் வீர்கள். நேர்மறை எண்ணங்கள் அடிமனதில் அதிகரிக்கும். நல்லவர்களின் நட்பால் உங்கள் மரியாதைக் கூடும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து பேசுவார்கள்.
24 ஆம் திகதி வரை உங்களின் பூர்வ புண்யாதிபதி செவ்வாய் ராசிக்குள் அமர்ந்திருப்பதால் மன இறுக்கம், வீண் அலைச்சல், முன்கோபம், ஹார்மோன் பிரச்சினைகள், சிறுசிறு நெருப்புக் காயங்கள் வந்துச் செல்லும். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். பூர்வீகச் சொத்து சம்பந்தமாக சிலர் நீதி மன்றம் செல்ல நேரிடலாம். மகளின் கல்யாண விட யத்தில் அவசர முடிவுகள் வேண்டாம். கர்ப்பிணிப் பெண்கள் சாலை வழிப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. உடன்பிறந்தவர்களுடன் மோதல்கள் வரும்.

**பெண்களுக்கு**

பெற்றோரின் நீண்ட நாள் கனவுகளை நனவாக் குவீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள். ஹிந்தி, கன்னட மொழி யினரால் இலாபம் கூடும். உத்தியோகத்தில் சவால் களைச் சந்திக்க நேரிடும். தொல்லை தந்த மூத்த அதிகாரி மாற்றப்படுவார். கலைத்துறையினரே! வருமாணம் உயர வழி பிறக்கும். அரசால் ஆதாயமடைவீர்கள். தடைக்கற்களை உடைத் தெறியும் மாதம் இது.



# மருத்துவர்களே கொஞ்சமாவது இறங்கி வாருங்கள்

நெடுந்தீவில் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவிக்குச் சிகிச்சை அளிக்க மருத்துவர் இல்லை என்று கூறப்பட்டது. சுமார் அரைமணித்தியாலம் சென்ற பின்னர்தான் மருத்துவர் பார்வையிட்டார் எனவும் அவ்வாறு பார்வையிடும்போது மாணவி உயிரிழந்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது. அந்த நேரத்தில் மருத்துவ மனையில் மருத்துவர் நின்றிருக்கவில்லை என்பதே மாணவியின் சாவுக்குக் காரணம் என்று ஊர் மக்கள் நம்புகின்றனர். நகரில் ஒன்று நடந்துவிட்டால் பெரும்பாலும் ஆதார வைத்திய சாலையை நோக்கி அல்லது யாழ். போதனா வைத்திய சாலையை நோக்கி நோயாளி கொண்டு செல்லப்படுவார். நகரின் வசதி அதனைத் தீர்மானிக்கிறது. ஆனால் எவ்வித வசதியும் இல்லாத நெடுந்தீவில் குறைந்தது அடிப்படை வசதிகளாவது தகுந்ததாக இருக்கவேண்டும். குறைந்த வசதியுடனாவது சீரான பணியை வழங்க வேண்டும்.
உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாத சில உதவிகள் பின்னர் கிடைத்தும் பயனற்று விடுகிறது என்பதற்கு நெடுந்தீவுச் சம்பவமும் உதாரணம். அதனால் வைத்தியசாலையின் தரத்தை அதிகரிக்குமாறு கோரி ஊரவர்கள் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.நெடுந்தீவில் நீண்ட காலமாகவே இந்தக் குறைபாடு நிலவுகின்றது. காரணம் அங்கு செல்ல மருத்துவர்கள் தயங்குகிறார்கள் என்பதே.
இந்தத் தவறு சீர்ப்படுத்த முடியாததா?
மருத்துவர்கள் தெய்வத்துக்குச் சமமாக மதிக்கப்படுவதாகக் கூறுவார்கள். அப்படிப்பட்ட தெய்வங்கள் பின்தங்கிய இடங்களுக்குச் செல்ல ஏன் தயங்க வேண்டும்?
வடக்கில் எத்தனையோ மருத்துவர்கள் இருந்தாலும் போதவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இந்த நிலையில் இங்குள்ள மருத்துவர்கள் வசதிகள் குறைந்த இடங்களுக்குச் சென்று பார்வையிட்டால் என்ன குறைச்சல் வந்துவிடப்போகிறது?
யாழ். போதனா வைத்தியசாலையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், யாழ். மாவட்டத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க பிராந்தியக் கிளைச் சங்கம், என்று இரண்டு சங்கங்கள் பல காலமாக இயங்கி வருகின்றன. வடமாகாணத்துக்கு என்று புதிதாக ஒரு மருத்துவ சங்கம் கடந்த மாதம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தச் சங்கம் கூட கோப்பாயில் விபத்தில் கொல்லப்பட்ட மருத்துவரின் குடும்பத்துக்கு ஒரு லட்சம் ரூபாவை உதவியாக வழங்கித் தான் ஆரம்பிக்கப்பட்டது.
இவ்வாறெல்லாம் இருந்தும் பின்தங்கிய இடங்களுக்கு ஏன் மருத்துவர்கள் செல்லப் பின்னடிக்கிறார்கள்? அரச மருத்துவ அதிகாரிகளின் தாய்ச்சங்கம்கூட இந்தச் சிக்கலைத் தீர்க்க எடுத்த நடவடிக்கை வெற்றியளித்ததாகத் தெரியவில்லை. பின்தங்கிய இடங்களில் தானே மருத்துவர்கள் முன் வந்து பணியாற்ற வேண்டும்.
நெடுந்தீவு, நயினாதீவு உள்ளிட்ட பல இடங்களுக்கும் மருத்துவரை நியமிப்பதென்பது கல்லில் நார் உரிப்பது போன்று உள்ளதாகத்தான் தெரிகிறது. அத்தகைய இடங்களுக்கு மருத்துவர்கள் வருகிறார்களில்லை என்று பிராந்தியப் பணிப்பாளர் கூறுமளவுக்கு மருத்துவர்கள் ஏன் கவனவீனமாக உள்ளனர்?




மருத்துவர்கள் இந்த விடயத்தில் தாமாகவே சிறந்த தீர்வை எடுப்பதுதான் நல்லது. தீர்வை அடுத்தவர்கள் திணிக்க அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதும் கண் டன அறிக்கை விடுவதுமாக இருக்காது மருத்துவர்கள் சிந் திக்க வேண்டும். நெடுந்தீவு உள்ளிட்ட இடங்களுக்கு 3 மாதங்களுக்கு ஒரு தடவையாவது ஆள்கள் மாறி மாறி ஒரு ஒழுங்குமுறையில் மருத்துவர்கள் சென்றுவரமுன்வர வேண்டும். அது ஒரு சிலரை மட்டுமன்றி எவரையும் தாக்காது. சீரான பணியாக இருக் கும். இதுதான் நிலமை என்று தெரிந்துகொண்டும் சுகாதாரத் திணைக்களமும் இந்த விடயத்தில் நடைமுறையைக் கொஞ்சம் கடுமையாக்கினால்தான் சரிப்படுத்த முடியும் என்றால் அதனைச் செய்யத்தானே வேண்டும்! மருத்துவர்கள் வருகிறார்களில்லை என்று சாக்குப் போக்குக்கூற முடியாது. அதற்காகத்தானே பொறுப்பு வாய்ந்த பதவிகளில் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே.எஸ்.சிவஞானராஜா

# ஆரோக்கியம் உடற்பயிற்சியில்

பொதுவாகவே இலங்கை மக்கள் சுறு சுறுப்பானவர்களாகவே முன்னொரு காலத்தில் இருந்து வந்துள்ளார்கள் என்பதை எமது மூதாதையரின் வாயிலாக அறிய முடிகிறது. அது உண்மையும் கூட. ஆனால் தற்போது அது தனது சோபையை இழந்து தவித்து வருவதையும் தவிர்த்துச் சொகுசாக வாழ எத்தனிப்பதையும் உணர முடிகிறது. அதிலும், குறிப்பாக வட மாகாணமானது தனது மக்களின் ஆரோக்கியத்தில் இன்னும் அதிகமாக முன்னேற வேண்டியேயுள்ளது. பொதுவாகவே எல்லாவற்றிலும் நாம் முதலாவது பட்சத்தில் இல்லையென்பது கண்கூடு. மொத்தத்தில் எல்லோருடைய உடம்புகளும் வண்டியும் தொந்தியுமாக விளைந்தது மட்டுமல்ல, விகாரப்பட்டும் போய்விட்டன. காரணம் மிதமிஞ்சிய சாப்பாட்டுக்கு ஏற்ற உடல் உழைப்பு அறவே இல்லாமல் போனதே முதற் காரணமாகும். மேலும் ஒரே படிப்பும் கதிரையில் எந்தவித களைப்பும் இல்லாத கடமையும் குளிரூட்டிகளோடு ஒன்றிணைந்த வாழ்வும், நோகாத தொடுகைமுறை விஞ்ஞான வளர்ச்சியும், மெய்ஞ்ஞான நம்பிக்கையைப்பையக் குறைவடைந்து போவதுமே பிரதான காரணங்களாகும். இதை எல்லோருமே கவனிக்காமல் விட்டுவிட முடியுமா? ஆமாம். முதலில் ஆரோக்கியம் இரண்டாவதே கல்வி, கடமை, கடவுள் எல்லாம். கல்யாணம் கூட மூன்றாவது பட்சமே. எனவே உடல் ஆரோக்கியமும் உள ஆரோக்கியமும் பெறுவதற்கு தினமும் உடற்பயிற்சி மனிதனுக்கு அவசியமே.

## மேம்பாடு

புத்துணர்ச்சியும், மனஎழுச்சியும் தருவதோடு நிற்காமல் இல்லற சகவாழ்வையும், சகோதர மனப்பாங்கையும், முக்கியமாக அந்தரங்க வாழ்க்கையையும் மேம்பாடடையச் செய்கிறது. அத்தோடு மட்டும் நில்லாமல் உடற்பயிற்சியானது.

நீண்ட ஆயுள் தரும்.
மூளையைச் செயற்றிறனாக்கும்.
இளமைக்குத் திரும்ப வைக்கும்.
மறதியை முடக்கும்.
உடற் பருமனைக் குறைக்கும்.
கொழுப்பைக் குறைக்கும்.
இதய நோயை விரட்டும்.
குருதி அழுத்தத்தைத் தடுக்கும்.
இரத்த ஓட்டத்தைச் சமச்சீராக்கும். நல்ல தூக்கத்தை வரவழைக்கும்.
தேகப் பொலிவு ஏற்படுத்தும்.
இல்லற சௌபாக்கியம் ஏற்படும்.
ஊளைச் சதைகள் கரையும்.
ஆண்களின் உடல் வாகு இறுக்கம் பெறும்.
பெண்களின் உடல்வாகு பொலிவாகும்.
முகமலர்ச்சி ஏற்படும்.
தன்னம்பிக்கை ஏற்படும்.
எடுத்த காரியம் இனிதே நிறைவுறும் போன்ற இன்னோரன்ன பலாபயன்களை அடைய ஏதுவாக்கும்.

## நேரம்

உடலை மிருதுவாக்க இடமளிக்கும் நேரம் காலையும் மாலையுமாகும். உணவு உண்பதற்கு முன்பதாக முப்பது நிமிடம் போதுமானதாகும். நடைப்பயிற்சியும் மெல்ல மெல்ல, பையப் பைய ஓடுவதும் சைக்கிள் ஓடுவதும் தினமும் ஒழுங்காகச் செய்வோமாக இருந்தால் ஒவ்வொரு நிமிடமும் பொன் ஆகும். மேனியும் பளபளக்கும். நேரமும் தவமாகும்.

## இல்வாழ்வு

இல்லறம் இனிக்கும் கணவன் மனைவி இணைந்த வாழ்வு பிரம்மாதமாகும். தாம் பத்திய சுகம் பேறாக அமையும். மலட்டுத் தன்மை இருக்கவே இருக்காது. பிரசவம் சுகமாகும்.

பொது வாகவே எல்லாவற்றிலும் நாம் முதலாவது பட்சத்தில் இல்லையென்பது கண்கூடு. மொத்தத்தில் எல்லோருடைய உடம்புகளும் வண்டியும் தொந்தியுமாக விளைந்தது மட்டுமல்ல, விகாரப்பட்டும் போய்விட்டன. காரணம் மிதமிஞ்சிய சாப்பாட்டுக்கு ஏற்ற உடல் உழைப்பு அறவே இல்லாமல் போனதே முதற் காரணமாகும்

குழந்தைகள் குறைப்பிரசவமாகாமல் நிறைப்பிரசவமாக பிறப்பார்கள். பால் சுரப்பு அதிகமாகும். அல்லாத பழக்க வழக்கங்கள் அணுகாது. தலைமுடி, மார்பு, வயிறு, இடை, உறுப்புக்கள் பாதம் யாவுமே அந்தந்த வனப்படையும்.

## சந்ததி

குறிப்பாக வடமாகாணத்தில் வதியும் ஒவ்வொரு குடும்பமும் உடற்பயிற்சிக்கு முக்கிய வகிபாகம் கொடுப்பார்களாக இருந்தால், வடமாகாணம் அடுத்து வரப்போகும் சந்ததியை வரமாக்கும் என்பது துணிபாகும், திண்ணமாகும்.

த.வி.வெங்கடேஸ்வரன்

# சிந்தனைக்கு உதவும் கொட்டாவி

ஆசிரியர் தீவிரமாகப் பாடம் நடத்தும்போதோ, அலுவலகக் கூட்டத்தில் அதிகாரி பேசும்போதோ கொட்டாவி வந்தால் சங்கடத்துக்கு உள்ளாவோம்.
காரணம், ஒருவருக்குக் கொட்டாவி வந்தால், அவருக்குத் தூக்கம் வருகிறது, பேச்சில் ஆர்வமில்லை என்று எதிரில் இருப்பவர் புரிந்துகொள்வார். புதிதாக வெளிவந்துள்ள ஆய்வு முடிவைக் கேட்டால், கொட்டாவி வருவது கௌரவமான விடயம்தான் என்று எண்ணத்தோன்றும்.
நியூயோர்க் மாகாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவர் ஆண்ட்ரூ காலப் உள்ளிட்டோர் நடத்திவரும் பயாலஜி லெட்டர் எனும் ஆய்விதழில் சமீபத்தில் இது பற்றி ஒரு ஆய்வுக் கட்டுரை வெளிவந்துள்ளது. யூடியூபில் பதிவு செய்யப்பட்டுள்ள வீடியோவில் எலி, பூனை, யானை, குரங்கு, சிம்பன்ஸி, மனிதன் உள்ளிட்ட 29 விலங்குகளின் கொட்டாவிக் காட்சிகள் உள்ளன. இதை ஆராய்ந்த போது, மனிதக் குரங்கு, சிம்பன்ஸி போன்ற மனிதச்சாயல் விலங்குகள் ஏனைய விலங்குகளைவிடக் கூடுதல் நேரம் கொட்டாவி விடுவது தெரியவந்தது.
மனிதனின் கொட்டாவி சுமார் 6 நொடிகள் நீள்கின்றன என்றால், மிகச் சிறிய மூளையுடைய எலியின் கொட்டாவி 1.5 நொடிகள்கூட நீடிப்பதில்லை. அதேநேரத்தில், மனித மூளையின் எடைக்குச் சமமான மூளையைக் கொண்ட ஆபிரிக்க யானையின் கொட்டாவி, மனிதனை விடச் சற்றே குறைவாக இருந்தது. கொரில்லா, ஒட்டகம், சிங்கம், குதிரை, ஆப்பிரிக்க யானை எல்லாம் மனிதனை விடக் குறைவான காலமே கொட்டாவிவிட்டன.
ஆக, மூளையின் மேலே உயர்சிந்தனைப் பகுதி எனக் கருதப்படும் கார்டெக்ஸ் பகுதியில் உள்ள மூளைச் செல்களின் எண்ணிக்கைக்கும் கொட்டாவியின் கால நேரத்துக்கும் தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டது.
1,200 கோடி கார்டெக்ஸ் நியூரான் கொண்டுள்ள உடல் அளவு, கபாலம் அல்லது கீழ்த்தாடை அளவுகளுக்கும் கொட்டாவி விடும் காலத்துக்கும் தொடர்பு இருக்கிறதா என்றும் ஆராய்ந்தார்கள். ஆனால், அப்படி எந்தத் தொடர்பும் இல்லை. ஆக, சிக்கல் மிகுந்த சிந்தனையின் பிறப்பிடம் எனக் கருதப்படும் கார்டெக்ஸ் பகுதி நியூரான் எண்ணிக்கைக்கும் கொட்டாவி விடும் கால அளவுக்கும் உள்ள தொடர்பு நிரூபிக்கப்பட்டுள்ளது.
பொதுவாக, கூடுதல் வேலையின்போது மூளை வெப்பமடையும், அதனை குளிர்விக்கத்தான் கொட்டாவி வருகிறது எனும் கருத்து உடலியல் ஆய்வாளர்கள் மத்தியில் இருக்கிறது.
வாயை அகலமாகத் திறந்து காற்றை உள்ளே இழுக்கும் போது, குளிர்ந்த குருதி ஓட்டம் மூளைக்குப் பாயும் என்று அவர்கள் சொன்னார்கள். அதுவும் இந்த ஆய்வு முடிவுடன் இயைந்துபோகிறது.
ஆக, கொட்டாவி விடுபவர்களை சிந்தனைச் சிற்பிகளாகப் பார்க்க வேண்டிய காலம் வரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றில் இன்றைய தினம்

1878 - எடிசன் எலெக்றிக் லைற் கம்பனி தனது நடவடிக்கைகளைத் தொடங்கியது.

1932 - பின்னாளில் ஏயர் இந்தியாவாகிய டாட்டா எயர் லைன்ஸ் முதன் சேவையைத் தொடங்கியது.

1934 - சியாங் கை ஷேக்கின் தேசிய புரட்சிப் படை றூஜினை வெற்றிகரமாகச் சுற்றி வளைத்ததையடுத்து சீன சோவியத் குடியரசு வீழ்ச்சியடைந்தது.

1939 - பின்னாளில் லா கார்டியா, விமான நிலையமெனப் பெயரிடப்பட்ட நியூயோர்க் மாநகர விமான நிலையம் மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

1949 - வியட்நாம் போரை நிறுத்துமாறு கோரும் ஆர்ப்பாட்டம் வொஷிங்டன் மற்றும் அமெரிக்கா முழுவதும் நடைபெற்றது.

1971 - பேர்சியாவின் பிறப்பைக் கொண்டாடும் 2500 ஆம் ஆண்டுக் கொண்டாட்டம் ஈரானில் இடம்பெற்றது.

1990 - பனிப்போர் அழுத்தத்தைக் குறைக்கும் வகையிலும், தனது தேசத்தைத் திறந்துவிடும் வகையிலும், முயற்சியெடுத்தமைக்காக, சோவியத் யூனியனின் தலைவர் மிக்கைல் கொப்பர்சேவுக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது.

1992 - வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மட்டுமே உகந்தது. பிரிட்டிஷ் அமைச்சர் வலியுறுத்து.

- திருகோணமலையில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பாதிரியார் சாவடைந்த சம்பவம் தொடர்பாக, பொலிஸார் ஒருவர் கைது. ஒருவர் பணி நீக்கமென நாடாளுமன்றில் தெரிவிப்பு.

2003 - சீனாவின் மனிதரைத் தாங்கிய முதல் விண்கலம் ஷென்ஷோ - 5 தனது பயணத்தைத் தொடங்கியது.

2004 - ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்காவின் ஆக்ரோசத் தாக்குதலில் பலர் உயிரிழப்பு, அநேகர் படுகாயம்.


2007 - தீர்வுத் திட்டம் டிசெம்பரில் முன்வைக்கப்படுமென வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகல்லகம அறிவிப்பு.

- மனித உரிமை ஆலோசனைக் குழுவின் நான்கு உறுப்பினர்கள் பதவி விலகினர்.

2015 - 7.2 மக்னிரியூட் அளவிலான நிலநடுக்கத்தில், பிலிப்பைன்ஸில் 215 பேர் வரை உயிரிழந்தனர்.

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





# உலகப் பழமொழி

## செக்கோஸ்லோவேகியா

1. பெற்றோரும் குருவும் நமக்குப் பேசக் கற்றுக் கொடுக்கும்போது உலகம் எமக்கு வாயை மூடிக் கொண்டிருக்கக் கற்றுக் கொடுக்கிறது.
2. திருப்பிச் செலுத்தப்படாத கடன் மன்னிக்க முடியாத பாவம் ஆகும்.
3. தண்டிக்கப்படுபவன் எல்லாம் குற்றவாளியாகான்.
4. அடங்காப்பிடாரி, பத்து வீடுகளுக்குக் காவல் நாய்கள் தேவையில்ல என்ற நிலையை உண்டாக்குவாள்.
5. தன்னைக் காதலிப்பவனை மணப்பவளே கெட்டிக்காரி.
6. பூனை வயற்றில் எது பிறந்தாலும் அது எலியைப் பிடித்தே தீரும்

# செய் நன்றி மறந்திடலாகாது...!

முல்லைமலர் என்ற காட்டில் விறகு வெட்டுவதற்காக மனிதன் ஒருவன் சென்று கொண்டிருந்தான்.அப்போது காட்டின் ஏதோவோர் திசையிலிருந்து சிங்கம் ஒன்று கர்ஜனை செய்யும் சத்தம் கேட்டது. அந்த மனிதன் பயம் கொண்டவனாய் ஓடத் தொடங்கினான்.

அந்த சமயம், மனிதனே பயப்படாதே...! இங்கே வா...! நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன் என்ற குரல் கேட்டது.தயக்கத்துடன் குரல் வந்த திசையை நோக்கி நகர்ந்தான் அந்த மனிதன்.அங்கே வேட்டைக்காரர்கள் சிலர் சிங்கத்தை உயிருடன் பிடிப்பதற்காக செய்து வைத்திருந்த ஒரு கூண்டில் சிங்கம் அடைப்பட்டுக் கிடந்தது. ஆட்டுக்கு ஆசைப்பட்டதால் சிங்கம் கூண்டுக்குள் மாட்டிக் கொண்டது.



மனிதனைப் பார்த்தவுடன் சிங்கம், மனிதனே...! என்று விழித்தது. என்னை இந்தக் கூண்டிலிருந்து விடுவித்து விடு... நான் உனக்குப் பல உதவிகளைச் செய்வேன் என்று சொன்னது. மனிதர்களைக் கொன்று உணவாக்கிக் கொள்ளும் உன்னை எப்படி நான் விடுவிக்க முடியும்? என்றான் மனிதன்.

ஒத்துக்கொள்கிறேன் மனிதர்களைக் கொல்லும் சுபாவம் எனக்கு உண்டுதான். அதற்காக எந்தன் உயிர் காக்கும் உன்னைக் கூடவா கொன்றுவிடுவேன்...! அவ்வளவு நன்றியில்லாதவனா நான்..? பயப்படாமல் கூண்டின் கதவைத்திற. உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்,... என்று சாதுவாகப் பேசியது சிங்கம்.

வார்த்தைகளின் உபசரிப்பை உண்மையென்று நம்பி விட்டான் மனிதன். கூண்டின் கதவைத் திறந்தான். அவ்வளவுதான்...! நன்றியுணர்வை மறந்த சிங்கம் மனிதன் மேல் பாய்வதற்கு தயாரானது.

செய்வதறியாது தடுமாறிப்போன மனிதன், சிங்கமே நீ செய்வது நியாயமான காரியமா..? உன்னுடைய பேச்சை நம்பி கூண்டிலிருந்து விடுவித்தேனே...! அதற்காக நீ காட்டும் பிரதி உபகாரம் இதுதானா..? என்றான். சிங்கமோ, என் உயிரைக் காத்துக் கொள்வதற்காக நான் ஆயிரம் பொய்களைச் சொல்லுவேன். அதை நீ எவ்வாறு நம்பலாம்..? மனிதர்கள் என்றால் பகுத்தறிவுள்ளவர்கள் அல்லவா..! அந்த அறிவைக் கொண்டு எது நல்லது, எது கெட்டது என்பதை பகுதித்தறிந்து கொள்ள வேண்டாமா..? முட்டாள்தனமான உன் செய்கைக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்? என்றது.

கடவுள் உன்னை தண்டிப்பார் சிங்கமே..! உன் உயிரைக் காப்பாற்றிய என்னையே சாப்பிடுவது நியாயமான காரியமா..? உன்னைக் காப்பாற்றியவன் நான். நீ இப்படி நடந்து கொள்வது முறையல்ல. என்றான் மனிதன்.

இந்த சந்தர்ப்பத்திலே அவ்வழியாக நரி ஒன்று வந்தது. நடந்த விடயங்களை அறிந்துகொண்டது. சிங்கத்தின் நன்றி கெட்ட செயல் புரிந்து விட்டது. உதவி செய்த மனிதனைக் காப்பற்றி சிங்கத்தைக் கூட்டில் [illegible] சிங்கத்தை அன்போடு விழித்த நரி, தான் அறிந்து கொண்ட விடயங்களைப் புரிந்து கொள்ளாதது போல பாவனை செய்தது. எதுவும் புரியவில்லை சிங்கமே...! ஆரம்பத்திலிருந்து சொல்லுங்கள் என்றது. சிங்கம் சொல்லத் தொடங்கியது. நான் அந்தக் கூண்டுக்குள் அடைந்து கிடந்தேன்...! எந்தக் கூண்டுக்குள்? என்றது நரி.

அதோ இருக்கிறதே அந்தக் கூண்டுக்குள் தான்.. என்றது சிங்கம். எப்படி அதனுள் அடைபட்டுக்கொண்டீர் நீர்..? என்றது நரி.

சிங்கமும் விடுவிடுவென்று கூண்டுக்குள் சென்றது. இதுதான் சமயம் என்று உணர்ந்துகொண்ட நரியோ சட்டென்று கூண்டுக் கதவை இழுத்து மூடிவிட்டது.

தந்திரத்தைப் புரிந்துகொண்ட சிங்கம்,நரியாரே..! நியாயம் கூறுவதாகச் சொல்லி நடந்த கதையைக் கூறச்செய்து என்னை மறுபடியும் கூண்டில் அடைத்து விட்டீரே..! என்று கத்தியது.

தன்னைச் சுதாகரித்துக் கொண்ட நரி நான் ஒன்றும் இந்த மனிதனைப்போல் முட்டாள் அல்ல..! உங்களுக்குச் சாதகமாக நியாயம் சொன்னால் முதலில் மனிதனை கொல்வீர்கள். பின்னர் என்னையும் அடித்துக் கொன்று விடுவீர்கள். அதனால்தான் உங்களைக் கூண்டுக்குள் போகச்செய்து கதவைப் பூட்டி விட்டேன் என்றது நரி.

நன்றி மறந்ததால் கூண்டுக்குள் தான் அடைபட்டுக் கிடக்கும் நிலையை எண்ணி மனம் வருந்திய சிங்கம். தனது தவறை உணர்ந்துகொண்டது..!

ஆக, குழந்தைகளே! நாம் ஒருபோதும் ஒருவர் எமக்குச் செய்த நன்றியை மறக்கக்கூடாது.அது மிகப்பெரிய பாவம்.நன்றியை மறவாது இருக்க வேண்டும்...! சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது அதனை அன்புணர்வோடு திருப்பிச் செலுத்திவிடவேண்டும்..!

சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கொண்டாடிய ஆயுதபூஜை...



### வேலைக்கு செல்லும் மக்கள்






"ரீ உங்க மேல கொட்டினதுக்கு எதுக்கு ஆம்புலன்ஸ்க்கு போன் பண்றீங்க?" "அதைப் பார்த்து என் புருஷன் சிரிச்சார்..." "சரி! உடனே, அனுப்புறோம்"

### முன்னாடியெல்லாம் அமைதியைத் தேடி இமயமலைக்குப் போவாங்க



இப்போ டவர் இல்லாத இடத்துக்கு போனா போதும் போல, நிம்மதியா இருக்கலாம்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** குடும்ப சிரமத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், இருக்கிற அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும். எதிர்பார்த்த சுப செய்தி தாமதமாக வந்து சேரும்.

**இடபம்:** புதிய முயற்சியில், எதிர்பார்த்த நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பிள்ளைகளின் விருப்பம் நிறைவேறும்.

**மிதுனம்:** உங்கள் பேச்சில் தன்னம்பிக்கை மிகுந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள லாபம் கிடைக்கும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு சிறப்பாக அமையும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

**கடகம்:** மனதில் குழப்பம் உருவாகி விலகும். நல்லவர்களின் உதவி கிடைக்கும். தொழில் வளர்ச்சிபெற, அதிகம் உழைப்பீர்கள். லாபம் படிப்படியாக உயரும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**சிங்கம்:** உங்களிடம் உதவி பெற்றவர், நன்றி மறந்து செயற்படுவர். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச் சியால், லாபம் அதிகரிக்கும். வெளியூர் பய ணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**கன்னி:** சிந்தனையில் புதுமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். வருமானம் திருப்தியளிக்கும். உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**துலாம்:** வாழ்வில் முன்னேற்றம் பெற புதிய வழி பிறக்கும். தொழில், வியாபாரத்தில் சாதனை படைப்பீர்கள். இலாபம் பன்மடங்கு உயரும். பெண்கள் ஆடம்பரமாகச் செலவழிப்பர். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**விருச்சிகம்:** முக்கிய பணி நிறைவேறுவதில் கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர்.

**தனுசு:** யாருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி அளிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**மகரம்:** சுயநல நோக்கத்துடன் சிலர் உங்களிடம் பழகுவர். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கும்பம்:** நேர்மை மிக்கவராகச் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். லாபம் மிதமாக இருக்கும். உறவினர் வகையில் திடீர் செலவு செய்ய நேரிடலாம். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**மீனம்:** கடந்த கால உழைப்பின் மூலம் நன்மை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். நிலுவைப் பணமும் வசூலாகும். நண்பரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும்.



## "பாகுபலி"யின் சாதனையை முறியடித்த "புலி முருகன்"

'த்ரிஷ்யம்' படத்தின் மூலம் மலையாள சினிமாவின் வசூலில் முதலிடம், லோஹம் படத்தின் மூலம் முதல் நாள் வசூலில் முதலிடம் என கடந்த இரண்டு வருடத்தில் இரண்டு சாதனைகளை மட்டுமே தன் வசம் வைத்திருந்த மோகன்லால் தற்போது தான் நடித்துள்ள 'புலி முருகன்' படம் மூலமாக கேரளாவில் ஏற்கனவே மற்றவர்களால் உருவாக்கப்பட்ட சாதனைகளை உடைத்து வருவதுடன், தனது சாதனைகளையும் முறியடித்து வருகிறார்.

இதற்கு முன் ஒரு நாள் வசூலில் அதிகபட்சம் வசூலித்து முதலிடத்தில் இருந்த தனது 'லோஹம்' பட சாதனையைத் தானே முறியடித்துள்ளார். நான்கே நாள்களில் இருபது கோடி வசூல் என்கிற சாதனையைப் படைத்துள்ளார். மலையாள சினிமா வரலாற்றில் முதல் நாள் அதிக சிறப்புக் காட்சிகள் 'புலி முருகன்' படத்திற்காக திரையிடப்பட்டு அதிலும் சாதனை செய்துள்ளார். திருவனந்தபுரம் ஏரி பிளக்ஸ் தியேட்டரில் இதுநாள் வரை அதிக பட்ச வசூல் ஈட்டிய பெருமையைத் தக்கவைத்திருந்த 'பாகுபலி'யிடம் இருந்து பிடுங்கி 'புலிமுருகன்' தனதாக்கிக் கொண்டுள்ளது என சினிமா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

WhatsApp




## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 5 | | | | | | |
| | | 1 | 9 | | | | | 4 |
| 4 | | | 7 | 6 | | 3 | | |
| | | | 3 | | | | | |
| | 7 | 4 | | | | 2 | 1 | |
| | | | | | 9 | | | |
| | | 2 | | 8 | 7 | | | 5 |
| 3 | | | | | 2 | 1 | | |
| | | | | | | 8 | | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 6 | 8 | 5 | 3 | 2 | 1 | 4 |
| 5 | 2 | 4 | 9 | 6 | 1 | 3 | 8 | 7 |
| 1 | 3 | 8 | 2 | 7 | 4 | 5 | 6 | 9 |
| 2 | 1 | 9 | 6 | 8 | 7 | 4 | 3 | 5 |
| 8 | 4 | 5 | 3 | 2 | 9 | 1 | 7 | 6 |
| 6 | 7 | 3 | 4 | 1 | 5 | 9 | 2 | 8 |
| 3 | 5 | 2 | 7 | 4 | 8 | 6 | 9 | 1 |
| 4 | 6 | 7 | 1 | 9 | 2 | 8 | 5 | 3 |
| 9 | 8 | 1 | 5 | 3 | 6 | 7 | 4 | 2 |


சுடோக்கு ஒருஎண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**மணிகண்டன் வள்ளி**

யாரிடம் வேண்டுமானாலும் கெஞ்சுங்கள். கெஞ்சவிட்டு வேடிக்கை பார்ப்பவர்களிடம் கெஞ் சிக் கொண்டு இருக்காதீர்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தக்காளித் தோசை

தேவையான பொருள்கள்

தோசை மா - 2 கப்
தக்காளி - 4
சின்ன வெங்காயம் - 5
வரமிளகாய் - 6 அல்லது 8
சீரகம் - 2 தேக்கரண்டி
கறிவேப்பிலை
- தேவையான அளவு
உப்பு - சிறிதளவு
எண்ணெய்
- தேவையான அளவு

செய்முறை

மிக்ஸியில் சின்ன வெங்காயத்துடன் வரமிளகாய், சீரகம், கறிவேப்பிலை ஆகியவற்றைச் சேர்த்து நன்கு பதமாக அரைக்கவும். (நீர் அதிகம் விடாமல் கெட்டியாக அரைக்கவும்). அதனுடன் தக்காளியையும் சேர்த்து அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

அதனுடன் தோசை மாவைச் சேர்த்து நன்கு கலந்து வைக்கவும்.

தோசைக்கல்லை சூடாக்கி கலந்து வைத்துள்ள மாவை தோசையாக ஊற்றி எண்ணெய் விட்டு வேகவிடவும். சிவந்ததும் மெதுவாகத் திருப்பிப் போட்டு மறுபக்கத்தையும் வேகவிட்டு எடுக்கவும். (தோசை மொறுமொறுப்பாக இல்லையெனில் மேலும் சிறிது மாச் சேர்த்துக் கொள்ளவும்). சூடான தக்காளித் தோசை தயார்.

## நாளை

புரட்டாதி-30
ஞாயிற்றுக்கிழமை
-16.10.2016
திதி: பூரணை மு.ப. 10.31
நட்சத்திரம்: ரேவதி பி.ப.12.35
ராகுகாலம்: 04.32-06.02 வரை
சுபநேரம்: 09.02-10.32 வரை




முக வண்ணப்பூச்சுக்கள் அறிமுகமாகியுள்ளன. விசேட நாள்கள், வேடங்கள், வைபவங்களைப் பிரதி பலிக்க இவ்வாறான பூச்சுக்கள் உதவும். முகமூடியால் முகத்தை மூடுவதற்கு பதிலாக வர்ணங்களைப் பூசுவதன் மூலம் முகத்தை வித்தியாசமாக வெளிக்காட்ட முடியும். இவை 350 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 40 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 60 | 60 | 70 | 40 | 50 | 90 | 35 |
| கரட் | 70 | 100 | 120 | 100 | 80–100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 60 | 60 | 50–60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 120 | 100 | 120 | 140 | 140 | 160 | 100 | 60 |
| பாகல் | 120 | 120 | 140 | 160 | 180 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 80 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 90 | 100 | 100 | 100 | 80–100 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 | 25–30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 80 | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 60 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 15 | 20 | 30 | 20 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 60 | 60 | 60 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 50 | 50 | 40 | 60 | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 160 | 120 | 160 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 80 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 30 | 40 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100–110 | 120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 500 | 350 | 300 | 400 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 90 | 120 | 100 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 100 | 80 | 80 | 200 | 80 | 100 |



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | 700 | 700 | 700 | 600 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 600 | 500 | – |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 500 | 400 | – |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 600 | – | – |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 300 | 400 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 400 | 400 | 600 |
| முரல் | 300 | 350 | 300 | 500 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 300 | 250 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 400 | 200 | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | 250 | 400 |
| திரளி | 300 | 250 | 100 | 150 | 200 | 150 | 350 |
| நகரை | 250 | 250 | 100 | 250 | 300 | 250 | 400 |
| சூடை | 150 | 130 | 100 | 200 | 100 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 200 | – | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 200 | 300 | 130 |
| மதனம் | 150 | 150 | – | 400 | 300 | 250 | 300 |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 100 | 50 | [illegible] |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 200 | 300 | [illegible] |
| வாழை | 100 | 150 | – | 400 | 300 | 250 | – |

## மருத்துவக் குணங்கள் அதிகம் நிறைந்துள்ள வெந்தயம்

- வெந்தயத்திலுள்ள எண்ணெய்ப் பசை தலைமுடிக்கு வளர்ச்சியை, கருமை நிறத்தை தருகிறது. இதனால் கூந்தல் தைலங்கள் தயாரிப்பில் பயன்படுகிறது.
- ஒருவகை மஞ்சள் சாயம் தயாரிக்கப்பட்டு, துணிகளுக்கு வண்ணமேற்ற, மாத்திரைகளுக்கு வண்ணம் கொடுக்கப் பயன்படுகிறது. வெந்தயத்தை ஊற வைத்து எடுக்கப்படும் பசை நூற்பு ஆலைகளிலும், அச்சுத் தொழில்களிலும் பயன்படுகிறது.
- வெந்தயம் குளிர்ச்சியை உண்டாக்கும். சிறுநீரைப் பெருக்கும். துவர்ப்புத் தன்மை உடையது. வறட்சியகற்றும் தன்மை கொண்டது. நரம்புகளைப் பலப்படுத்தும். குளிர்ச்சியை உண்டாக்கும் தன்மை கொண்டது.
- சித்த, ஆயுர்வேத வைத்திய முறைகளில் வெந்தயம், சீதபேதி, மூலநோய் இவைகளை குணப்படுத்த, முடி உதிர்தல், தோல் நோய், வாய்வுத்தொல்லையை போக்கவும் பயன்படுத்தப்படுகிறது. எண்ணெய்யாக, கரைப்பானாக, லேகியமாக, பொடியாகப் பயன்படுத்தப்படுகிறது. 'யுனானி' மருத்துவ முறையில் சளி நீக்கவும், மூல நோய் தீர்க்கவும் பயன்படுத்தப்படுகிறது.
- வெந்தயத்தை வறுத்து, நீர் விட்டுக் காய்ச்சி தேன் சேர்த்துச் சாப்பிட வயிற்றுக் கடுப்பு தீரும். திடீரென ஏற்படும் வயிற்று வலிக்கு வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடியாக்கி வெந்நீரில் கலந்து குடிக்க வயிற்றுவலி தீரும்.



(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டன் நூல் வெளியீட்டு நிகழ்வில் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக். 15
லண்டனில் இன்று இடம்பெறும் நூல் வெளியீட்டு விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

தமிழ்த் தொழிற்சங்கவாதி ஐ.தி. சம்பந்தன் எழுதிய 'தமிழ் அரச ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள்' மற்றும் 'தனி மனித சாதனையாளரின் முத்துவிழா மலர்' ஆகிய இரு நூல்களின் அறிமுக விழா லண்டனில் இன்று இடம்பெறவுள்ளது.

சுடரொளி வெளியீட்டுக் கழகத் தின் ஏற்பாட்டில் 23ஆவது நூல் அறிமுக விழாவாக நடைபெறவுள்ள இந்த நூல்களினுடைய அறிமுக விழாவானது மூத்த பத்திரிகையாளர் கலாநிதி. பொன். பாலசுந்தரம் தலைமையில் லண்டனில் இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள் ளது.

நூல்களுடைய அறிமுக விழா வுக்கு முதன்மை விருந்தினரா கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்வார். நூல்களின் ஆய்வுரைகளை ஆய்வாளர் ரி.சோதிலிங்கம், இலக்கிய சங்கமம் சிவதணிகா சலம் ஆகியோரும், மாணவன் பார்வையில் ஆய்வுரையை செல்வன் அருணன் ஜெயக்குமார் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். ஊடகவியலாளர் பார்வையில் சிறப்புரைகளை வழங்க புதினம் ஆசிரியர் ஈ.கே.இராஜகோபால், நூலகர் செல்வராஜா மற்றும் லண்டன்- காரை நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர் ப.தவராஜா ஆகியோர் நிகழ்த்துவர். (த-21)



பொலிஸ் திணைக்களத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நடைபெற்று வருகின்றது. மாகாண மட்ட நிகழ்வு யாழ்ப்பாணத்தில், கோட்டைப் பகுதியில் நேற்று நடைபெற்றது. இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் கலந்து கொண்டனர். ஆளும் கட்சி உறுப்பினரும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனின் (சசிதரன்) மனைவியுமான திருமதி அனந்தி சசிதரனும் இதில் கலந்துகொண்டார். (த-5-101)

# கிழக்கு முதல்வருடன் ரீட்டா முக்கிய பேச்சு

மட்டக்களப்பு, ஒக் 15
இலங்கைக்கு விஜயம் செய் துள்ள ஐ.நாவின் விசேட அறிக் கையாளர் ரீட்டா இஷாக் நாடியா, திருகோணமலைக்கு விஜயம் செய்து, கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அக மட்டை, நேற்று அவரது அலுவலகத்தில் சந்தித்து முக்கிய பேச்சு நடத்தியுள்ளார்.

சிறுபான்மையினரது உரிமைகள் மற்றும் அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டும் வகையில் பரிந்துரை களை உள்ளடக்கிய அறிக்கை, ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப் பிக்கப்படும் என ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் இந்தச் சந்திப்பின்போது உறுதியளித் தார் என்று கிழக்கு முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பைத் தொடர்ந்து, கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கம் அளிக்கையிலேயே முதலமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டில் உள்ள மனித உரிமை மீறல் தொடர்பான பிரச்சினைகள், படையினரு டைய இருப்பிடங்கள் மக்களின் வாழ்க்கையில் தாக்கம் செலுத் தும் விதம், மீள்குடியேற்றத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், வேலையில்லாப் பிரச்சினைகள் மற்றும் விதவைகள் தொடர்பாக வும் இதன்போது ஐ.நா. அதிகாரி யின் கவனத்துக்குக் கொண்டு வந்ததாகவும் கிழக்கு முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

புதிய பயங்கரவதத் தடைச் சட்டம்

## சிவில் சமூகத்தின் கருத்தைக் கேட்போம்

### மங்கள தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 15
பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப்படும் புதிய சட்டம் தொடர்பில் சிவில் அமைப்புகள் மற்றும் பொது மக்களிடம் ஆலோசனை பெறப்படும். பின்னரே அதன் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

சித்திரவதைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட சட்டம் தொடர்பில் அரசு எந்த ளவு இதய சுத்தியுடன் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்பது தொடர்பில் 20 சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து ஆராய்ந்து அறிக்கை யொன்றைத் தயாரித்து அரசிடம் கையளித்துள்ளன. இந்த அறிக் கையை ஐ.நா.வுக்கும் சமர்ப்பிக்கவுள்ளதாக சிவில் அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் முதன்மை அதியாக கலந்து கொண்ட அயலுறவுத் துறை அமைச்சர் மங் கள சமரவீரவிடமே குறித்த அறிக்கை கையளிக்கப்பட்டது. (உ-5)

## காய்ச்சலால் பெண் சாவு

காய்ச்சல் காரணமாக யாழ். போதான வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது

புத்தூர் கிழக்கு வாதரவத்தைச் சேர்ந்த திருச்செல்வம் இலக்கண குமாரி (வயது - 51) என்பவரே இவ் வாறு உயிரிழந்தார்.

காய்ச்சல் ஏற்பட்டதாகத் தெரிவித்து அச்சுவேலி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதான வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு நேற்றையதினம் காலை 10 மணியளவில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

காய்ச்சலுடன், நீர்சத்துக்குறைபாடு மற்றும் குருதிச்சோகை காரணமாக இதயம் செயலிழந்ததே இறப்புக்கு காரணம் என்று மருத்துவப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நவசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (வ-ரி7)

## இராணுவப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுதி வைத்துவிட்டு அவர் தற்கொலை செய்தார் எனப்படுகிறது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரியும் மூன்று பிள்ளைகளின் தந்தையுமான இந்திரகே ஜயமந்த (வயது -51) என்பவரே கேகாலையில் உள்ள அவரது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது சடலத்துக்கு அருகில் இருந்து கடிதம் ஒன்று மீட்கப் பட்டது என்று தெரிவிக்கப்படு கிறது. அவராலேயே அந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளதாகப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அந்தக் கடிதத்தில், "சண்டே லீடர் ஆங்கிலப் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை நானே படுகொலை செய்தேன். எனவே லசந்த படுகொலைக் குற்றச்சாட் டுகளின் கீழ் தற்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட் டுள்ள இராணுவப் புலனாய்வு பிரிவினை சேர்ந்தவர்களை விடுதலை செய்யுங்கள்" என்று எழுதப்பட்டுள்ளதாகக் கூறப்படு கின்றது.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவப் புலனாய்வு அதிகாரி பிரேமானந்த உடலக, லசந்தவை படுகொலை செய்ய வில்லை, நானே அவரை கொன்றேன் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஜயமந்தவின் உடல் கேகாலை பொது வைத்தியசாலைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது.

முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களுக்காக பாதுகாப்புத் தரப்பினரை விசா ரணை செய்வது குறித்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள கருத்து இலங்கை அரசியலில் பூதாகரமாக வெடித்துள்ள நிலையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

லசந்த படுகொலை தொடர்பிலான வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இராணுவப் புலனாய்வுப் பிரி வின் முன்னாள் பணிப்பாளரை முன்னிலையாகுமாறு உத்தர விடப்பட்டிருந்தது. (உ-5)

## பொறுப்பதிகாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு சுன்னாகம் பொலிஸா ரால் கைதுசெய்யப்பட்ட சிறீஸ்கந்தராசா சுமணன் பின்னர் இர ணைமடுக் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். அவரு டன் கைது செய்யப்பட்ட வேறு மூன்று இளைஞர்கள், பொலிஸ் காவலில் வைத்து சுமணன் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்றும் அதன் பின்னர் பொலிஸ் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டார் என்றும் மறுநாள் அவர் இறந்துவிட்டார் என் பதைத் தாங்கள் அறிந்தனர் என்றும் அண்மையில் மல்லாகம் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த சிந்தக்க பண் டார உள்ளிட்ட பொலிஸார் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப் பட்டதுடன் சித்திரவதைக் குற்றச் சாட்டுக்களும் சுமத்தப்பட்டன. சுமணனின் சடலம் கிளிநொச்சி யில் மீட்கப்பட்டதால் அது தொடர் பான வழக்கு கிளிநொச்சி நீதிமன் றத்தில் நடந்து வருகிறது. நேற்று வழக்கு விசாரணைக்கு வந்த போது, சிந்தக்க பண்டார, ஆர். எம்.எஸ்.ராஜபக்ச, கே.ஜயந்த ஆகிய பொலிஸார் கைது செய்யப்பட்டு முற்படுத்தப் பட்டிருந்தனர். ஞா.மயூரன் என்ற மற்றொரு பொலிஸார் நீதிமன்றத்தில் சரணடைந்தார். அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்த வழக்கில் மற்றொரு சந்தேகநபரான வி.ரி.எஸ். வீரசிங்க என்ற பொலிஸார் கடந்த வாரமே நீதிமன்றில் சரணடைந்திருந்தார். அவரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அனைவரும் அனுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டனர். (உ-4,106,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகமாலையில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையளிக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு பளைப் பிரதேச செயலாளர் திருமதி பி.ஜெயராணி தெரிவித்தார்.

ஏ-9 வீதிக்கு தெற்குப் புறமாக 200 மீற்றர் பகுதியை முதலில் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் வேம்பொடுகேணி தெற்குப் பகுதி, முகமாலை மடத்தடிப் பகுதி, இந்திராபுரத்தின் ஒரு பகுதி என்பன விடுவிக்கப்படவுள்ளன.

1996ஆம் ஆண்டுக்கு முன்னர் வேம்பொடுகேணி தொடக்கம் முகமாலை தெற்கு வரையான 2 கிலோ மீற்றர் தூரமான பகுதிகளில் 300 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்தன. 1996 ஆம் ஆண்டு மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற வன்செயல்களின் போது அனைத்துக் குடும்பங் களும் வெளியேறிக் கடந்த 20 வருடங்களாக ஏனைய பிரதேசங்களில் வசித்து வருகின்றன.

வேம்பொடுகேணியில் சில இடங்களில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டபோதிலும் ஏனைய பகுதிகளான இந்திராபுரம், முகமாலை, மடத்தடி போன்ற பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்படவில்லை. படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் காணப் பட்ட முகமாலை தெற்கு, மடத்தடி உள்ளிட்ட கிளாலி வரை யான பகுதிகளில் படையினர் வெடிபொருள்களை அகற்றியுள்ளனர். வேம்பொடுகேணி, இந்திராபுரம் பகுதிகள் ஹலோ டிரஸ்ட் நிறுவனத்தினரால் கடந்த ஏழு வருடங்களாக வெடிபொருள்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

ஏ-9 வீதி மற்றும் தண்டவாளம் அமைப்பதற்காக ஏ-9 வீதியிலிருந்து இருபக்கமும் சுமார் 300 மீற்றர் தூரம் வரை வெடி பொருள்கள் ஒரு வருட காலத்தில் அகற்றப்பட்டு வீதி வேலைகள் நடைபெற்றன.

மீள்குடியேற்றத்துக்காக விடுவிக்கப்படவுள்ள பிரதேச மக்கள் தமது பதிவுகளைப் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளுமாறும் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

(த-5-ரி3-9

# இலங்கையில் கிளை ஆரம்பிக்க வெளிநாட்டு வங்கிகள் ஆர்வம்

இலங்கையில் கிளைகளை ஆரம்பிப்பதற்கு வெளிநாட்டு வங்கிகள் ஆர்வம் தெரிவித்துள்ளதாகவும், இந்தக் கோரிக்கைகளை இலங்கை மத்திய வங்கி பரிசீலனை செய்து வருவதாகவும் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஐந்து வெளிநாட்டு வங்கிகள் இலங்கையில் தமது கிளைகளை ஆரம்பிக்க ஆர்வத்தை வெளிப்படுத்தி யுள்ளன எனவும், இதில் இரு மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த வங்கிகளுக்கும், ஒரு இந்திய வங்கிக்கும் அனுமதி வழங்குவது குறித்து இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையில் இந்த வங்கிகள் தமது கிளைகளை ஆரம்பிப்பதற்கு வேண்டிய தேவைகள் குறித்து நாம் கவனம் செலுத்துகிறோம். குறிப்பாக இலங்கையில் தற்போது 12 வெளிநாட்டு வங்கிகள் இயங்கி வரு கின்றன. இவை மொத்த சந்தையில் 10சத வீதத்தை தம்வசம் கொண்டுள்ளன. எனவே, நாம் வெளிநாட்டு வங்கிகளுக்கு அனுமதி வழங்கி இந்தப் பிரிவை மேலும் சிக்கலாக்க விரும்பவில்லை.

ஆசிய வங்கிகள் அதிகளவு ஆர்வத்தைக் கொண்டுள்ளதுடன், ஒரு சீன வங்கியும் இலங்கையில் தனது கிளையை ஆரம்பிக்க ஆர்வத்தை வெளியிட்டுள்ளது என அவர் மேலும் குறிப் பிட்டார். (த)

## மரண அறிவித்தல்

### இராஜசிங்கம் சிவராஜா (சச்சி)



மண்ணில் 12 . 09 . 1957 — விண்ணில் 29 . 09 . 2016

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Pletten Berg ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராஜசிங்கம் சிவராஜா (சச்சி) 29.09.2016 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் பொற்கொடி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், அனுஜாவின் (ஜேர்மனி) பாசமிகு கணவரும், லோஜினி, தவராஜா (மெக்கானிக் அப்பன்), நந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஆனந்தக்குமாரசாமி (இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்) மற்றும் வனஜா, பரமநாதன், ரஞ்சன் (கனடா), காலஞ்சென்ற சுதர்சன் மற்றும் கந்தவேள், நரேந்திரன் (அதிபர் - ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை), கெங்கா ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீஜனனி (UK), ஸ்ரீஜனன்(இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர் - காங்கேசன்துறை),பகலவன், லேக்கா, நிரோஜா, திவ்யா, கேசவன் ஆகியோரின் மாமனாரும், காருண்யன், புனர்வசன், (ரஜீஸ், நிலானி, பவித்தா - கனடா), தனுராஜ், கவிசாந், ஜஸ்மினா ஆகியோரின் பெரியப்பாவும், கம்சிகாவின் (UK)அன்புப் பேரனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.
(J/5033) (11,18)
தகவல்:
குடும்பத்தினர்.

# பீடியா பிளஸ் பரிசுகள்




1 முதல் 7 வயதுக்குட்பட்ட வளரும் குழந்தைகளுக்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட ஒரு முன்னணி பால் மா உற்பத்தி நிறுவனமான பீடியா ப்ளஸ், முன்னெடுத்திருந்த கிவ்ற் கலோரி (பரிசு மழை) என்ற நுகர்வோர் ஊக்குவிப்புப் பிரசாரத்தில் வெற்றியீட்டியவர்களின் விவரங்களை அண்மையில் அறிவித்துள்ளது.

நுகர்வோர் நீண்ட காலமாக காண்பித்து வந்துள்ள விசுவாசத்துக்கு வெகுமதியளிக்கும் வகையில் அவர்களுடன் இடைத்தொடர்புகளைப் பேணுவதற்கும் இடமளிக்கும் வகையில், இந்தச் சமீபத்தைய ஊக்குவிப்புப் பிரசாரம் விசேடமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற பரிசுகளையிட்டு குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளதுடன், தமது பிள்ளைகளை உற்சாகப்படுத்தியுள்ள உயர் தரத்திலான உற்பத்தியைப் பெற்றோர்கள் பாராட்டியுள்ளனர்.

எங்கள் மீது மிகவும் ஆழமான விசுவாசத்தைக் கொண்டுள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு வெகுமதியளிக்க முடிந்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். சமீபத்தைய ஊக்குவிப்புப் பிரச்சாரம் தொடர்பில் அவர்கள் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்கள் மிகவும் உற்சாகமளிக்கின்றன.

பரிசுகளைச் சேகரித்த பெற்றோர்கள் தமது குழந்தைகள் பீடியா பிளஸ் உற்பத்தியை அருந்தி மகிழ்வது மட்டுமன்றி, தொடர்ந்தும் தினசரி அதனைக் கேட்கின்றனர் என்பதை எம்மிடம் கூறியிருந்தனர்.

தமது குழந்தைகளுக்கு சிறப்பாக ஊட்ட உதவியுள்ளமைக்காக அவர்கள் பீடியா ப்ளஸ் இற்கு தமது நன்றிகளையும் வெளிப்படுத்தியி ருந்தனர், என்று சன்சைன் ஹெல்த் கெயார் நிறுவனத்தின் உற்பத்திப் பிரிவு முகாமையாளரான விந்தியா மென்டிஸ் அவர்கள் குறிப்பிட்டார். (த)

வணிகம்

# எண்ணெய் விநியோகத்தில் இனிப் புதிய நடைமுறை

போத்தலில் அடைக்கப்பட்டு அல்லது பொதி செய்யப்பட்டு உள்ளூரில் விற்பனை செய்யப்படுகின்ற அனைத்து எண்ணெய் வகைகளினதும் விற்பனையின் போது அவை தொடர்பான தகவல் அளித்தல் சரியான முறையிலே நுகர்வோருக்கு காட்சிப்படுத்தப்பட வேண்டுமென நுகர்வோர் விவகார அதிகார சபை வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளது.

குறிப்பாக சில்லறை அல்லது மொத்த விற்பனையின் போது சகல உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள், அவற்றின் தகவல்களை தெளிவாக அச்சிட வேண்டுமென தெரிவித்துள்ளது. பொருள் இலக்கம், உற்பத்தித் திகதி, காலாவதித் திகதி, அளவு, அதிகபட்ச சில்லறை விலை, உற்பத்தியாளர் பெயர் மற்றும் முகவரி, இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் இறக்குமதியாளர் பெயர், முகவரி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட நாடு என்பன தெளிவாக அச்சிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட வேண்டும் என அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் உணவுக்காக பயன்படுத்தப்படும் எண்ணெய் வகை மொத்தமாக இறக்குமதி செய்யப்பட்டு பொதியிடப்பட்டிருப்பின், உற்பத்தித் திகதி மற்றும் மீள் பொதியிடப்பட்ட திகதி என்பனவற்றை குறிப்பிடப்பட வேண்டுமெனவும் கலப்பு எண்ணெய் வகையாயின், அதில் அடங்கியுள்ள எண்ணெய் வகை மற்றும் அதன் விகிதாசாரம் தொடர்பான தகவல்களுடன் அதற்கு மேலதிகமாக கலப்பு செய்யப்பட்ட எண்ணெய் என்ற தெளிவுபடுத்தல் அச்சிடப்பட வேண்டுமெனவும் வர்த்தமானியில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை நடைமுறையிலிருந்த விதிமுறைகளுக்கு அமைவான, உணவுக்காக பயன்படுத்தப்படும் உறையிடப்பட்ட அல்லது பொதி செய்யப்பட்ட எண்ணெய் என்ற பதம் நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்மூலம் நீக்கப்பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறைச் செயலிகள், 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரவிருப்பதாக அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா இரத்தினசபாபதி



நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா இரத்தினசபாபதி நேற்று (14.10.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பி...ன்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr.செல்வி வைரியநாயகி கதிரித்தம்பி
(சகோதரி)

## மரண அறிவித்தல்

### றூபி அரியரத்தினம்

யாழ்ப்பாணம் YWCA யின் முன்னாள் தலைவரும், CMS பாடசாலைகளின் ஆட்சிக்குழு முன்னாள் உறுப்பினருமான றூபி அரியரத்தினம் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற B.V அரியரத்தினத்தின் (ஓய்வுபெற்ற பொறியியலாளர் CGR) அன்புத் துணைவியாரும், ராஜன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), செல்வம் (ஓய்வுபெற்ற CTC / CBA), காலஞ்சென்ற குலம் (நீர்ப்பாசனத் திணைக்களம்), ஞானோ (CEO Sika Ltd.Papua New Guinea ) ஆகியோரின் அருமைத் தாயாரும், விமலினி (சிங்கப்பூர்), Dr. பிறேமினி ( Oasis Hospital), சந்திராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), மேரி (பணிப்பாளர் - Sika Ltd.Papua New Guinea ) ஆகியோரின் மாமியாரும், சிறிஷா (சிங்கப்பூர்), ரஜீவ் (Pharm Evo )-பிரியான்ஜலி, ஷர்மிளா-பிரசங்கா (ஆஸ்திரேலியா), சஞ்ஜீவ் (Metro Politan) - டாவினா, அனோஜா - யொஹான் (ஆஸ்திரேலியா), வினித்தா (மக்கள் வங்கி)-டினேஸ் ஆகியோரின் பாட்டியும், அலெக்ஸ், ஹனா, யசிந்து, டினன்யா, ஷெனுரா, கேஷிகா, ஜேடன், நத்தானியா, ஜோசுவா, அவினேஷ், டிவ்னேஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 13ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5.00-9.00 மணிவரையும், வெள்ளிக்கிழமை 14ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 9 மணிவரையும் அஞ்சலிக்காக பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (15.10.2016) சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் நல்லடக்க ஆராதனையின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு 4ஆம் குறுக்குத் தெரு, இல.139 இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் நாளை (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுண்டுக்குளி சென் ஜோன்ஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

(J/5333) (11,18)
தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி (கனகக்கா) விநாயகம்



புலோலி, பிலத்தம்பையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி(கனகக்கா) விநாயகம் 13.10.2016 வியாழக்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை விநாயகம் (காந்தி மாஸ்ரர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் சக்திதேவி, மாணிக்கவாசகர்(காந்தன்), அருளீசன் (ஈசன்), கிருஸ்ணகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேந்திரா, பாமதி, வசந்தி, மீரா ஆகியோரின் மாமியாரும் நிரோஜினி, அனித்தா, ஹரிபிரசாந், பத்மபிரசாத், சாஜித்தியா, சந்தோஷ், சாருஜா, கனுஷிகன், ரக்ஷியன், அபிஷனா ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2016) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஈஸ்வரி இல்லம்,
பிலத்தம்பை,
புலோலி தென்மேற்கு, புலோலி.
(N/154) (14,17,18)
தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதிகள்...

கையெழுத்திட்டனர். 1977 ஆம் ஆண்டு, 1989 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இலங்கை அரசுக்கு எதிராகத் தெற்கு இளைஞர்கள் ஆயுதப் புரட்சியில் ஈடுபட்டனர்.

அவர்களில் பெருமளவிலா னோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அப் போதிருந்த ஆட்சியாளர்கள் அரசியல் தீர்மானம் எடுத்து, குறுகிய காலப் பகுதியினுள் அவர்களை விடுதலை செய்தனர்.

வடக்கு-கிழக்கில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டிருந்த நிலையில் 1987 ஆம் ஆண்டு அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இதன் பின்னர் முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வு வழங்கி விடுவித்தனர்.

அதே நடைமுறையைப் பின்பற்றி எஞ்சியிருக்கும் 160க்கு குறைவான அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு அரசியல் தீர்மானம் மேற்கொள்ளப்படவேண்டும்.

இதனை வலியுறுத்தியே வவுனியாவில் நேற்றுக் கையெழுத்துப் போராட்டம் வவுனியா மாவட்ட சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான செ.மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5)

## மைத்திரி, ரணில்...

அமைச்சர் சாகல ரட்ணாயக் கவும் சந்திப்பில் உடனிருந்தார் என்று தெரிவிக்கப் பட்டது.

இந்தியப் பயணத்துக்கு முன்னதாக, ஜனாதிபதி அவசர அவசரமாக இந்தச் சந்திப்பை நடத்தினார்.

கோத்தபாய ராஜபக்ச மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை தொடர்பாக, ஜனாதிபதி மைத்திரிபால இலங்கை சட்ட மன்றக் கல்லூரியில் கடந்த புதன்கிழமை ஆற்றிய உரையின்போது பகிரங்கமாக அதிருப்தி வெளியிட்டிருந்தார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவு, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு என்பன அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுவதாகவும் அவர் குற்றஞ் சாட்டியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் சாகல ரட்ணாயக்க வசமுள்ள சட்டம் ஒழுங்கு அமைச்சை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்கலாம் என்றும் ஊகங்கள் வெளியாகியிருந்தன.

இந்தப் பின்னணியிலேயே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் சாகலவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு இரகசியச் சந்திப்பு நடைபெற்றது. சந்திப்புக் குறித்து பகிரங்க அறிவிப்பு ஏதும் வெளி யாகவில்லை. இதற்கிடையே, ஜனாதிபதியின் உரை தொடர்பாகக் கருத்து வெளியிட மறுத்துள்ள நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவரான பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி வைத்தியாலங்கார, "நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை களில் ஜனாதிபதிக்கு மகிழ்ச்சி இல்லாவிடின் அதன் மீது அவரால் நடவடிக்கை எடுக்க முடியும்" என்று கூறினார். (உ-5)

## மைத்திரிக்கு...

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார். கோத்த பாய ராஜபக்ச மற்றும் கடற்படைத் தளபதிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிருப்தி வெளியிட்டிருந்தார். ஜனாதிபதியின் இந்த உரை தொடர்பில், அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவிடம் கேள்வி எழுப் பியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"சுயாதீன ஆணைக் குழுக்கள் நிறுவப்பட்டிருப்பினும், அதிலுள்ள சில அதிகாரிகள் அரசியல்வாதிகளின் தேவைக்கு ஏற்ப செயற்பட்டு வருகின்றனர். ஜனாதி பதிக்கு எதிரான நடவடிக்கை களிலும் அவர்கள் ஈடுபட்டு வரு கின்றனர்" - என்றார். (உ-5)

## மைத்திரியின் கோபம்...

வேற்றுவதில் தாமதம் காட்டுவதைக் கண்டு ஜனாதிபதிக்குக் கோபம் வருவது ஆச்சரியமானதல்ல.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிசாந்த சிறிவர்ண சிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"குற்றப் புலனாய்வுப் பிரிவினர், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வினர், நிதி மோசடி விசாரணைப் பிரிவினர், பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளை நீதிமன்றத்துக்குக் கொண்டு வருவதில் காட்டும் ஆர்வத்தை, பெரிய ஊழலில் ஈடுபடும் திருடர்களைப் பிடிப்பதில் காட்டாதுள்ளனர். இந்த விடயத்தில் பொது மக்களும் அதிருப்தி அடைந்துள்ளனர் - என்றார். (உ-5)

## கிணற்றில்...

மீட்கப்பட்டுள்ளன. நேற்றுக் காலை தோட்டக் கிணற்றைப் புனரமைப்பதற்காக, இறைத்தபோது கிணற்றில் ஆயுதங்கள் கிடந்ததை உரிமையாளர் அவதானித்துள்ளார். உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரால் கிளைமோர் குண்டு, டேத் கோட், எட்டு மிதிவெடி, ஆறு பராலைட், கிளை மோர் குண்டு என்று பல ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. (த-5)

## ஆச்சரியம்!...

களைத் திருப்திப்படுத்தும் வகையில் செயற்படுவதாக இருந்தால், அவை தொடர்பில் தீர்மானம் எடுக் கப்போகிறேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த புதன்கிழமை உரையாற்றியிருந்தார். இது தொடர்பில் கருத்து வெளியிடு கையிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடு முகம் கொடுத்துள்ள பிரச் சினைகள் மற்றும் மக்கள் எதிர்நோக்கியுள்ள வாழ்க்கைப் பிரச்சினைகள் குறித்து நாட்டு மக்கள் சிறந்த விளக்கத்தைக் கொண்டுள்ளனர். நாட்டைக்கொண்டு செல்லும் தலைவர்களுக்கே இது பற்றிய விளக்கம் போதாதுள்ளது.

எனது மட்டக்களப்புப் பயணத்தின் போது அந்த மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் என்னிடம் தெரிவித்தார்கள். சகல மக்களுக்கும் பிரச் சினை இருக்கின்றது. அவர்கள் என்னிடம் தெரிவிக்கின்றனர்.

ஆச்சரியம் என்னவென்றால், நாட்டை வழி நடத்துபவர்களுக்கு இந்தப் பிரச்சினைகள் தெரியாமல் இருக்கின்றன" - என்றார். (உ-5)

## படகில் வந்த ...

னர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பிரிவின் கீழான விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் இளவாலைக்குச் சென்று அவற்றை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

படகில் குறித்த பொதிகள் எடுத்து வரப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் தேடு தலில் ஈடுபட்டனர். "எனினும் பட கில் கஞ்சாவைக் கொண்டு வந்தவர்கள் பொதிகளைக் கரையில் வீசிவிட்டுத் தப்பிச் சென்றார். அதனால் அவரைக் கைது செய்ய முடியவில்லை. தீவிர விசாரணை முன்னெக்கப்படுகிறது" என்று கஞ்சா கரையில் வீசப்பட்டபோதும் அதனை எடுக்கவும் எவரும் வரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ-4,26)

## 1,262...

நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது என்று மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்க தெரிவித்தார்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 177 பேர், சந்தேகத்துக்கிடமான நபர்கள் 540 பேர், சிறைச்சாலை யிலிருந்து தப்பியோடிய சந்தேக நபர்கள் 3 பேர், முப்படையிலிருந்து தப்பியோடிய 2 பேர் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய 23 பேர், குடிபோதையில் வாகனம் செலுத்திய 103 பேரும், போக்குவரத்து விதிமுறைகளை மீறிய 323 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ-5)

## 820 ரூபா...

காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

வருடத்துக்கு 300 நாள்கள் வேலை வழங்க வும், மேலதிக கொழுந்துக்கு 25 ரூபா வழங்கவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த யோசனைக்கு முதலாளிமார் சம்மேளம் இணக்கம் தெரிவித்துள்ளதாக கட்சித் தலைவர் முத்து சிவலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வலியுறுத்தி முதலாளிமார் சம்மேளனத்துக்கும், கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றன. எனினும் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்புக்கு முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவிக்காத நிலையில் மலையகத்திலும், கொழும்பிலும், வடக்கு கிழக்கிலும் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்றன.

தொழில் உறவுகள் அமைச்சர் தலைமையில் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் பேச்சு நேற்று இடம்பெற்றதாகவும் இதன் போது நாள் ஒன்றுக்கு 820 ரூபா வழங்க முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் முத்துசிவலிங்கம் தெரிவித்தார். (உ-5)

## மைத்திரிக்கு தொட..

மைத்திரிபால அதிருப்தி வெளியிட்டமை மற்றும் குற்றப் புலனாய் வுப் பிரிவு, நிதி மோசடிப் பிரிவு ஆகியவற்றின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வகையில் கருத்து வெளியிட்டமையைக் கண்டிப்பதாக காணாமற் போனோரைத் தேடிக் கண்டறியும் குழு தெரிவித்தது.

இது தொடர்பில் அதன் செயலர் சுந்தரம் மகேந்திரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

ஜனாதிபதியின் கருத்தை, முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள், ஆள்கடத்தல், கொலைகளுடன் தொடர்பு பட்டவர்களைப் பாதுகாக்கும் ஒரு நடவடிக்கையாகவே எண்ணுகின்றோம். இது வெறுமனே படையினரைப் பாதுகாக்கும் நடவடிக்கை அல்ல. இந்தச் செயற்பாட்டை நாம் கண்டிக்கின்றோம்.

முன்னைய ஆட்சியாளர் மகிந்த ராஜபக்சவின் செயற்பாட்டைப் போன்றே இவருடைய செயற்பாடும் உள்ளது போன்று தோன்றுகின்றது. இது நல்லாட் சியின் உகந்த நடவடிக்கை அல்ல" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

## பொருளாதார...

ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கொழும்பு அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் அமைவிடம் தொடர்பான நீண்ட சர்ச்சையின்பின், வடக்கில் இரண்டு பொருளாதார வலயங்கள் அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. அவற்றை வவுனியா மதகு வைத்தகுளம் மற்றும் மாங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் அமைக்க சகல தரப் பினரும் இணக்கம் தெரிவித்தனர். இதில் மதகு வைத்தகுளத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி அடிக்கல் நாட்டு விழா இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ -101)

## மரண அறிவித்தல்



திருமதி **இரத்தினம் அப்புத்துரை**

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் அப்புத்துரை நேற்று (14.10.2016) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2016) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு.**

**தகவல்:**
**ராணி, கலா, சித்திரா மணி (மகள்மார்) 077 1228749**

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை துரைராசா

**( ஓய்வுநிலை ஆசிரியை)**



பங்களா வீதி, மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை துரைராசா கடந்த (12.10.2016) புதன்கிழமை காலமாகி விட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள் ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான நடராசா, தளையசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுந்தரம் பிள்ளை துரைராசாவின் அன்பு மனைவியும், கமலேஸ்வரன் (லண்டன்), பரமேஸ்வரன், துவாரகேஸ்வரன், சர்வேஸ்வரன் (ஆஸ்திரேலியா), தர்சினி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சோதிமலர் (லண்டன்), காலஞ் சென்ற சுமதி மற்றும் வதனா (வலயக் கல்வி அலுவலகம்- வடமராட்சி), சிவப்பிரியா, செல்வநாயகம் (இந்தியா), மாலா, சிவா, தயா, நிதி, குமார் ஆகியோரின் அன்பு மாமியும், துலக்ஷிகா, துலக்ஷன் (லண்டன்), ஷபிதா, ரிசர்பன், சபரினா, சஞ்சிதா, பிரியங்கா, அச்சுதன், நிஜந்தன், துர்க்கா, பாலா, சிந்து, நிவேதிகா, சக்தியேந்திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.10.2016) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**பங்களா வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.**

**077 425 4706 (ரவி - ஆசையப்பா), 076 640 8582 (பரன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# 85 ஹெக்ரேயரில் இம்முறை உருளைக்கிழங்குச் செய்கை

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ். குடாநாட்டில் இந்த முறை 85 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் உருளைக் கிழங்குச் செய்கையில் விவசாயிகள் ஈடுபடவுள்ளனர்.

உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடுவதற்கான ஆயத்தப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த போகத்தைப் போன்று இந்த முறையும் விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கை மானிய விலையில் பெற்றுக்கொடுப்பதற்கு விவசாயத் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக மாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த விதை உருளைக் கிழங்கு பெறப்பட்டுப் பின்னர் யாழ். மாவட்ட உரு ளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசத்தினால் செய்கையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

மானிய விலையில் உருளைக்கிழங்கை விநியோகிப்பதற்குச் செய்கையாளர்களின் விவரங்களைத்திணைக்களம் திரட்டியுள்ளது.

இந்தக் காலபோக உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட ஆர்வம் காட்டும் விவசாயிகள் தமது விவரங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

விதை கிழங்கு முன்னுரிமை அடிப்படையில் மானிய விலைக்கு வழங்கப்படும்–என்றார். (த–17)

கண்ணீர் அஞ்சலி

Dr. கனகரத்தினம் சிவனேசன்

08.10.2016 அன்று இறைபதம் அடைந்த Dr. சிவனேசனின் திடீர் மரணமான செய்தி கேட்டு அதிர்ச்சியடைவதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

45, மேவீல்லேன்,
கொட்டகேன.
(J/5385).(14.17.18)
ராஜசேகரன் கொங்காதேவி
குடும்பத்தினர்.

10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
லயன் கதிர்காமத்தம்பி நாகராசா (J.P)
(B.Com,M.A)
(இளைப்பாறிய அதிபர் - தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, மாவட்ட இணைப்பாளர் இந்து கலாசார சமூக சேவைகள் அமைச்சு)

தோற்றம் 28.11.1938
மறைவு 07.10.2006
திதி: பூரணை (15.10.2016) சனிக்கிழமை

பத்தாண்டுகள் கழிந்தாலும் உதிராது உம் நினைவு
மறையாது எம் மனதில் உங்கள் உருவம்

கே.கே.எஸ். வீதி,
8 ஆம் கட்டை, மல்லாகம்.
குடும்பத்தினர்.



## மூலிகைப் பயிர்களின் கண்காட்சி நேற்று

சாவகச்சேரி, ஒக்.15

உள்ளூராட்சி மாதத்தையொட்டி சாவகச்சேரி நகர சபையினரின் மூலிகைப் பயிர்களின் கண்காட்சி நேற்றுச் சாவகச்சேரி பொதுச் சந்தையில் காட்சிப்படுத்தப்பட்டது. பல்வேறு வகையான நோய்களைக் குணப்படுத்தம் மூலிகை வகைகளும், பழமரக் கன்றுகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசன் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கண்காட்சியை பார்த்து மகிழ்ந்ததுடன் பெருமளவு மூலிகைச் செடிகளையும் பழமரக் கன்றுகளையம் கொள்வனவு செய்ததைக் காண முடிந்தது. (த–9)

# வில்பத்து தேசிய பூங்கா வறட்சியினால் பாதிப்பு

## பட்டினியில் விலங்குகள்

கொழும்பு,ஒக்.15

நாட்டில் நிலவி வரும் வெப்பநிலை காரணமாக வில்பத்து தேசிய பூங்கா வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள நூற்றுக்கணக்கான விலங்குகள் பட்டினியால் சாவை எதிர்நோக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் குறித்து பூங்காவின் பொறுப்பதிகாரி மனோஜ் விஜேரத்ன தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவிவரும் வெப்ப நிலை, பருவ மழைதள்ளிப்போனமைமற்றும்விலங்குகளுக்கானநீர்வழங்கல் தொகுதித் தண்ணீரை விவசாயிகள் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தல் போன்ற வற்றின் காரணமாக இந்த வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் விலங்குகள் தண்ணீரைத் தேடி காலஓயா மற்றும் மெதுறு ஓயா என்பவற்றைத் தேடிச் செல்வதாகவும், இந்தச்செல்கையானது வேட்டைக்காரர்களுக்குச் சாதகமான நிலையை ஏற்படுத்தியிருப்பதால் விலங்குகளுக்கு ஆபத்தான நிலை உருவாகியிருப்பதாகவும், இந்தப்பருவமழைதள்ளிப்போனால் நிலைமை மிகவும் மோசமாகும் எனவும் அவர் தெரிவித்தார். (த)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில்
01.10.1941

தரணி அடியில்
27.09.2015

அமரர் உயர்திரு வேலுப்பிள்ளை கனகராசா
(ஓய்வுநிலை உதவிப் பதிவாளர் நாயகம் வடக்கு – கிழக்கு மாகாணம்)
திதி: பூரணை (15.10.2016)

கண்ணீரில் கரைந்தன...... பன்னிரண்டு மாதங்கள்!
கருணைத் திருமுகத்தின் வழிநடத்தல் இல்லாது
கடந்து சென்ற ஓராண்டும் கனவு போலாயிற்று!
ஒருநாள் ஒருபொழுதேனும் உங்கள்
நினைவின்றி நாம் வாழ்ந்ததில்லை
எங்கள் அன்புத் தெய்வமே!
ஓர் ஆண்டென்ன ஒரு நூறு ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவும் அன்பும்
எங்களை விட்டு அகலாது
நீங்கள் என்றும் எங்களுடன் வாழ்ந்து
கொண்டிருப்பீர்கள்.

இல. 513/48
என்றும் உங்கள்
பிள்ளைகள்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வசந்தி சுரேஸ்குமார்
(சந்நிதியான் வேதாந்த ஆச்சிரம ஸ்தாபகரும் செல்வச்சந்நிதி ஆலய உரிமையாளரும்)

பிறப்பு
31.01.1971

இறப்பு
28.09.2015

திதி: 16.10.2016

எங்கள் குடும்ப விளக்கு
அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாய் திகழ்ந்தவள் நீ அம்மா!
இனியமொழி பேசியே உன் பிள்ளையை அன்போடு வளர்த்தாயம்மா
அப்படி இருக்கையில் கண்ணீர் என்னும்
கடல்தந்து ஆண்டு ஒன்றானதம்மா
உன் நினைவினில் நித்தமும் வாடுகின்றோமம்மா
அப்பாவின் கண்ணீர் கடல் இன்னமும் வற்றவில்லையம்மா
மீண்டும் இப்பூமியில் பிறப்பு உண்டானால்
எமக்குத் தாயாக நீ வேண்டும்...
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
என்றும் உங்கள் நினைவுடன் .....

கணவர், மகன் - தக்ஷன்
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய தீபாவளித் திருநாளை முன்னிட்டு

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

# மாபெரும் மெகா சேல்

# இந்தியன் பஜார்



உங்களுக்குத் தேவையான
திருமணப் பட்டுப்புடைவைகள், கொட்டன் சல்வார்கள்,
நெற் சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் சிறுவர் சிறுமியருக்கான
ஆடைத் தெரிவுகளை மாபெரும் விலைத் தள்ளுபடியில்
பெற்றுக் கொள்ளலாம்.

**இடம்**

**யாழ். வீரசிங்கம் மண்டபம்**

**காலம்**

**05.10.2016 முதல் 30.10.2016 வரை**

**சல்வார் துணிகள்**

| | | |
|---|---|---|
| ❖1 டொப் சல்வார் துணி (கொட்டன்) | ~~1000/=~~ | 750/= |
| ❖2 டொப் சல்வார் துணி (சில்க்) | ~~1250/=~~ | 1000/= |
| ❖3 டொப் சல்வார் துணி (சில்க்) | ~~1750/=~~ | 1500/= |

யாழ். மாவட்ட வாடிக்கையாளர்களின் நலன்கருதி
**எதிர்வரும் 21.10.2016 வெள்ளிக்கிழமை பி.ப 4.30 இற்கு**
**இல.80, கஸ்தூரியார் வீதி,**
**மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி**
**முதலாம் மாடியில்**
**திருமண பட்டுப்புடைவைகளின் பூங்காவனம்**
**"இந்தியன் செலக்ஷனின்" புதிய காட்சியறை**
**திறந்து வைக்கப்படவுள்ளது**
என்பதை அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

சகல வாடிக்கையாளர்களையும்
கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.


நன்றி
இந்தியன் செலக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுச் சாதனையை படைக்கவுள்ளது இந்தியா

ஒருநாள் ஆட்டங்களின் வரலாற்றில் 900 ஆட்டங்களை விளையாடவுள்ள முதல் அணி என்ற வரலாற்றுச் சாதனையை படைக்கவுள்ளது இந்தியா.

1974ஆம் ஆண்டு தனது முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் களமிறங்கிய இந்திய அணி இது வரை 899 ஆட்டங்களில் விளையாடியுள்ளது. 454 ஆட்டங்களில் வெற்றியும், 399 ஆட்டங்களில் தோல்வியும் கண்டுள்ளது. 7 ஆட்டங்கள் சமநிலையில் முடிந்தது. 39 ஆட்டங்களுக்கு முடிவில்லை. இந்த நிலையில் இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் நாளை ஆரம்பமாகிறது. இந்த ஆட்டம் இந்திய அணியின் 900 ஆவது ஆட்டமாகும். ஒருநாள் ஆட்டங்களின் வரலாற்றில் 900 ஆட்டங்களில் விளையாடிய முதல் அணி என்ற பெருமை இந்தியாவுக்கு கிடைக்கிறது. (ம)






## முச்சதம் விளாசினார் அசார் அலி வரலாற்றுச் சாதனையாகப் பதிவு

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று முச்சதம் விளாசினார் அசார் அலி.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து முதல் நாள் முடிவில் 279-1 என்ற நிலையில் இருந்தது. 146 ஓட்டங்களுடன் இரண்டாம் நாளான நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்தார் அசார் அலி. தொடர்ந்தும் சிறப்பாக விளையாடிய அவர் தனது முதலாவது முச்சதத்தைப் பதிவுசெய்தார். நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டம் பகலிரவு டெஸ்ட் ஆட்டமாகும். இதனால் பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களில் முச்சதம் விளாசிய முதல் வீரர் என்ற வரலாற்றுச் சாதனையையும் அவர் படைத்தார். பாகிஸ்தான் 579-3 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அசார் அலி 302 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். (ம)

## யங்ஹென்றிஸ் அபாரம்

கரணவாய் ஒக். 15

குறிஞ்சிக் குமரனின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது இளவாலை யங்ஹென்றிஸ்.

குறிஞ்சிக்குமரனின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் என்பன மோதின. ஆட்டத்துடன் இணைந்து யங்ஹென்றிஸின் ஆதிக்கமும் ஆரம்பமானது. 2 ஆவது, 19 ஆவது நிமிடங்களில் பதிவான கோல்கள் மூலம் முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது யங் ஹென்றிஸ்.

30 ஆவது நிமிடத்தில் மது, 36 ஆவது நிமிடத்தில் அமல்ராஜ் இருவரும் ஹென்றிஸின் கோல்களை உயர்த்தினர். 42 ஆவது நிமிடத்தில் அன்ரனிஸ் ஓர் கோலைப் பதிவுசெய்த போதிலும், 49 ஆவது நிமிடத்தில் யங்ஹென்றிஸின் ஐந்தாவது கோலைப் பதிவுசெய்தார் தனேஸ். முடிவில் 5:1 என்ற கோல் கணக்கில் யங் ஹென்றிஸ் வெற்றிபெற்றது. (ம-108)

## நவஜீவன்ஸ் சிவகுமரன் அரையிறுதியில்

கரணவாய், ஒக். 15

சோமஸ்கந்தன் வி.கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி சிவகுமரன், நவஜீவன்ஸ் வி.கழகங்கள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

சோமஸ்கந்தனின் திடலில் தொடர் நடைபெற்ற வருகிறது. அண்மையில் இடம்பெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக் கழகமும் நவஜீவன்ஸ் வி.கழகமும் மோதின. இதில் 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது நவஜீவன்ஸ் வி.கழகம்.

பிறிதொரு காலிறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் மோதின. முதல் செற்றை 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சிவகுமரனும், இரண்டாவது செற்றை 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அண்ணா வி.கழகமும் கைப்பற்றின. மூன்றாவது செற்றில் வெற்றியாளரைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இறுதி செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில்கைப்பற்றி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது சிவகுமரன். (ம-108)

## திரில் வெற்றி பெற்றது தென்கொரியா

உலகக்கிண்ண கபடித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் திரில் வெற்றிபெற்றது தென்கொரியா.

கபடி உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவின் அகமதாபாத்தில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் தென்கொரியாவும், பங்களாதேஷும் மோதின. 35:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் திரில் வெற்றிபெற்றது தென்கொரியா. அந்த அணி உலகச் சம்பியனான இந்தியாவை ஏற்கனவே வீழ்த்தியிருந்தது. இதனால் தென்கொரியா அரையிறுதிக்குச் செல்வதற்கு வாய்ப்பு உள்ளது. (ம)




## பாடும்மீனுக்கு இலகு வெற்றி

கரணவாய். ஒக். 15

குறிஞ்சிக்குமரன் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் இலகுவான வெற்றியைப் பதிவுசெய்தது குருநகர் பாடும்மீன் வி.கழகம்.



குறிஞ்சிக் குமரனின் மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்து 6 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார் பாடும்மீன் அணியின் கிறிஸ்ரன். தொடர்ந்து சாந்தன் 15 ஆவது நிமிடத்திலும், கிறிஸ்ரன் மீண்டும் 21 ஆவது நிமிடத்திலும் கோல்களை பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியின் 28 ஆவது நிமிடத்தில் கிறிஸ்ரன் ஓர் கோலைப் பதிவுசெய்தார். தற்போது 4-0 என்ற நிலையில் ஆதிக்கம் செலுத்தியது பாடும்மீன். நவஜீவன்ஸ் அணியின் சார்பில் அடுத்தடுத்து இரு கோல்கள் பதிவாகிய போதிலும் முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது. (ம-108)

## அனைத்து மாவட்டங்களிலும் நீச்சல் தடாகம் அமைக்கப்படும் என்கிறார் தயாசிறி ஜெயசேகர

கொழும்பு, ஒக். 15

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நீச்சல் தடாகங்கள் அமைக்கப்பட்டு, நீச்சல் போட்டிகளில் அனைத்துப் பாடசாலைகளினதும் பங்குபற்றல் உறுதிப்படுத்தப்படும். இவ்வாறு தெரிவித்தார் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர.

தெற்காசிய நீர் விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில்வைத்தே அவர் இதனைத் தெரிவித்தார்.



நாட்டில் நீச்சல் விளையாட்டை முன்னேற்ற வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நீச்சல் தடாகங்கள் அமைக்கப்பட்டு, நீச்சல் போட்டிகளில் அனைத்துப் பாடசாலைகளினதும் பங்குபற்றல் உறுதிப்படுத்தப்படும். மாகாண விளையாட்டுத் தொகுதியிலும் பாடசாலைகளிலும் நீச்சல் தடாகங்கள் அமைக்கப்பட்டு வெளிநாட்டுப் பயிற்சியாளர்களால் பயிற்சி வழங்கவுள்ளோம். கிராமிய மட்டத்திலிருந்து இந்தத் திட்டத்தை முன்னெடுப்பது மிக முக்கியமானது. 2020 ஆம்ஆண்டுஒலிம்பிக்தொடருக்கு இந்தத் திட்டம் சிறந்த ஆரம்பமாக அமையும் என எதிர்பார்க்கிறேன் எனவிளையாட்டுத்துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெய்னா விலகல்

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்திலிருந்து இந்திய அணியின் சகலதுறை வீரரான ரெய்னா விலகினார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை 3:0 என்ற அடிப்படையில் இந்தியா கைப்பற்றியது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது. முதலாவது ஆட்டம் தர்மசாலாவில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் இந்த ஆட்டத்திலிருந்து ரெய்னா விலகினார். காய்ச்சல் காரணமாகவே ரெய்னா விலகினார் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது.

கடந்த சில மாதங்களாக இந்திய அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்டிருந்த ரெய்னா, உள்ளூர் தொடர்களில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இந்திய அணியில் இடம்பிடித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)





# இன்று களமிறங்குகிறார் சாதனை மங்கை அனித்தா

யாழ்ப்பாணம், ஒக். 15

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடரில், கோலூன்றிப் பாய்தலில் இலங்கையின் சாதனையாளராகவலம்வரும்மகாஜனக்கல்லூரிமாணவி அனித்தா இன்று களமிறங்குகிறார்.

தேசியத் தடகளத் தொடர் கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. தொடரின் மூன்றாம் நாளான இன்று ஏராளமான போட்டிகள் நடைபெறவுள்ளன. 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வடக்கின் சார்பாக மகாஜனக் கல்லூரி மாணவி அனித்தா இன்று களமிறங்குகிறார்.

யாழ். துரையப்பா மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற தேசியமட்ட தடகளத் தொடரில் பெண்கள் பிரிவில் 3.41 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார் அனித்தா. இந்த அடைவு மட்டமே இலங்கையின் சாதனையாக உள்ளது. இந்தப் பாய்ச்சலின் பிற்பாடு இலங்கையின் சாதனையாளரான உருவெடுத்துள்ள அனித்தா மீது இன்று எதிர்பார்ப்புக்கள் குவிந்துள்ளன. தனது சாதனையைஅவர்தானேதகர்ப்பாரா?.தெரிந்துவிடும் இன்று மாலைக்குள். (ம-422)

# தாகிருக்கு அபராதம் விதித்தது ஐ.சி.சி.

தென்னாபிரிக்க அணியின் சுழல்பந்து வீச்சாளரான இம்ரான் தாகிருக்கு பன்னாட்டு கிரிக்கெட் சபையால் அபாரதம் விதிக்கப்பட்டது.

தென்னாபிரிக்கா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இறுதி ஒருநாள் ஆட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது. ஆனால் அந்த அணியின் சுழல் பந்து வீச்சாளரான தாகிர் பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் விதிமுறைகளில் ஏற்றுக் கொள்ளப்படாத சில செயற்பாடுகளை அரங்கேற்றினார்.

இலக்குச் சரிவுகள் ஏற்படும் பொது நீண்ட தூரம் ஓடிச் சென்று தனது ஆரவாரத்தை வெளிப்படுத்தும் வழக்கமுடையவரான தாகிர் நேற்றுமுன்தினம் ஆஸ்திரேலிய வீரர்களுடன் வார்த்தை மோதல்களில் ஈடுபட்டார். குறிப்பாக வோர்ணர், ஹெட் இருவரும் இணைப்பாட்டமாக சிறிது நேரம் நிலைத்து நின்றனர். அப்போது வோர்ணரையும், ஹெட்டையும் தாகிர் மிகையாகவே சீண்டினார். நடுவர்கள் இருமுறை தாகிரை அழைத்து எச்சரித்தனர். இருப்பினும் அவர் அடங்கவில்லை. அவரின் செயற்பாடுகள் மைதான நடுவர்களால் பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்து. காணொளியை ஆராய்ந்த பன்னாட்டு கிரிக்கெட் சபை குறித்த ஆட்டத்துக்கான கட்டணத்திலிருந்து 30 சதவீதத்தை அபராதமாக விதித்தது. (ம)

# அசார் அலி அபாரம் பாக். சிறந்த ஆரம்பம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நால் நிலவரத்தின் படி பாகிஸ்தான் அணி சிறந்த தொடக்கம் கண்டுள்ளது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் பகலிரவு டெஸ்ட் ஆட்டமாக நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் திர்மானித்தது. ஆரம்ப வீரர்களான சமி அஸ்லாம், அசார் அலி இணை நீண்ட இணைப்பாட்டத்தை வழங்கியது. இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களை எட்டியது பாகிஸ்தான். பதற்றத்தை உணராமல் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்து இருவரும் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்தனர். 10 ஓட்டங்களால் சதத்தைத் தவறவிட்டார் அஸ்லாம். அஸ்லாம் ஆட்டமிழந்தபோது பாகிஸ்தான் 215 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சதம் கடந்தார் அசார் அலி. நீண்ட காலத் தடுமாற்றத்தின் பின்னர் அவர் பெற்ற சிறப்பான சதம் இது. இந்தச் சதத்தின் மூலம் 50 டெஸ்ட் ஆட்டங்களில் அதிக சதங்களைப் பதிவுசெய்த (11 சதங்கள்) நான்காவது பாகிஸ்தான் வீரர் என்ற பெருமை அவருக்குக் கிடைத்தது. முதல் நாள் முடிவில் பாகிஸ்தான் 279-1 என்ற நிலையில் இருந்தது. அசார் அலி 146 ஓட்டங்களுடனும், சபிக் 33 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர். (ம)



# பொலார்ட், ரம்டின் அதிரடி நீக்கம்




இலங்கை, சிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியிலிருந்து பொலார்ட், ரம்டின் இருவரும் நீக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகின.

இந்த மூன்று அணிகளுக்கும் இடையிலான முத்தரப்புத் தொடர் அடுத்த மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகிறது. தொடருக்கான அணிகள் இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. தீவுகளின் அணித் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. பொலார்ட், ரம்டின் இருவரும் அணியிலிருந்து நீக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கம் ஒருவரால் கசியவிடப்பட்ட மின்னஞ்சல்களாலேயே விடயம் தெரியவந்துள்ளது. அண்மையில் நடைபெற்றுமுடிந்த பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் இவர்கள் இருவரும் சிறப்பாகச் செயற் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# தேசியத் தடகளத்தில் இன்றைய போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 15

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடர் கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. தொடரின் மூன்றாவது நாளான இன்று, 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல், 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான ஈட்டி எறிதல், 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான குண்டு போடுதல், 17 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான முப்பாய்தல், 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உய ரம் பாய்தல், 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றி பாய்தல், 15, 17, 19, 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 100 மீற்றர் சட்டவேலி, 15, 17, 19, 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான சட்டவேலி, 17, 19 ,21 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான 1500 மீற்றர் ஓட்டம், 19 வயதுக்குட்பட்ட ஆண் களுக்கான 4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டம், 21 வயதிற்குட்பட்ட இருபாலாருக்கு மான 4 நபர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டம், 17 வயதுக்குட்பட்ட பெண்களுக் கான நீளம் பாய்தல், 15, 17, 19, 21 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான 100 மீற்றர் தெரிவுப் போட்டிகள் என்பனவும் நடைபெறவுள்ளன. (ம-422)

# கபடி உலகக்கிண்ணம் இன்றைய மோதல்கள்

கபடி உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவின் அகமதாபாத்தில் நடைபெற்று வருகிறது. இன்று மூன்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் தென்கொரியாவை எதிர்த்து ஆஸ்திரேலியாவும், இரவு 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் ஈரானை எதிர்த்து ஜப்பானும், இரவு 9 மணிக்கு இடம்பெறும் மூன்றாவது ஆட்டத்தில் இந்தியாவை எதிர்த்து ஆர்ஜென்ரினாவும் மோதவுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிப் பதக்கத்தை வென்றது அருணோதயா



யாழ்ப்பாணம், ஒக். 15
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கோலூன்றிப் பாய்தலில் நேற்று நடைபெற்ற 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் அருணோதயக் கல்லூரிக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. 21 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த நிதுசன் 3.70 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

(ம-422)

# மகாஜனாவுக்கு தங்கப்பதக்கம் வென்று கொடுத்தார் ஹெரீனா

## ஏனைய பதக்கங்களும் வடக்கிடம்

யாழ்ப்பாணம், ஒக். 15
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் அத்தனை பதக்கங்களையும் வழித்துத் துடைத்தது வடமாகாணம்.

கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தல் நேற்று நடைபெற்றது. மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த சந்திரகுமார் ஹெரீனா 2.70 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த திவ்யா, சாவகச்சேரி இந்துக் கல்லூரியை சேர்ந்த சங்கவி இருவரும் 2.60 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கங்களைக் கைப்பற்றினர்.

(ம-422-108)



ஹெரினா



சங்கவி



திவ்யா



# கிளிநொச்சி பிறீமியர் லீக் இன்று கோலாகல ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 15
கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் கிளிநொச்சி பிறீமியர் லீக் தொடரின் ஆட்டங்கள் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.

இதன்படி இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மகாதீபம் அணியை எதிர்த்து இந்து இளைஞர் அணியும், பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தர்மபுரம் இளந்தாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி யுனைற்ரெட் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.

(ம-23-35)

**நேர்முகத்தேர்வு**
**(அலுவலக வேலை வாய்ப்பு)**
வவுனியாவில் இயங்கும் கூரியர்(Courier) நிறுவனத்துக்கு Branch Excutive (ஆண்) இற்கான நேர்முகத்தேர்வு
**காலம்: 16.10.2016 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம்: மு.ப 11.00 மணி-பி.ப 1.00 மணி வரை**
**இடம்: கிளை அலுவலகம்**
(இல.25, கந்தசாமி கோயில் வீதி,வவுனியா)
**077 0277365, 077 1130805**

**பணியாளர்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் பிரபல மின்சாதனப் பொருள்களை விற்பனை செய்யும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
**1.எழுதுநர்**-(பெண்கள்) (அனுபவம் உள்ளவர்கள் மேலதிக தகைமையாக ஏற்றுக்கொள்ளப்படும்)
மேற்படி தகைமையுடைய பெண்கள் எதிர்வரும் 17/10/2016 திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுய விவரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.
Jaffna Electricals.
No.94 (06) Stanley Road.
Jaffna.
T.P: 021 2222353
fax: 021 2224302

**EDISSAN ACADEMY**
29th Anniversary Prize Day
Date
16.10.2016 Sunday 8.15 a.m
Venue
Raja Cream House Hall
Chief Guest
Mr. Sivagnanam Shritharan
Honorable Member of Parliament - Jaffna District
(Parent of Edissan Academy)

# கரப்பந்தாட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 15
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தத்திட்டமிட்ட யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டம் நாளையும் நாளை மறுதினமும் குறித்த கழகத்தின் மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் போட்டி ஆரம்பமாகும் நேரத்துக்கு வருகை தருவதன் மூலம் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.


(ம-422)

# அஸ்வினைப் பின்தள்ள ஜாசீர் ஷாவுக்கு வாய்ப்பு

மிகக்குறைந்த டெஸ்ட் ஆட்டங்களில் 100 இலக்குகளை வீழ்த்திய ஆசியப் பந்துவீச்சாளர் என்ற சாதனையைப் படைக்க பாகிஸ்தான் சுழல் வீரர் ஜாசிர் ஷாவுக்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

அஸ்வின் தனது 18ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் 100ஆவது இலக்கை எட்டினார். இதன் மூலம் மிக விரைவாக 100 இலக்குகளை எட்டிய ஆசியப் பந்துவீச்சாளர் என்ற சாதனையை அவர் தன்வசம் வைத்துள்ளார். இந்தச் சாதனையைத் தகர்க்க ஜாசீருக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராகப் பாகிஸ்தான் விளையாடிவரும் டெஸ்ட் ஆட்டம் ஜாசீரின் 17ஆவது ஆட்டமாகும். தற்போது 95 இலக்குகளுடன் உள்ள ஜாசீர் இந்த ஆட்டத்தில் இன்னும் 5 இலக்குகளை வீழ்த்தினால் மிக விரைவாக 100 இலக்குகளை எட்டிய ஆசியப் பந்துவீச்சாளர் என்ற சாதனையை அவர் தனது பெயரில் எழுதலாம்.

(ம)



**Study in Australia**
Admission open for 2016/2017 Intake
❖ **After** G.C.E. O/L **or** G.C.E A/L **or** Degree
❖ **Foundation / Diploma / Bachelors / Masters**
படிக்க ஓர் அரிய வாய்ப்பு!
❖ **July 1st** இருந்து இலகு **Visa** நடைமுறைகள்
❖ குறைந்த பாடநெறிக் கட்டணங்கள்
❖ **Spouse can travel together**
❖ பகுதி நேர வேலை வாய்ப்புகள் (20 Hours per week)
ics Foreign Education Services
Admission Help line
077 3013060
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road,Colombo - 06

# இறுதிக்குத் தகுதியானார் மேரி ஜென்சி

யாழ்ப்பாணம், ஒக். 15
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டத் தடகளத் தொடரில் இன்று நடைபெறவுள்ள 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 1500 மீற்றர் ஓட்டத்தில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார் மேரி ஜென்சி.

கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. 1500 மீற்றர் தெரிவுப் போட்டிகள் நேற்று நடைபெற்றன. மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த மேரி ஜென்சி 5.04 நிமிடத்தில் ஓடி முடித்து இன்று நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

(ம-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.